# உதயன்

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 312 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 18, சனி 04.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


04 OCT 2014

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



ஆசிய விளையாட்டில் தங்கம் இலங்கைக்கு

பக்கம் 18



படங்கள் 1, 2 -ஆணைக்குழுவிடம் சாட்சியம் வழங்குவோரைப் புகைப்படம் எடுக்கும் இனந்தெரியாதோர். படம் 3 - பூநகரி பிரதேச செயல க வளாகத்தை சூழ்ந்திருந்த இராணுவத்தினரில் ஒரு சிலர், படம் 4 - இராணுவத்தினருடன் உரையாடுகின்றார் ஆணைக்குழுவின் ஆராய்ச்சி அதிகாரி ஜானக முதலிகே.

## பூநகரி அமர்வில் இராணுவத் தலையீடா? அடியோடு மறுக்கின்றது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஒக். 04
பூநகரியில்நடைபெற்றுமுடிந்த அமர்வில் இராணுவத்தினர் தலையீடு செய்தனர் என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாக குறிப்பிட்ட, காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, பொது மக்களை சாட்சியமளிக்குமாறே இராணுவத்தினர் ஊக்குவித்தனர் என்று தெரிவித்துள்ளது.
காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவால், நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் பூநகரியில் இடம்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு அமர்வில் இராணுவப் பிரசன்னம்

### கவலை வெளியிடுகின்றது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

கொழும்பு, ஒக். 04
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் கடந்த அமர்வில் இராணுவத்தினர் மற்றும் இராணு

22 ஆம் பக்கம் பார்க்க

## மொழிபெயர்ப்புகளில் பெருமளவு தவறுகள்

கொழும்பு, ஒக். 04
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையைப் பல வீனப்படுத்தும் அளவுக்கு, மொழி பெயர்ப்பில் பெரும் தவறுகள் காணப்பட்டன என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த வாரம் கிளிநொச்சியில் இடம்பெற்றிருந்தது. இந்த அமர்வு தொடர்பில் தனது அவதானத்தை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஊடக

19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கை ஏன் ஒழிக்க முடியவில்லை?



டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் தீவிரமற்ற முறையில் முன்னெடுக்.....

பக்கம் 14

# இலங்கை தொடர்பில் இப்போதும் அமெ. இறுக்கமாகவே உள்ளது

### கொள்கைகளை மாற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை என்கின்றது வெள்ளை மாளிகை

கொழும்பு, ஒக்ரோபர் 04
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுவதைப் போன்று இலங்கைதொடர்பான கொள்கை நெகிழ்ச்சியடையவில்லைஎன்று குறிப்பிட்டுள்ள அமெரிக்க அரசு, இலங்கை தொடர்பான எமது கொள்கையை மாற்றுவதற்கு ஜனாதிபதி மஹிந்த முயற்சி செய்தார். ஆயினும் எமது கொள்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நாவின் 69 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது அவர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹெரியுடன் பேச்சு நடத்தியிருந்தார். இந்தப் பேச்சின்போது இலங்கை தொடர்பான அமெரிக்காவின் கொள்கையில் நெகிழ்வான போக்குத் தென்பட்டது. அதைத் தன்னால் உணர முடிந்தது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சில தினங்களுக்கு முன்னர் அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.
இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஜென் சகியிடம்

22 ஆம் பக்கம் பார்க்க



## ஆசிரியர், அதிபர் பதவியுயர்வுகள் வருட இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஒக்.4
பல வருடங்களாக வழங்கப்படாதுள்ள ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கான பதவியுயர்வுகள் இந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழா ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
விசேட நடமாடும் சேவையூடாக சுமார் 2 லட்சத்து 17 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.
அது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்.
"இவ்வாறு வாய் மூலமாகக் கூறுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனைச் சுற்றறிக்கையாக வெளியிட வேண்

22 ஆம் பக்கம் பார்க்க

## பாப்பரசர்-மஹிந்த நேற்று சந்தித்தனர்



கொழும்பு, ஒக்.4
வத்திக்கானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் மற்றும் வத்திக்கான் இராஜங்க செயலாளர் கார்டினல் பீற்றோ பரோலின் ஆகியோருடன் இலங்கை விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினார் என்று வத்திக்கான் வானொலி தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பிலுள்ள அனைவரையும் சமமானவர்களாகவே கணிக்கிறேன்

### வன்முறை போக்கு கொண்ட கட்சிகளை பின்பற்ற மாட்டேன் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஒக். 04
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள சகல கட்சிகளையும் - சகலரையும் - சமனானவர்களாகவே கணிக்கின்றேன். எந்தவொரு வேறுபாட்டையோ, வெறுப்பையோ எவர் மீதும் நான் காட்டவில்லை. ஆனால் வன்முறைப் போக்கைக் கொண்ட கட்சிகளைப்பின்பற்றுபவராக நான் இருக்க வேண்டும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கக் கூடாது. - இவ்வாறு

22 ஆம் பக்கம் பார்க்க


வரையுங்கள் கார்ட்டூன்



வரைந்ததை அனுப்பி வையுங்கள்
தரம் கண்டு பிரசுரிப்போம்

வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## காந்திக்கு சுபாஸை பிடித்தது போல எனக்கும் பிரபாகரனைப் பிடிக்கும்

### இப்படி விளக்குகின்றார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்புாணம், ஒக். 04
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை எனக்குப் பிடிக்கும். அதற்காக அவரின் கொள்கையையும் - பார்வையையும் நான் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று அர்த்தமல்ல - என்ற சாரப்பட விளக்கமளித்தார் வடக்கு முதல

19 ஆம் பக்கம் பார்க்க

# மஹிந்த போட்டியிட முடியாதென சத்தமிடுவதில் பயனேதுமில்லை

## விக்கிரமபாகு கருணாரத்ன கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.4

18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்துக்கு அமைய அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ் போட்டியிட முடியாது என்று கூறுகின்றனர். எனினும் சத்தமிட்டு எந்த பிரயோசனமும் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் நவசம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண.

அரசியல் அமைப்பு தொடர்பான விளக்கத்தை உயர் நீதிமன்றத்தில் பெறவேண்டும். அங்கிருப்பவர்கள் மஹிந்த ராஜபக்ஷவினருக்கு ஆதரவானவர்கள். அவர்கள் போட்டியிட முடியும் என்று கூறுவார்கள்.- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"சத்தமிட்டு பிரயோசனமில்லை. சட்டம் அரசாளவில்லை. சட்டத்தைஅடக்கி ஆளும்முறையே தற்போது இருக்கின்றது. ஊவா மாகாணத்தில் இன்னும் வன்முறைகள் நடக்கின்றன. சாம்பலில்இருந்து நெருப்பு கிளம்புவது போல் இந்த வன்முறை நடந்து வருகிறது. அடுத்த தேர்தலில் மொனராகலை வடிவத்தில் வெற்றி பெறவே அரசு எண்ணுகிறது. அடுத்த தேர்தலில் சிங்கள பௌத்த வாக்குகள் அதிகம் இருக்கும் பிரதேசங்களுக்கு மொனராகலை வடிவமும், தமிழ், முஸ்லிம் அதிகம் இருக்கும் பிரதேசங்களுக்கு பதுளை வடிவத்திலும் வெற்றி பெறும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இந்துவின் மைந்தர்களின் கல்விக்கான செயற்திட்டம்

## நேற்று முல்லைத்தீவில் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2005 ஆம் ஆண்டு. பழைய மாணவர்களால் நேற்று முல்லைத்தீவில் கல்விக்கான செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் மாணவர்களுக்கு சைக்கிள்கள், ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான வினாத்தாள் தொகுப்புகள், புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு வலைஞர் மடம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு 4 சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அவற்றை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஞா. ஆதவன் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் இணைந்து மாணவர்களிடம்கையளித்தனர். அம்பலவன் பொக்கணை மகா வித்தியால ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு வினாத்தாள்கள் அடங்கிய புத்தகங்களும், கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கும், கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கும் புத்தகங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் குரவில் தமிழ் வித்தியாலயம், தேவிபுரம் அ.த.க. பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர் தர வித்தியாலயம் ஆகியவற்றில் ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு வினாத்தாள் தொகுப்புகளும் யாழ். இந்துவின் மைந்தர்களால் வழங்கப்பட்டன. (ற)

### விபத்து

கட்டுகஸ்தோட்டை

## ஆற்றுக்குள் வான் கவிழ்ந்து மூவர் சாவு

கட்டுகஸ்தோட்டை பகுதியில் உள்ள ஆறு ஒன்றில் வான் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. உயிரிழந்த மூவரில் இரண்டு ஆண்களும் ஒருபெண்ணும்அடங்குகின்றனர். இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். சாரதி தூக்கத்தில் வானைச் செலுத்தியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# ரணில் மற்றும் சோபித தேரரை ஒருபோதும் நம்பவே முடியாது

## ஜே.வி.பி. உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ரத்துச் செய்வதாக வழங்கும் உறுதி மொழிகளை எந்த வகையிலும் நம்ப முடியாது என்று தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த.

இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் 12ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"நிறைவேற்று அதிகாரத்தை கையில் எடுத்த பின்னர், அதனை ரத்துச் செய்வதாக கூறிய எவரும் அதனை செய்யவில்லை. அதனை ரத்துச் செய்வதாக கூறும் எவர் மீதும் எமக்கு நம்பிக்கையில்லை. ரணில் தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறுகின்றார். அவர் நிறைவேற்று அதிகாரத்தை ரத்துச் செய்யப் போகிறாரா இல்லையா என்பது எமக்கு தெரியாது.

சோபித தேரரும் அதனை செய்வாரா என்பது எமக்கு தெரியாது. அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு பௌத்த பிக்கு என்றாலும் நம்பிக்கையில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் அவசியம். அப்படியான அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தை மக்கள் நாட்டில் ஸ்தாபிக்க வேண்டும்.

அப்போது ஜனாதிபதி விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்நிறைவேற்று அதிகாரத்தை ரத்துச் செய்ய முடியும்"- என்று தெரிவித்தார். (ற)

# கஞ்சா விற்ற பிக்குவுக்கு மறியல்

கொழும்பு, ஒக்.4

கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பிக்கு ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மேல் நீதிமன்றில் பிக்குவுக்கு எதிராக நேற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையில் பிக்குவை பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் தம்மிக்க கனேபெரல உத்தரவிட்டார். ஆனாலும் பிணை வழங்கவென விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பிக்கு ஏற்றுக் கொள்ளாததால் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற)



உதயன் குழுமத்தில் விஜயதசமி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.
யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவிகளின் இசை நிகழ்வும், யாழ்.இந்துவின் பழைய மாணவனின் சொற்பொழிவும், உதயன் ஊழியர்களின் பட்டிமன்ற நிகழ்வும் இடம் பெற்றது. இதில் உதயன் குழும ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 18 சனி (04.10.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 312

# ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் இலங்கை நிலைமை குறித்து ஆய்வு

## அடுத்த வாரத்தில் நடைபெறும்

கொழும்பு, ஒக்ரோபர் 4

**இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் குழுவில், ஐந்தாவது தடவையாக, எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் ஆராயப்படவிருக்கின்றது.**

**சர்வதேச சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பான பட்டயத்தில் கையெழுத்திட்ட நாடு என்ற முறையில் சர்வதேச, சுயாதீன நிபுணர்கள் 18 பேரைக் கொண்ட குழுவின் ஆய்வுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை இலங்கையும் உள்ளாக வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.**

மேற்படி பட்டயத்தில் ஒப்பமிட்ட 168 நாடுகளுள் இலங்கையும் ஒன்று. அந்தப் பட்டயக் கடப்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைகளை நிலைநிறுத்துகின்றமை தொடர்பான தனது பொறுப்பை நடைமுறைப் படுத்தும் விதத்தில் தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தனது அறிக்கையை இலங்கை மேற்படி குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அரச சார்பற்ற பல அமைப்புக்களும் இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகத் தமது அவதானிப்பு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளன.

இந்நிலையில் மேற்படி அறிக்கைகளை ஆராய்வதோடு, இலங்கையில் மனித உரிமைகளைப் பேணி, நிலைநிறுத்தி, மேம்படுத்துவது குறித்து இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுடன், மேற்படி குழுவினர் தொடர்பாடலிலும் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் நடைபெறும் இலங்கை நிலைமை பற்றிய ஆராய்வு நடவடிக்கைகள் இணையத்தளம் மூலம் உடனடியாக ஒளிபரப்பாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-சி)

## சுகாதார விதிமுறைக்கமைய காக்கைதீவில் கழிவு சேகரிப்பு

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு நடவடிக்கை

வலி.தென்மேற்கு, ஒக்.4

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கல்லுண்டாய் பகுதியை அண்டியுள்ள காக்கைதீவுப் பகுதியில் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவாறு சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப பல மில்லியன் ரூபா செலவில் கழிவுகள் சேகரிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு, மூன்று உள்ளூராட்சி மன்றங்களின் இணக்கப்பாட்டுடன் பல தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

இதனால் வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு மாதாந்தம் பெரும் தொகையான பணம் வருமானமாகக் கிடைக்கவுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள காக்கைதீவு பகுதியில் பல வருடங்களாக உள்ளூராட்சிச் சபைகளினால் தினசரி தொடர்ந்து கொட்டப்பட்டு வரும் மலக் கழிவுகளாலும் திண்மக் கழிவுகளாலும் அந்தப் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வாழ்ந்து வரும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கும் வயல் நிலங்களுக்கும் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மலை போல் குவிக்கப்படும் திண்மக் கழிவுகள் தீ இட்டு எரிக்கப்படுவதினால் ஏற்படும் புகை மண்டலத்தினாலும் திண்மக் கழவுகளிலிருந்து

(22ஆம் பக்கம் பார்க்க)

## அடித்துத் துன்புறுத்தினார்கள் இலங்கைக் கடற்படையினர்

மண்டபம் திரும்பிய இந்திய மீனவர் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஒக்.4

தலைமன்னாரில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 36 பேரும் நேற்று மண்டபத்தைச் சென்றடைந்துள்ளனர்.

கரை திரும்பியுள்ள மீனவர்கள் இலங்கைக் கடற்படையினர் தம்மை அடித்து துன்புறுத்தியதாகவும், சிறையில் அடிப்படை வசதியின்றிப் பழைய உணவை உண்பதற்குத் தந்ததாகவும் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க வந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைவாக கடந்த முதலாம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். விடுவிக்கப்பட்ட 36 மீனவர்களும் இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கப்பல் மூலமாக நேற்று

(22ஆம் பக்கம் பார்க்க)

## உணர்வுபூர்வ அரசியல் கருத்துக்களை தடுப்பதற்காகவே ஊடக அடக்குமுறைகள்

கபே அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, ஒக்.4

இணையம் வாயிலாக உணர்ச்சிபூர்வமான தகவல்கள் இளைஞர்களுக்கிடையில் பரிமாறப்படுவதைத் தடுப்பதன் நோக்கமாகவே இணைய ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகிறன. அடுத்த வருடம் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அதற்கு எதிரான கருத்துக்கள் பரிமாறப்படுவதைத் தடுக்கவுமே அவ்வாறு அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றன என்று கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில்கபே அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2015ஆம் ஆண்டில்ஜனாதிபதிப் பிரதிநிதித்துவத்துக்காகப் பெரும் நோக்கில் முன்னெடுக்கப்படும் ஊடகங்களின் அடக்குமுறை தொடர்பான விடயத்தைக் கபே அமைப்பு மீண்டும் ஆரம்பிக்கவிருக்கிறது. நீர்கொழும்பில் கடந்த 28 ஆம் திகதி நடைபெறவிருந்து பின்னர் தடுக்கப்பட்ட இணையப்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்று திடீர் மின் தடை

வடமராட்சி, ஒக்.4

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அம்பன் குடத்தனை மற்றும் பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள கற்கோவளம் ஆகிய பகுதிகளில் நேற்று (வெள்ளிக்கிழமை) மின்சாரம் தடைப் பட்டதால் பாடசாலைகளில் விஜய தசமி நிகழ்வுகள் பாதிக் கப்பட்டன.

பாடசாலைகளில் இடம் பெறும் விஜயதசமி நிகழ்வுகளில் மாணவர்களின் கலை, கலாசார செயற்பாடுகளும் இடம்பெற ஏற்பாடாகி இருந்தன.

(22ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் வீடு புகுந்து நகை, பொருள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.4

நல்லூர்ப் பகுதியில் 4 பவுண் தங்க நகைகள், மடிக் கணினி மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

சிறுவனைப் பயன்படுத்தி இந்தத் திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் மணல்தறைப் பகுதியில் உள்ள வீட்டில் நேற்று நள்ளிரவு இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

வீட்டில் அனைவரும் நித்திரையிலிருந்தவேளை வீட்டு ஜன்னலைப் பிரித்து ஜன்னல் கம்பியை வளைத்து அதனூடாக உள்ளே சென்று திருட்டு இடம்பெற்றுள்ளது. அந்தக் கம்பி இடைவெளியை நோக்கும்போது அதனூடாக சிறுவர் அல்லது மிகச்சிறிய ஒருவரே உள்ளே சென்று பொருள்களைத் திருடியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

வீட்டு அறையினுள் இருந்த அலுமாரியை உடைத்துத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு தடவைகள் இருந்துவிட்டேன் இனி இல்லையெனில் பரவாயில்லை

சுதந்திரக் கட்சி மத்திய செயற் குழு கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார்

கொழும்பு, ஒக். 4

நான்இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்துள்ளேன் தானே. இனியென்ன நான் போட்டியிடாவிட்டாலும் பரவாயில்லை தானே என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி இரவு இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வைத்தே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு தெரிவித்திருந்த சந்தர்ப்பத்தில் மத்திய செயற்குழுவின் உறுப்பினரொருவர், 'சேர் நீங்கள் நிற்காவிட்டால் நான் போட்டியிடுவேன்' எனத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பு முடிவுறும் தறுவாயில் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்கெல ஊடகவியலாளர்க

(22ஆம் பக்கம் பார்க்க)

## புதிய கிராம அலுவலர்களுக்கு 8 ஆம் திகதி நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர்களுக்கான நிரந்தர நியமனம் எதிர்வரும் 8 ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டிருந்த கிராம சேவையாளர்களுக்கு 3 மாதப் பயிற்சிகள் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டன. அவர்களுடன் ஏனைய 33 கிராம சேவையாளர்களுக்கும் இந்த நியமனக் கடிதங்கள் 8 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

குறித்த 33 கிராம சேவையாளர்களுக்குப் பயிற்சிநெறிக்கான ஆரம்ப கலந்துரையாடல் நியமனக் கடிதங்கள் வழங்கிய பின்னர் நடைபெறுமென்று அரச அதிபர் கூறினார். (த-106)

## பொது இடங்களில் முதியோர் அவமதிப்பு

மனித உரிமை குழுவில் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஒக். 4

பொதுத் தேவைகளை நிறைவேற்றும் இடங்களில் முதியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும். பொது இடங்களில் தம்மைப் புறக்கணிப்பது தொடர்பான முறைப்பாடுகளை முதியவர்கள் தேடி வந்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

முதியோர் தினத்தை முன்னிட்டுக் கைதடி முதியோர் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் பஸ்கள் போன்றவற்றில் முதியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா. அரசால் முதியோர் அட்டை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு அவர்கள் தங்கள் தேவைகளைச் சிரமமின்றிப் பெற்றுக் கொள்ளமுடிகிறதா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

பொலிஸ் நிலையங்களில் நாள் முழுவதும் காக்க வைக்கப்படுவதாகவும், பஸ்களில் தம்மை ஏற்றுவதற்குத் தயங்குவதாகவும் முதியவர்கள் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர். முதியவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.09.2014 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் **கதிரவேலு கேதீஸ்வரன்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (02.10.2014) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (04.10.2014) சனிக்கிழமை முற்பகல்11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **கந்தசாமி நிமலநாதன்**



தோற்றம்
05.07.1968

மறைவு
21.08.2014

கடந்த (21.08.2014) வியாழக்கிழமை இறைபாதம் அடைந்த எமது மகன் அமரர் கந்தசாமி நிமலநாதன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (04.10.2014) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(52821) (7.6.3)

## மரண அறிவித்தல்

திருமதி **பவளம் துரைராசா**



யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் துரைராசா 02.10.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னம்மா தம்பதியரின் மருமகளும், துரைராசாவின் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், பூபாலசிங்கத்தின் சகோதரியும், லிகிர்தா (ஓய்வூதிய உத்தியோகத்தர், பிரதேச செயலகம் உடுவில்), மாலினி (லண்டன்), பகீரதன் (கனடா), சசிகரன், றஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகதாசன், செந்தில்நாதன், கல்யாணி, கோபிராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியும், திஷாநுஜன், சைநுஜன், சுபகன், சுமணன், கஜாணி, சபீணா, விசாகன், ஜிந்துஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி16745)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, ஒக்.4

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

நூலகத்தில் நடைபெற்றுவரும் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதால் அனைவரும் கலந்து கொண்டு நூலக வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

## சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம்



வவுனியா குருமன்காட்டைச் சேர்ந்த தியாகராசா கோபிநாத் சமாதான நீதிவானாக வவுனியா மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக் கமலன் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் வவுனியா சுகாதார திணைக்களத்தில் பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராகவும் பிறைட் கல்வி நிலைய இயக்குனராகவும் கடமையாற்றுகின்றார். இவர் வவுனியாவில் பல்வேறு சுகாதார மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டவராவார். (வ-421)

◆◆◆

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளியவளையைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினரும், திடீர் இறப்பு விசாரணை அதிகாரியும், முல்லை மாவட்ட திடீர் இறப்பு விசாரணையாளர் சங்கத் தலைவருமான கிருஸ்ணபிள்ளை தியாகராசா அகில இலங்கை சமாதான நீதிவானாக நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (வ-433)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த சனிக்கிழமை வெளியாகின. இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாணவர்களின் பெறுபேறுகள் வருமாறு:-

**புற்றளை மகா வித்தியாலயம்**

வே.சுவேதா-183, ப.லக்ஷன்-178, ப.பானுஷன்-174, பி.அபினயா-172, ந.சுமித்திரா-171, க.கம்சிகா-166, ப.துளசிகா- 162, ஜ.கணநாதன் - 161.

**சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலை**

க.கஜவண்ணன் -177, க.கஜவதனன்- 177, சு.மிதிலா -172, சி.கஜேந்தினி- 166, ர.கிருஷாந்தன் -165. (வ-36)

**சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

கு.லக்ஸாயனா- 166, ச.டினிஸ்காந் - 161, வி.கஸ்தூரி- 161, ஸ்ரீ.விந்தியா- 159.

**முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை**

எம்.டினுஷாந் -174, எஸ்.டிலானி-174, வி.வோல்ரன் - 168, எஸ்.லியோட்ஸ்- 161, எஸ்.சுஜீவன்- 161.

**வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்**

சு.மேனுஜன் -182, ம.கனுசன் -182, பா.அபிநயா-177, ச.சங்கீதன்-176, கெ.பதுமிகா-176, ரீ.கபீசன் -176, ஈ.குஜந்தினி- 176, சி.சாரங்கா -170, ஜெ.தரணிகா -169, உ.சஸ்மினி -169, கோ.சஜீபா -168, அ.டிலக்சினி -168, த.சர்மிளன்- 168, ஜெ.ஜிலைகஷன் -166, ஆ.லிந்துஜன்- 165, சி.பிரியவீகன் -164, எ.லதுர்ஜன் -164, ரீ.டர்சிகன் -163, கி.டிலைக்சனா -161, கோ.தனுஸ்ரன் -158. (வ-421)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **தம்பித்துரை சபாரத்தினம்**

(இளைப்பாறிய மதுவரி உத்தியோகத்தர்)



அன்னை மடியில்
30.12.1953

ஆண்டவன் அடியில்
18.09.2010

நான்கு ஆண்டுகள் ஓடியே வந்ததையா
ஒரு நாளும் உனை மறவா உள்ளங்கள்
ஏங்கி இங்கு தவிக்குதையா
ஆத்மசாந்தி வேண்டி ஆண்டவனைத்
தொழுகின்றோம்.

குடும்பத்தினர்.
குடாரப்பு, நாகர்கோயில்.

(52804)

## நினைவலைகள்

6ஆம் ஆண்டு



தோற்றம் 09.06.1948
மறைவு 11.10.2008

அமரர் **நடராசா அற்புதானந்தராஜா**

திதி : வளர்பிறை ஏகாதசி

5 1/2ஆம் ஆண்டு



தோற்றம் 16.05.1954
மறைவு 10.04.2009

திருமதி **சோதிராணி சதானந்தராஜ்**

திதி : துதியை

அன்பிற்கிலக்கணமாய் பாசத்தினுறைவிடமாய்
பண்புடன் எமையெல்லாம் நேர்வழியில் நடத்தி
இன்முகம் காட்டி உற்றாரை யணைத்து
அவனிதனில் நிறைவான வாழ்வுதனை வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட தாங்கள் - நிறைவான
நினைவுகள் எமைவிட் டென்றுமே அகலா!

தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கற்பகப் பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

(52822) (7.6.3)

# டெங்கு கட்டுப்பாட்டு செயல்முறை ஒக்.9,10 இல் நடைமுறைக்கு

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

யாழ்ப்பாணம், ஒக்.4

டெங்கு கட்டுப்பாட்டுச் செயல் முறையின் கீழ் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் அதற்கான நடைமுறைகள் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மேற்கொள்வதென நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற நல்லூர் பிரதேச டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புதன்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஜே/110,ஜே/112, ஜே/113, ஜே/114, ஜே/123கிராம அலுவலர் பிரிவுகள் டெங்கு பரவக்கூடிய இடங்களாக இனம் காணப்பட்டுள்ளதை அடுத்து குறிப்பிட்ட பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

எதிர்வரும் 9ஆ திகதி ஜே/110, ஜே/112 , கிராம அலுவலர் பிரிவிலும் 10ஆம் திகதி ஜே/114, ஜே/123ஆம் கிராம அலுவலர் பிரிவிலும் நல்லூர் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர், உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பொது மக்களைச் சந்தித்தும் டெங்கு பரவக் கூடிய இடங்களை நேரடியாக பார்வையிட்டும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். அன்றைய தினம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளதாகவும் பிரதேச செயலர் தெரிவித்தார். (வ-7)

## சடலத்தை பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதி இல.8இல் மந்துவில் கிழக்கு கொடிகாமம் என்ற முகவரியைச் சேர்ந்த 65 வயதுடைய பாலன் முருகன் என்பவர் கடந்த 24 ஆம் திகதி காலை 11.49 மணியளவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் கடந்த 25 ஆம் திகதி காலை 8.45 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலத்தை இதுவரை யாரும் உரிமை கோராத படியால் சடலம் மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே அவரது சடலத்தை உறவினர் வந்து அடையாளம்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## பண்பாட்டு மலருக்கான ஆக்கங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஒக்.4

சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவை, பண்பாட்டு மலர் ஒன்றை ஐப்பசி மாத இறுதிப் பகுதியில் வெளியிடத் தீர்மானித்துள்ளது. இதில் பிரசுரிப்பதற்குரிய ஆக்கங்களை கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக வழங்கி உதவுமாறு வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கலாசார பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதேச கல்விப் பாரம்பரியம், கலை பண்பாட்டு வரலாற்றுச் சுருக்கம், சமயம் சார்ந்த தொன்மையும் அவை சார்ந்த அடையாளங்களும், வரலாற்று முக்கியதுவமான பண்பாட்டு அம்சங்கள், சுதேச மருத்துவம், சோதிடம், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வட்டார சொற்கள், பழ மொழிகள், விடுகதைகள், பிரதேசத்தின் பெருமைக்குரிய அறிஞர்களின் வரலாற்றுச் சுருக்கம், கூட்டுறவுத்துறை வளர்ச்சிப் போக்கும் வணிகமும், பிரதேச பாரம்பரிய கைத்தொழில் வளர்ச்சியும் அதன் சிறப்புத் தேர்ச்சியும், ஊர் பெயர் விளக்கச் சுருக்கம், பாரம்பரிய விளையாட்டுக்களும் சாதனையாளர்களின் விவரமும், பிரதேசம் சார்ந்து வெளிவந்த கலை இலக்கிய சஞ்சிகைகள், பத்திரிகைக்ள் ஆகிய விடயங்களை உள் ளடக்கி ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேசம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அத்துடன் குறித்த பிரதேசத்தை பிறப்பிடமாக அல்லது வசிப்பிடமாக கொண்டவர்களது ஆக்கங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஆக்கங்களை எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பி வைக்க வேண்டும். (வ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்./புனித ஜோன்பொஸ்கோ பாடசாலையில் 2014 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். சுண்டுக்குளி விதானையார் வீதியைச் சேர்ந்த சிவகாந்தன்- சுலோசனா தம்பதியரின் செல்வப்புதல்வன்

**பானுஷியன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இறைவனின் ஆசியுடன் மேன்மேலும் சித்திகளைப் பெற்று கல்வியில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
(52826)(3.6.4) தாத்தா, அம்மம்மா, மாமாமார்.

**கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்**



வருகின்ற தீபாவளியை முன்னிட்டு ஜெயசாயி இல் கொள்வனவு செய்யப்படும் அனைத்து விதமான ஆடைகள், பான்சிப் பொருள்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையில் இருந்து அரைவாசி விலைக்கு பெற்றுக்கொள்வதுடன் 3, 4, 5 ஆகிய திகதிகளில் 3000/= ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களும் பரிசு பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(52808)(7.6)

## விவசாயக் கூட்டம்

அச்சுவேலி, ஒக்.4

ஆவரங்கால் மேற்கு விவ சாயிகள் சம்மேளன பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விவேகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் வெ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கூட்டத்தில் கமநல அபிவிருத்தி அலுவலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (வ-11)

## மாணவனை தீண்டியது பாம்பு

தென்மராட்சி,ஒக்.4

ரியூசனுக்கு சென்ற 12 வயது பாடசாலை மாணவன் விஷப் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மாலை கெற்பேலியில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சாந்தரூபன் சதீஸ்வரன் (வயது-12) என்ற மாணவன் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

**காணி விற்பனைக்கு**

பலாலி றோட், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் 1-1½ பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உள்ளது.
No Brokers (52795) (7.6.3)
தொடர்பு: 076 524 9811, 076 670 3897

**நாய்க் குட்டி விற்பனைக்கு**

Belgium Shepert நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (German Shepert)
(52813) (45.3.6) தொடர்பு: 077 883 0294

**பதவி வெற்றிடம்**

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் சந்தைப் படுத்தல் துறைக்கு(Marketing) பெண் உத்தியோகத்தர்கள் தேவை. வயது 18-30
(52800) (45.6.3) தொடர்பு: 077 727 7281

**வீடு வாடகைக்குண்டு**

கொழும்பு, கொட்டாஞ்சேனை குணானந்த மாவத்தையில் 2 அறைகள், ஹோல், விசாலமான சமையலறையுடன் சிறிய வீடு வாடகைக்குண்டு. சைவபோசனமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்
(32817) (45.6.3) தொடர்பு: 071 022 4841

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

* புறொயிலர் கோழி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்
* 45 நாள் நிரம்பிய செப்பெட் நாய்க் குட்டிகள், 3வருடம் நிரம்பிய பொக்சர் ஆண் நாய் என்பன விற்பனைக்கு உள்ளன.

தொடர்பு: ரூபன் பாம்
இல.6, கடுக்காயடி வீதி, நல்லூர், (செம்மணி றோட்)
(52794) (45.6.3)

**பதவி வெற்றிடம்**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **Virus Printers** அச்சகத்தில் **KORA machine minder** தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்

T.P. 077 657 0315
077 592 5096
(52819) (45.3.6)

**கடை வாடகைக்கு**

அச்சுவேலி, டச்சு றோட் முஸ்லிம் ஹோட்டல் அருகில் (பஸ்நிலையம் முன்பாக) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 615 8066/076 687 9640

**Happy 38th Birthday Wishes**
**04.10.2014**



**Suyatha Nadarajah**

Late International
Married Service Chief Clerk

Today birthday 38 years
happy birthday to you
Suyatha
wish you happy birthday
and
God bless you

HAPPY BIRTHDAY

* தனியொரு நிர்வாகத்தை செய்து முடிக்கும் திறமை.
* தனது காரியாலயத்தில் கடமை நேரத்தில் வருவோர்களின் தேவைகளை அன்புடன் பழகி புன்சிரிப்புடன் தெளிவாக செய்து கொடுத்து அன்புடன் வழி அனுப்பும் ஆயிரத்தில் ஒருத்தி.
* பொறுமைசாலி, திறமைசாலி, செயல்திறன், ஆளுமை கொண்டவள். 16 செல்வங்களும் பெற்று நலத்துடன் வாழ வேண்டும்.
* மக்களுக்கு சேவையாற்றி நோய்நொடி இல்லாமல் பல்லாண்டு வாழ்ந்து. பல உயர்வுகள் பெற்று, எமது நாட்டுக்கு பணிபுரிய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
* தனது கடமையைப் பாராது எமது பிறந்தநாளுக்கு அனுப்பிய அழைப்பை ஏற்று வீடு வந்து, சிறப்பாக நடத்தியதற்கு நன்றி கூறி மிகவும் பெருமையுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க.
* தனது கடமையை ஒரு நூலாவது விலக்காது ஆளுமைத்திறனில் உயர்ந்தவர்களே பெண்கள்.

Wishes by: Mr. K.A.Vaikunthanathan Family
Sri Lanka Government Retd Officer
Justice of Peace
Lanka Party Member,
Vadamarachchi-Sri Lanka.

26/3,
Aachirvathappar Road,
Nallur, Jaffna. (52803)(10.6.3)

**வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**வாழைத்தும்பு சார் உற்பத்திப் பொருள்களின் வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்**

எமது சங்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் வாழைத்தும்பு, வாழைத்தும்புசார் கைப்பணி உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்தும், விற்பனையை அதிகரிக்கும் நோக்கம் கருதி விசேட நிதிப் பங்களிப்பு திட்டத்தின் கீழ் விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் ஒருவரை ஒரு வருட கால அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**வயதெல்லை:** 18-45

சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவு : மாதாந்தம் அடிப்படை வேதனம் ரூபா 20000.00 (EPF,ETF இக்கு உரித்தானது) கவர்ச்சிகரமான வெளிமாவட்ட பிரயாணப்படி, வெளிமாவட்டத்தில் தங்குவதற்கான தங்குமிடக் கொடுப்பனவு இணைந்தபடி, மாவட்டத்திற்குள் மோட்டார் சைக்கிள் பிரயாணப்படி, தொலைபேசி பாவனைக்கான கொடுப்பனவும் உரித்தானது.

**தகைமைகள்:**

* ஆகக்குறைந்தது க.பொ.த(உயர்தரம்)சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் சந்தைப்படுத்தல் தொடர்பான கற்கை நெறிகளைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* பொருள்கள் சேவைகளை சந்தைப்படுத்தல் தொடர்பான துறையில் ஆகக்குறைந்தது 2 வருடங்களுக்கு குறையாத அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
* ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக்கூடிய மொழித்திறன் கொண்டிருப்பதுடன் சிங்களம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
* தொழில் தொடர்பில் கணினியறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
* சொந்தமாக உந்துருளி(Motor bike) வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
* சுயஊக்குவிப்புடன் வியாபார இலக்குகளை அடையக் கூடியவராகவும் வெளிமாவட்டங்களுக்கு பயணிக்க கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

பூரண தெளிவான விவரங்களுடன் கூடிய சுயவிவரத்தை **16.10.2014**ஆம் திகதிக்கு முன்னதாக சங்கத்திற்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

சங்க நெறியாளர்குழுவால் தெரிவு செய்யப்படும் தகுதியான விண்ணப்பதாரிகளே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

**விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய முகவரி:**
**தலைவர்,**
**வலி.கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கம்,**
**பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி.** (52827)(5.6.3)

# முல்லைத்தீவுப் பிரதேச மாணவர் பலர் கல்வியை புறக்கணித்து வேலைகளில்

## பெற்றோர்கள் மீது நடவடிக்கை என்கிறார் பொலிஸ் அதிகாரி

முல்லைத்தீவு, ஒக் 4

முல்லைத்தீவு பிரதேச மாணவர்கள் பலர், பாடசாலைக் கல்வியைப் புறக்கணித்து விட்டு வீடுகளிலும், வேலைத் தலங்களில் பணிபுரிந்து கொண்டு இருப்பதாக தெரிவித்த மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்தன, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்காத பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் கூறினார்.

முல்லைத் தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகளை கடந்த புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை யாகும். மாணவர்கள் கல்வி கற்பதற்கு வறுமையை ஒரு காரணமாகக் காட்டக் கூடாது. இன்று எமது நாட்டில் இலவசக் கல்வி வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கு என்ன பிரச்சினைகள் இருந்தாலும் அது பற்றி எமக்குத் தெரியப்படுத்துங்கள். உரிய அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி, முடியு மான உதவிகளை பெற்றுக் கொடுப்போம்' என்றார். '

மாணவர் ஒருவர் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டிலோ அல்லது வேலைத்தலத்திலோ வேலை செய்தால் அதுபற்றி விசாரணை செய்யப்பட்டு மாணவர்களின் பெற்றோர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (த)

# கிராம அபிவிருத்தி சங்கத்தினரை அச்சுறுத்தும் கிராம அலுவலர்

வவுனியா, ஒக் 4

வவுனியா, பழைய கற்பகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை அச்சுறுத்தும் வகையில் அந்தப்பகுதிக் கிராம அலுவலர் இராணு வத்தினரை அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைத்தார் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த செவ்வாய்க்கிழமை கற்பகபுரம் கிராம அலுவலரை தாக்கினர் என கிராம அலுவலர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பழைய கற்பகபுரம் கிராமத்தைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கடந்த செவ்வாய் இரவு 9 மணியளவில் வவுனியா பொலிஸார் கைது செய்தனர்.

கிராம அலுவலரைக் குறித்த இருவரும் தாக்கவில்லை எனவும் கிராம அலுவலர் பொய் முறைப்பாட்டை பொலிஸில் செய்துள்ளார். எனவே அவரை இடம்மாற் றுமாறும் கோரி அப்பகுதி மக்கள் கடந்த புதன்கிழமை வவுனியா மாவட்ட செயலகம் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இப்பிரச்சினை தொடர்பில் தான் கவனம் செலுத்துவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்ததையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரும் கடந்த புதன் கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை குறித்த இருநபர்களின் வீடுகளுக்கும் சீருடை தரித்த இராணுவத்தை அழைத் துச் சென்ற கிராம அலுவலர் அவர்கள் மூலம் தமக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருக்கும் நிலையில் இப்பிரச்சினை தொடர்பில் எவ்வாறு இராணுவத்தை தமது வீட்டுக்கு அழைத்து வரமுடியும் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இராணுவத்தினர் சென்ற போது கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் வீட்டில் வயது முதிர்ந்த அவரது மனைவியும் விசேட தேவைக் குட்பட்ட மகளும் மாத்திரமே இருந்துள்ளனர். இதேவேளை, குறித்த கிராம அலுவலர் தற்போது புதிதாக நியமனம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)


CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm



Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


# உணவு, இல்லிடம் இன்றி 35 லட்சம் முதியவர்கள்

கொழும்பு, ஒக் 4

இலங்கையில் 60 வயதைக் கடந்துள்ள முதியோர்களில் 35 லட்சம் பேருக்கு முறையான ஒரு வேளை உணவு கிடைப்பதில்லை.

அத்துடன் அவர்கள் தமக்குச் சொந்தமில்லாத வாழ்விடங்களிலேயே வாழ்ந்து வரு கின்றனர் எனச் சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு கூறியுள்ளது. நாட்டின் சனத்தொகையில் 70 லட்சம் பேர் வரை 60 வயதைத் தாண்டி யுள்ளவர்கள் எனவும் அதில் கூறப் பட்டுள்ளது.

இவர்களுள் 21 வீதமானோர் அதாவது 15 லட்சம் பேருக்குத் தினசரி முறையான ஒரு வேளை உணவு கிடைப்பதில்லையெனவும், 29 வீதமானோர் அதாவது 20 லட்சம் பேர் வரை தமக்கென வீடின்றி வெளியாருக்குச் சொந்தமான வீடுகளில் தமது வாழ்க்கையை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

தமக்குச் சொந்தமான வீடுகள், சொத்துக்களைச் சீவிய உரித்தைக் காட்டாமல் பிள்ளைகளுக்கோ அல்லது உறவினர்களுக்கோ கையளித்திருப்பதன் காரணமாக இந்த துரதிர்ஷ்டவசமான நிலை உருவாகியிருப்பதாகவும் முதியோருக்கான செயலகத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். (த-22)

## வாய்க்காலை மூடுமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஒக். 4

ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தின் முன்பாக நீர் பாயும் வாய்க்காலை உடனடியாக மூடி விடுமாறு பெற்றோர்கள் கோரியுள்ளனர்.

ஆறுமுகம் வித்தியாலயத் துக்கு முன்பாக அமைக்கப்பட்டு வரும் வாய்க்கால் மூடப்படாமையால் அதனைக் கடந்து செல்லும் போது மாணவர்கள் வாய்க்காலுக்குள் விழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது மாணவர்களின் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. கடந்த 24 ஆம் திகதி மாணவன் ஒருவன் அதற்குள் தடுக்கி வீழ்ந்துள்ளார்.

எனவே இதனை உடனடியாக மூடுமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (த-500)


மலிவு விற்பனை

சகல அளவுகளிலுமான ரியூப்கள் விற்பனை இன்றும், நாளையும்

இடம்: ராஜன் உமையாள் எரிபொருள் நிலையம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (52831)(4.6.3)


## 7500 கிலோ கிராம் உருளைக் கிழங்கு விநியோகம்

மன்னார், ஒக் 4

கடும்வறட்சியை கருத்தில் கொண்டு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வாழும் மக்களுக்கு வழங்குவதற்கென 7 ஆயிரத்து 500 கிலோ உருளைக் கிழங்கு முசலி பிரதேசச்செயலாளரிடம்கையளிக்கப்பட்ட நிலையில் அவை கடந்த புதன் கிழமை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

மேற்படி உருளைக் கிழங்கு முசலி பிரதேசத்தில் உள்ள 21கிராம அலுவலகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. ஒரு குடும்பத்துக்கு 3 கிலோ உருளைக்கிழங்கு வீதம் மக்களுக்குஉருளைக் கிழங்கு கையளிக்கப் பட்டது. (த)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2014இல் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

செல்வன் சசிக்குமார் நேசன்

அவர்களையும், அவருடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

அ.ஜதுசனா - 155, ஜ.நிலவரசன் - 138

க.தமிழரசன் - 135, கா.தர்சிகா - 134

சி.சுகந்தி - 117, செ.உஷாந்தினி - 105

ச.சிந்துஜன் - 101 இவர்களையும்

பாராட்டி வாழ்த்துகின்றோம்.



செல்வன் சசிக்குமார் நேசன்

Congratulations

கிளி/கரியாலை நாகபடுவான் இல-2 அ.த.க. பாடசாலை பல்லவராயன்கட்டு.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைப் பணியாளர்.

(C/15748)(7.6.3)



60 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

இரா.கதிரவேல் சிவனொளி

(வட அல்வையூர்)




வட அல்வையூரைப் பிறப்பிடமாகவும் தற்போது சுவிஸில் வசிக்கும் இரா.கதிரவேல் சிவனொளி இன்று (04.10.2014) சனிக்கிழமை தனது 60 ஆவது பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை மனைவி தனநாயகி, பிள்ளைகளான சுதாஜினி, நிரஞ்சலா, திருசாந்தி (தனு), விஜயாலயன் (திலீபன்), சஞ்சீவன், மருமக்களான குகநாதன் (குகன்), மதீஸ்வரன், சகீதரன் (வாசன்) பேரப்பிள்ளை அ.தக்சஜன் ஆகியோர் அல்வாய் முத்துமாரி அம்மன் அருளால் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

புலோலி தெற்கு, புலோலி.

T.P:077 362 2543 (49800)(4.3.6)

குடும்பத்தினர்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்




20.09.2014 இல் இடம்பெற்ற AJLANTIS (DUBAI) இல், பட்டமளிப்பு விழாவில் International Parchasing and Supply Chain Management [IPSCM] பட்டம் பெற்ற

தங்கராசா சந்துரு

அவர்களை மேலும் பட்டங்கள் பெற்று சகல செல்வங்களும் நிறைந்த வாழ்வும் அமைய சபரிமலை ஐயப்பன் அருளாசி வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

No.16, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி. (47297)(10.6.3)

அப்பா, அம்மா, நிகேதன், கேசவன் (தம்பிமார்), மாமா



யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் - வ/து

L.P.T 407 கன்ரர் வாகனம் விற்பனைக்கு

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்குச் சொந்தமான L.P.T 407 கன்ரர் ரக வாகனம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக கடமை நேரத்தில் சமாச பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிட்டுக் கேள்விப்பத்திரங்களை 18.10.2014ஆம் திகதிக்கு முன்னராக கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்/பொதுமுகாமையாளர்,

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,

இல.87, பலாலி வீதி, திருநெல்வேலி.

(C16746) (12.3.6)



## கரைக்கு ஒதுங்கிவரும் வால்ரஸ் கடல் விலங்குகள்

வால்ரஸ் எனப்படும் கடல் விலங்குகள் பெரும் எண்ணிக்கையில் வடமேற்கு அலாஸ்காவின் கரையோரத்தில் வந்து குவிந்துள்ளன.

கடலில் அவை தங்கியிருப்பதற்குப் போதுமான அளவு பனிக்கட்டிகள் இல்லாது போயுள்ளமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

பொயின்ட் லே பழங்குடியினர் கிராமத்திற்கு வடக்கே, சுமார் 35 ஆயிரம் வரையான வால்ரஸ்கள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சுக்சி கடலின் ரஷ்ய பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான வால்ரஸ்கள் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்துள்ளதாக இயற்கை வளங்களின் பாதுகாப்புக்காக குரல்கொடுக்கும் உலகளாவிய நிறுவனமான டபிள்யூ டபிள்யூ எஃப் கூறுகின்றது.

பூமியின் வடகோடியான ஆர்ட்டிக் பிராந்தியத்தின் சுற்றுச்சூழல் வேகமாக மாறிக்கொண்டிருப்பதையே இந்த வால்ரஸ் கூட்டங்கள் காட்டுவதாகக் கூறும் நிறுவனம் அமைப்பு, கோடைகால பனிக் கட்டிகள் குறைந்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. (வ)

## சூரியனில் பல மடங்கு சக்திவாய்ந்த வெடிப்பு

வொஷிங்டன், ஒக்.4

சூரியனில் இதுவரையிலும் இல்லாத அளவு 10,000 மடங்கு சக்தி மிகுந்த சூரிய வெடிப்பொன்றை நாஸா விஞ்ஞானிகள் படம்பிடித்துள்ளனர்.

இந்த சூரிய வெடிப்பு, சூரியனின் மையப்பகுதியைக் காட்டிலும் 12 மடங்கு வெப்பம் நிறைந்தது. இதற்கு SUPER FLARE என்று பெயரிடப்பட்டுள்ளது.



இந்த வெடிப்பு, அருகிலுள்ள நட்சத்திரத்தில் இருந்து 60 ஒளியாண்டுகள் தொலை தூரத்திலிருந்து வந்திருக்கக் கூடும் என்று நாஸா விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இவ்வகை சூரிய வெடிப்புகளால் பூமியில் மின்சாரத்தையும், தகவல் தொடர்பையும் துண்டிக்ககூடிய அபாயம் உள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் ஏழுமுறை இவ்வாறான சூரிய வெடிப்புகள் நிகழ்ந்துள்ளதை நாஸா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

அதேபோன்றதொரு சூரிய வெடிப்பு 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் நிகழ்ந் துள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ)

## குட்டி இளவரசரைத் தொடர முயலும் பப்பராசிக்கு மிரட்டல்

லண்டன், ஒக்.4

பிரிட்டனின் குட்டி இளவரசரான ஜோர்ஜை படம் பிடிக்க முயற்சிப்பதை ஒரு பப்பராசி (பிரபலங்களை அனுமதியின்றி விரட்டி விரட்டி படம் பிடிப்பவர்கள்) நிறுத்தா விட்டால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவியான கேம்பிரிஜ் சீமாட்டி ஆகியோரின் சட்டத்தரணிகள் மிரட்டியுள்ளனர்.

முடிந்தவரை தமது குழந்தை இளவயதில் சாதாரண வாழ்க்கையை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

முடிக்குரிய இளவரசர்களில் மூன்றாவது இடத்தில் இருக்கின்ற போதிலும், குழந்தை ஜோர்ஜுக்கு, ஏனையவர்களால் பின் தொடரப்படாமல், ஏனைய குழந்தைகளுடன் பூங்காக்களுக்குச் சென்று விளையாட சுதந்திரம் தேவை என்று அரச குடும்ப அதிகாரிகள் வாதிடுகிறார்கள்.

இளவரசர் ஜோர்ஜ் அண்மையில் ஒரு பூங்காவில் தன்னுடைய செவிலித்தாய் மற்றும் மெய்ப்பாது காவ லருடன் இருந்தபோது அங்கு புகைப் படப்பிடிப்பாளரும் காணப் பட்டுள்ளார். (வ)

# பேச்சுக்குத் தயார்

## அணு ஆயுத விவகாரம் தொடர்பாக வடகொரியா தெரிவிப்பு

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக சர்வதேச நாடுகளுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக வட கொரியா தெரிவித்துள்ளது.



ஐ.நாவுக்கான வடகொரிய தூதர் சோ சே பியோங், சுவிற்ஸர்லாந்தில் இதனைத் தெரிவித்தார்.

தடைப்பட்ட அணு ஆயுத பேச்சைத் தொடர சீனா மற்றும் ரஷ்யா தயாராக உள்ளதாகவும், அமெரிக்க அரசே பேச்சுக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும் அமெரிக்கா தென்கொரியா இணைந்து நடத்தும் இரா ணுவ ஒத்திகைக்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர், இரு நாடுகளும் தங்கள் மீது தாக்குதல் நடத்த முயன்றால் அதற்கும் தயாராக இருப் பதாகத் தெரிவித்தார்.

இதனிடையே அணு ஆயுத உற்பத்தி குறித்து வடகொரியாவுடனான பேச்சை மீண்டும் தொடங்க வேண்டும் என ரஷ்ய வெளியுறவு துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். (வ)



ஹொங்கொங்கில், ஆட்சித் தலைவர் லீயங் சன்-யிங் பதவி விலக வேண்டும் என்று கோரி நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. முக்கிய அரச அலுவலகக் கட்டடங்களைக் கைப்பற்றப்போவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். அத்துடன் முக்கிய அரச கட்டங்களை முற்றுகையிடவும் ஆரம்பித்துள்ளனர். அதேவேளை, ஹொங்கொங்கில் அமைதியின்மையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா துணை போகக் கூடாது என்று சீனா எச்சரித்துள்ளது.



## அமெரிக்கா வாழ் சென்னை விஞ்ஞானிக்கு நோபல் பரிசு?

நியூயோர்க், ஒக்.4

அமெரிக்கா வாழ் சென்னையைச் சேர்ந்த விஞ்ஞானியான ராமமூர்த்தி ரமேஷுக்கு நடப்பாண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு கிடைக்க சந்தர்ப்பம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

2014ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு பெறுவதற்கு 27 பேர் அடங்கியுள்ள பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதில் சென்னையைச் சேர்ந்த விஞ்ஞானி ராமமூர்த்தி ரமேஷின் பெயரும் இடம்பெற்றுள்ளது. இயற்பியலுக்கான பிரிவில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர் ஜேம்ஸ் காட், டோக்கியோ பல்கலைக் கழக பேராசிரியர் யோஷினோரி டோகுரா ஆகியோருடன் இணைந்து ரமேஷ் பெயரும் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றும் ராமமூர்த்தி ரமேஷ், சென்னையைச் சேர்ந்தவர். (வ)

## காந்தியின் வழிமுறைகளை பின்பற்றுக

### பான்கீ – மூன் வலியுறுத்து

சர்வதேச சமூகம் வன்முறைப் பாதையைக்கைவிட்டுமகாத்மா காந்தியின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ - மூன் வலியுறுத்தியுள்ளார்.

போர்களின் மூலம் அடைய முடியாத விடயங்களைக் கூட அகிம்சையின் மூலம் வெல்ல முடியும் என்பதைக் காந்தியடிகள் உலகுக்கு உணர்த்தியதாகத் தெரிவித்துள்ள அவர், காந்தியின் கொள்கைகளை பின்பற்ற வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார்.

உலகம் முழுவதும் இனரீதியிலான வன்முறைகள் அதிகரித்து வரும் வேளையில் வன்முறைக்கு எதிரான காந்தியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## வீதியோர குழந்தைகளுக்கு பாகிஸ்தானில் பாடசாலை

### ஆரம்பித்து வைத்தார் பொப் பாடகி மடோனா

கராச்சி, ஒக்.4

பாகிஸ்தானின் கராச்சி நகரில் வீதியோரம் வாழும் குழந்தைகளுக்குப் போதுமான கல்வியறிவு பெறுவதற்காக, நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்ட பாடசாலையொன்றை அமெரிக்காவின் பிரபல பொப் பாடகி மடோனாஆரம்பித்துவைத்தார்.



அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தைச் சேர்ந்தவர் பிரபல பொப் பாடகி மடோனா லூயிஸ் சிகோன் (வயது-56). அவர் இன்று வரை அமெரிக்காவில் பொப் இசையில் முடிசூடாராணியாகத் திகழ்ந்து வருகிறார்.

பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பல்வேறு ஏழை நாடுகளில் வசிக்கும் இளம் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு, பல்வேறு பொப் இசை நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டி அளித்து வருகிறார். பாகிஸ்தானில் கராச்சி நகருக்கு வெளியே வீதியோரம் வசிக்கும்குழந்தைகளின் கல்வி அறிவுக்காகப் பல்வேறு வசதிகளுடன் கூடிய நவீன பாடசாலை அமைக்கப்படும் என்று லண்டனில் கடந்த ஆண்டு நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது மடோனா அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து, கராச்சி நகரில் பாடசாலை அமைக்கும் பணி நடைபெற்றது. தற்போது அதன் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நேற்று முன்தினம் அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலையில் சுமார் ஆயிரத்து 200 சிறுமிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். பாடசாலையை ஆரம்பித்துவைத்த மடோனா, மாணவிகளுடன் தான் இருக்கும் படத்தை நேற்று முன்தினம் வெளியிட்டார். பாகிஸ்தானில் பெண்களின் கல்வி குறித்து மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தற்போது இந்தப் பாடசாலையில் 1,200 மாணவ, மாணவிகள் லப்டொப் மூலம் நவீன கல்வியறிவைப் பெறத் தொடங்கியுள்ளனர். இதன்மூலம் அவர்களின் பாடசாலைக் கனவு நனவாகி வருகிறது என்று மடோனா கூறினார். (வ)

# இரகசிய சேவை பிரிவின் இயக்குநர் பதவி விலகல்

## அமெரிக்க ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அளிக்கும்

வொஷிங்டன், ஒக்.4

அமெரிக்க ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அளிக்கும் இரகசிய சேவை பிரிவின் இயக்குநர் பதவி விலகியுள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை உட்பட அந்தநாட்டு ஜனாதிபதி செல்லும் இடங்களுக்கு எல்லாம் தனிப்பட்ட ரீதியில் பாதுகாப்பு அளிக்கும் முக்கிய கடமையைச் செய்யும் குழு இரகசிய சேவை என்று அழைக்கப்படுகின்றது.

இந்த இரகசிய சேவையின் முதலாவது பெண் இயக்குநராகக் கடமையாற்றி வந்த ஜூலியா பியேர்சன் நேற்று முன்தினம் புதன்கிழமை பதவி விலகியுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி 42 வயதுடைய ஒமர் கொன் ஷலெஷ் என்ற முன்னாள் ஈராக் போரில் பங்கேற்ற இராணுவ வீரர் ஒருவர் கத்தியுடன் இரகசிய சேவைப் பிரிவினரைத் கடந்து சென்று வேலியைத் தாண்டிக் குதித்து வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி வசிக்கும் இடத்துக்கு அருகே கிழக்கு அறை ஒன்றுக்குள் பிரவேசித்திருந்தார்.

அங்கு வைத்து இந்த நபர் பாதுகாப்பு அதிகாரிகளால் தடுக்கப்பட்ட போதும் அதிபர் ஒபாமாவுக்கான பாதுகாப்பு நடவடிக்கையில் இந்தச் சம்பவம் ஓர் பின்னடைவாகக் கருதப்பட்டது.

கவனக்குறைவான இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று இரகசிய சேவை இயக்குநர் பதவி விலக வேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்ததை அடுத்தே விசாரணையின் பின்னர் ஜூலியா பியேர்சன் பதவிவிலக நேரிட்டுள்ளது.

அவரது பதவி விலகலை உறுதி செய்தார் உள்நாட்டுப் பாதுகாப்பு இயக்குநர் ஜேஹ் ஜோன்சன்.

ஏற்கனவே அட்லான்டாவிலுள்ள சிடிசி எனப்படும் நோய்த் தடுப்பு நிலையத்துக்கு ஜனாதிபதி ஒபாமா மேற்கொண்ட சமீபத்திய பயணத்தின் போது ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஜனாதிபதியுடன் ஒன்றாக எலவேட்டரில் செல்ல நேரிட்டதும் இரகசிய சேவையின் தவறுகளில் ஒன்றாகப் பதியப்பட்டதுடன் இதற்கும் ஜூலியா பொறுப்பேற்று பதவி விலகியுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (வ)

## 101 வருடங்களாக தொடர்ந்து எரியும் தீபம்



பீகார், ஒக்.4

பீகாரில் உள்ள துர்க்கா பரமேஸ்வரி கோயிலொன்றில் ஏற்றப்பட்ட தீபம் ஒன்று 101 ஆண்டுகளாகத் அணையாது தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கின்றது.

1914ஆம் ஆண்டு ஜூன் மாதம் அசாமில் இருந்து ஒரு தீபத்தை கொண்டுவந்து துர்க்கா தேவி சிலை முன்பு தீபமேற்றி வைத்தனர்.

இன்றுவரை அந்தத் தீபம் சுடரொளியுடன் எரிந்து கொண்டிருக்கிறது. தற்போது அந்தக் கோயிலின் பூசாரியாக இருப்பவர் பசுகினத் திவாரி. அவரது தாத்தா, விஸ்வநாத் திவாரிதான் இந்த தீபத்தை முதலில் ஏற்றியவராம்.

மூன்று தலைமுறைகளாக தீபத்தை அணையாமல் பார்த்து வருகின்றனர்.

இதுகுறித்து பசுகினத் திவாரி கூறுகையில்,

இந்தக் கோயிலில் அனைத்து சாதியினரும் வந்து வணாங்கி விட்டுச் செல்லலாம். எனது தாத்தா காலத்தில் இருந்தே இங்கு சாதி ஏற்றத்தாழ்வு கிடையாது.

அம்மன் அனைவருக்கும் சமமானவள் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். செவ்வாய் மற்றும் நவராத்திரி தினாங்களில் கோயிலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் வரு வார்கள் என்று கூறியுள்ளார். (வ)

# ஜெயலலிதாவுக்காக தொடரும் போராட்டம்

## அ.தி.மு.கவினர் நேற்று மனிதச் சங்கிலிப் போர்



சென்னை, ஒக்.4

அ.தி.மு.க.வினர் சென்னை நீலாங்கரை, அடையாறில் நேற்று மனித சங்கிலி மற்றும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழகம் முழுவதும் அ.தி.மு.க.வினர் பல்வேறு ஆர்ப்பாட்டம் மற்றும்போராட்டங்களைதொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

சென்னை கிழக்கு கடற்கரைச்சாலைப் பகுதியிலும் தினம் ஒரு போராட்டத்தை ஒவ்வொரு பகுதியிலும் நடத்தி வருகின்றனர். சென்னை மாநகராட்சிகணக்குதணிக்கை நிலைக்குழுத் தலைவரும் 192 ஆவது பிரிவு ஆணையாளருமான எம்.சி.முனுசாமி தலைமையில் தொடர் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமைநீலாங்கரையில்உள்ள சிவன்கோவிலில் ஜெய லலிதா விடுதலை கோரி சிறப்பு பூசைகள் நடத்தப்பட்டது.

300 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மனிதச் சங்கிலிப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

தினமும் திருவிழா என்பது போல் தினம் ஒரு போராட்டத்தால் ஈ.சி.ஆர். பகுதி பரபரப்பாகவே காணப்படுகிறது.

அடையார் தொலைபேசி நிலையம் அருகே இன்று தென் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் விருகை வி.என். ரவி தலைமையில் அ.தி.மு.க.வினர் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினர். ஏழரைக் கோடி மக்களுக்கு தண்ணீர் வாங்கித் தந்த எங்கள் தாய்க்கு 100 கோடி அபராதமா? கர்நாடக அரசைக் கண்டிக்கிறோம். புரட்சித் தலைவி அம்மாவை விடுதலை செய்யும் வரை ஏழரைக் கோடி தமிழர்களும் போராடுவோம் என்ற பதாகையைச் சுமந்தபடி உணவு தவிர்ப்புப் போராட்டம் அமைந்தி ருந்தது.

கருணாநிதியையும், சுப்பிரமணியன்சுவாமியையும்வசை மாரி பொழிந்தபடி போராட்டத்தில் கலந்துகொண்டனர். (வ)

## ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்-1சி ஒக்.10-இல் விண்ணுக்கு

டில்லி, ஒக்.4

இந்தியாவின் 3ஆவது நேவிகேஷன் செயற்கைக் கோளான ஐஆர்என் எஸ்எஸ்-1சி செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்திலிருந்து எதிர்வரும் 10 ஆம் திகதி அதிகாலை 1.56 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

பி.எஸ்.எல்.வி.-சி26 ரொக்கெட் மூலம் இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பி.எஸ்.எல்.வி.யின் எக்8ஸல் வகை ரொக்கெட் இந்த செயற்கைக்கோளை பூமியிலிருந்து அதிகபட்சம் 20,650 கிலோ மீட்டர் தொலைவும், குறைந்தபட்சம் 284 கிலோ மீற்றர் தொலைவும் கொண்ட தற்காலிகப் பாதையில் செலுத்தும்.

அங்கிருந்து செயற்கைக் கோளின் பாதை அதிகரிக்கப்பட்டு திட்டமிட்டப் பாதையில் செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்படும்.

ஜி.பி.எஸ். அமைப்பு போன்று இந்தியப் பிராந்தியத்தில் கடல் வழி, தரை வழி, விமானப் போக்குவரத்துக்கு உதவும் வகையில் இந்திய நேவிகேஷன் அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. (வ)


## பாக்.ராணுவம் எல்லையில் தாக்குதல்; இந்தியா பதிலடி

ஜம்மு-காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக்கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள் 6 பேர் காயமடைந்தனர்.

பூஞ்ச் மாவட்டத்தின் சப்ஜியன் மற்றும் மாண்டி பகுதிகளில், தானியங்கி ஆயுதங்கள் மற்றும் சிறிய ரக ஆயுதங்கள் மூலம் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. 5 மணி நேரத்துக்கும் மேலாக அந்த நாட்டு இராணுவம் நடத்திய தாக்குதலுக்கு இந்திய இராணுவத்தினரும் தக்க பதிலடி கொடுத்தனர். (வ)

# மரண அறிவித்தல்

## சிவராஜா நிசாந்



யாழ்ப்பாணம், 49/1, கோயில் வீதியைச் சேர்ந்த சிவராஜா நிசாந் 01.10.2014 அன்று அகாலமரணமானார்.

அன்னார் சிவராஜா - குமுதினி தம்பதியரின் மூத்த புதல்வனும், பிரசாந்தின் (லண்டன்) அன்புச் சகோதரனும், அச்சுதம்பிள்ளை (ஓய்வுபெற்ற முகாமையாளர் மக்கள் வங்கி), ரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்), வசந்தன் - சாந்தினி (கனடா), மாலினி (ஆசிரியர் - சன்மார்க்க மகாவித்தியாலயம்), தம்புச்சாமி - பாமினி (அமெரிக்கா), சுபாசினி - விமலன் (கனடா), குணரட்ணம் - சரோஜினிதேவி ஆகியோரின் பெறாமகனும், ரகுலேந்திரன், பெரியராசா (கனடா), சின்னராசா (கனடா), பவளம், நகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும், கார்த்திகா (முகாமையாளர் இலங்கை மத்தியவங்கி), நிரோஷ் (Excutive Officer, Rocell), அபிராமி, சிந்துரா, சயன், சரண், ஹர்சினி, சரண்யா, தர்சிகா, சதீஸ், சைலா, கனிஸ்ரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், அஜித், ஆகாஷ், ஜனனி, தருணி மற்றும் அருந்ததி, சுவேந்திரா, கனிஸ்ரா, ஸ்ரீஜனகன், சாந்தகுமாரி, சசீலன், சசிக்குமாரி, குணசீலன், செல்வகுமாரி, சர்மிலா, கோபி, கிருஷ்ணன், அருட்குமரன், சாருஜன், வியாசன், சஜித்தனா, திலக்ஷன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

49/1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 399 5716

(52833) (46.63)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தாலி சென்றடைந்துள்ளார். ரோம் ஃபியூமிசினோ விமான நிலையத்தை சென்றடைந்த ஜனாதிபதியை வத்திகான் பிரதான அதிகாரி ஜோசோ வெத்தன் மற்றும் இத்தாலிக்கான இலங்கையின் தூதுவர் நாவலகே போர்னாட் குரே ஆகியோர் வரவேற்றனர்.

# இருபது வீத பால்மாக்களில் 'டிசிடி' இரசாயனம் கலப்பு

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4
2013ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் இந்தமாதம் வரையில் ஆயிரத்து 190 பால்மா மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 20 சதவீதமான பால்மா மாதிரிகளில் டிசிடி எனப்படும் இரசாயன நச்சுப்பொருள்கள் கலந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது- இவ்வாறு தெரிவித்துள்ளார் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"2013ஆம் ஆண்டில் 84 ஆயிரம் மெற்றிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு 6 ஆயிரம் மெற்றிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக்கமைய, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால்மாக்களும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தால் டீ.சி.டீ பரிசோதனை செய்யப்படுகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நோனிஸ் மீதான தாக்குதல் விசாரணை நடத்த உத்தரவு

### பிறப்பித்துள்ளாராம் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, ஒக்.4
பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ்நோனிஸ்மீதான தாக்குதல் குறித்து உயர்மட்ட விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நியூயோர்க்கில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் போது நோனிஸ் மீது நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன தாக்குதல் நடத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து உயர்மட்ட விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பிரசன்னமாகியிருந்தார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தமை கவனிக்கப்பட வேண்டியது. அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வத்திக்கான் பயணத்தில் சஜின் வாஸ் குணவர்தன இணைந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஓர் பின்னணியில் ஜனாதிபதி விரிவான விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்று அரச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ற)

## பௌர்ணமி தினத்தன்று 'சிவந்த நிலவு'



கொழும்பு, ஒக்.4
எதிர்வரும் 8ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று பூரண சந்திரக்கிரகணம் நிலவுவதால் சிவந்த நிறத்திலான நிலவை காணக்கூடியதாக இருக்கும் என்று வானவியல் நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

ஆயினும், இந்த சந்திர கிரகணத்தை இலங்கையில் முழுமையாகக் காண முடியாது என்றும் சந்திரக் கிரகணத்தின் இறுதிக் கட்டத்தை மாத்திரம் மாலை நேரத்தில் இலங்கையில் காணலாம் என்றும் வானவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். வடக்கு மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் ஆஸ்திரேலியா, ஜப்பான், கொரியா உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளிலும் இந்த சந்திரக்கிரகணத்தை முழுமையாகக் காணலாம் என்று வானவியல் நிபுணர் அநுர சீ.பெரேரா தெரிவித்தார்.

இந்த சந்திரக்கிரணகம் காரணமாக, பௌர்ணமி தினத்தன்று இரவு சிவந்த நிலவைக் காணலாம் என்றும் இதற்கு 'ரெட் மூன்' என்று பெயரிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# ஆளும் கட்சியினர் 58 பேர் ஐ.தே.கவுக்குத் தாவத் தயார்

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.4
ஆளும்கட்சியிலுள்ள சில உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கு தயாராகவுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அரசுக்கு இறுதித் தீர்மானம் எடுப்பதில் பெரும் பிரச்சினைகள் உள்ளன. தேர்தல் தொடர்பில் அறிவித்ததும் கூட்டமைப் பின்பலர் எம்முடன் இணைந்து கொள்வதற்கு தயாராக உள்ளனர். நாடாளுமன்றத்தில் எமக்கு நடந்துசெல்ல முடியாதுள்ளது. ஒவ்வொரு அடிக்கும் பத்து பேர் இருப்பார்கள். இன்னுமொரு அடி செல்லும் போது 15 பேர் இருப்பார்கள். இவ்வாறானதொரு நிலைமை தான் நாடாளுமன்றத்தில் காணப்படுகின்றது. எந்தப் பக்கம் சிக்கும் என்று எங்களால் கூற முடியாது. 58 பேர் வரையில் காத்திருக்கின்றனர். சந்திரிக்காவும் எதிர்பார்த்திருக்கின்றார் ஏனென்றால் சந்திரிக்கா வுக்கும் கட்சி தேவையாக உள்ளது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பால் மாடுகளை விடவும் வேறு சொத்துக்கள் எவையுமில்லை

### இப்படிக் கூறுகின்றார் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, ஒக்.4
ராஜபக்ஷ குடும்பத்துக்கு பால் மாடுகளைத் தவிர வேறு சொத்துக்கள் கிடையா என்று கூறியுள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

இலங்கை பால் பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நெஸ்லே நிறுவனம் நேற்றுமுன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"என்னைப் போன்றே எனது தந்தையும் ஒரு பால் பண்ணையாளர். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் தோட்டங்கள், ஹோட்டல்கள் மற்றும் கம்பனிகள் காணப்படுகின்றன என்று சிலர் குற்றம் சுமத்தி வருகின்றனர். எவர் என்ன சொன்னாலும் எனக்கு சில பசு மாடுகள் மட்டுமே காணப்படுகின்றன. நானும் எனது தந்தையும் உங்களைப் போன்றே பால் பண்ணையாளர்கள்.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அந்தத் தோட்டம் இருக்கின்றது. ஹோட்டல் இருக்கின்றது. அந்தக் கம்பனி இருப்பதாக தெரிவித்தாலும் எங்களுக்கு அவ்வாறு சொத்துக்கள் இல்லை. இலங்கையை பசும்பாலில் தன்னிறைவு அடையச் செய்யும் முயற்சிக்கு பாற்பண்ணையாளர்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பு அளப்பரியது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆலோசனைகள் வழங்கி பயனில்லை

### ஜனாதிபதியின் ஆலோசகர் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.4
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கினாலும் அதில் பயனில்லை என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"எமக்கு ஜனாதிபதி ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளது. நானும் ஆலோசனை வழங்குவேன், எவரும் கணக்கில் எடுப்பதில்லை. இறுதியில் ஓரிரு ஆலோசனை நடக்கும்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கு கொள்கை என்று ஒன்றில்லை. பதவியைக் காப்பற்ற வேண்டும் என்ற நிலையில் அவர் செயற்பட்டு வருகிறார்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# பதவி விலகினார் கிறிஸ் நோனிஸ்



கொழும்பு, ஒக்.4
பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் பதவியிலிருந்து விலகுவதற்கான கடிதத்தை தாம் ஒப்படைத்துள்ளார் என்று பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் கிறிஸ் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த போது தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# திறமையானவர்களுக்கு அரசியலில் உரிய இடமில்லை

### ரவி கருணாநாயக்க கவலை



கொழும்பு, ஒக்.4
திறமையான செயற்பாடுகளைக் கொண்டவர்களுக்கு அரசியலில் உரிய இடம் வழங்கப்படுவதில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விடவும் திறமையான பலர் ஆளும்கட்சிக்குள் இருக்கின்றனர்- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் ரவி கருணாநாயக்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"ஆளுங்கட்சியில் ஜனாதிபதி குடும்பத்தை விட ஏனையவர்களே சிறப்பான முறையில் செயற்படுகின்றனர்.

ஆனாலும் அவர்களின் செயற்பாடுகளின் நற்பெயரை ராஜபக்ஷ குடும்பம் தட்டிக் கொள்கின்றது.

ஆளுங்கட்சிக்குள் இருக்கும் திறமைசாலிகள் குறித்து ராஜபக்ஷ குடும்பத்தினர் மதிப்பளிப்பதில்லை. அதனைப் போன்ற நிலை தற்போது ஐ.தே.கவிலும் ஏற்பட்டுள்ளது. திறமைசாலிகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றார்கள். கட்சியில் சஜித் பிரேமதாஸவை விட திறமையானவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு உரிய இடம் கிடைப்பதில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## உயர் தொழில் நுட்பவியல் கல்லூரி மாணவர்களது கவனத்துக்கு

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 11ஆவது பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் (பொதுவிடுமுறை தவிர்ந்த நாள்களில்) அவர்களது சுய விவரம் தொடர்பான பதிவு நடவடிக்கை (online registration) நிறுவனத்தில் இடம்பெறவுள்ளதால் நிர்வாகப் பகுதியுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வருகைதரும்போது convocation Invitation cart ஆவணத்தையும் கட்டாயமாகக்கொண்டுவருமாறுஅறிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

கைதடி முத்துக்குமார் சுவாமி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் மா. சின்னத்தம்பி கலந்த கொள்வார். (வ)

## ஊழல் தினத்தை முன்னிட்டு கருத்தரங்கு

உலக லஞ்ச ஊழல் தினத்தை முன்னிட்டு 'லஞ்ச ஊழல்களை ஒழிப்போம்' என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இலங்கை லஞ்ச ஊழல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். பொதுநூலகத்தில் காலை 8.30 மணியளவில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் லஞ்ச ஊழல் தடுப்பு திணைக்கள் தலைவர் டி.ஜி.ப்ரீலபட்ட பண்டிக் மற்றும், லஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் கணேஷ் ஆர்.தர்மவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## மரண அறிவித்தல்



### திருமதி அழகேஸ்வரி நாகரத்தினம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அழகேஸ்வரி நாகரத்தினம் 30.09.2014 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு நாகரத்தினம் (முன்னாள் கொழும்பு மஸ்கன் கொம்பனி ஏற்றுமதி, இறக்குமதி முகாமையாளர், நாகரத்தினம் அன்கோ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்புத்துரை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு - கண்மணியம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், மகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற ராஜேஸ்வரி (மலேசியா), நீலாதேவி (கொழும்பு), புனிதவதி (கொழும்பு), காலஞ்சென்ற பரஞ்சோதி (மலேசியா), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தவராஜா, நவரட்ணராசா (ஊரெழு), மனோகரன் (கொழும்பு), மாலதி (ஜேர்மனி), சுணேசராசா (லண்டன்), ரமேஸ் (லண்டன்), ஜெயமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பும் பாசமும் கொண்ட தாயாரும், ஞானமலர், நாகேஸ்வரி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - ஆசிரியர்), நந்தினி (கொழும்பு), ரவிந்திரலிங்கம் (ஜேர்மனி), தமிழ்ச்செல்வி (லண்டன்), திலகலட்சுமி (லண்டன்), சியாமலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், தாசன், கார்த்திகா, கஜமுகி, லம்போதரன், சதிஸ், தினேஸ், டிலானி, லதானி, மஞ்சரி, கேசிகா, கேசாளி, சந்தோஸ், கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (04.10.2014) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, ந.ப.12.00 மணியளவில் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மாதம்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

62/22, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை.

**077 731 2649 / 011 243 9093** (சி16695) (12.3.6)

## ஜனாதிபதியின் ஆலோசகராக அரவிந்த்குமார்

கொழும்பு, ஒக்.4

ஊவா மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.அரவிந்த்குமார் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர் வே. ராதாகிருஷ்ணன் இதனைத் தெரிவித்துள்ளார். வெளிநாடு சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் இந்த நியமனம் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார். (ற)

## போலி விசா; ஒருவர் கைது

கொழும்பு, ஒக்.4

குவைத்துக்கு செல்வதற்காக போலி நுழைவிசைவு தயாரித்த ஒருவர் ஆனமடுவையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொலைபேசிஅழைப்பு மூலம் கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் சந்தேகநபர், குற்றப் புலனாய்வு பிரிவினரால் நேற்று முன் தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


ஆனமடுவைபகுதியை சேர்ந்த 36 வயதான ஒருவரே இவ்விதம் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீர் கொழும்பு நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சிவதாஸ்

(சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், யாழ்.மாவட்டம்)

(Senior Superintendent of Surveys Jaffna District)



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், 140, கோயில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவதாஸ் 02.10.2014 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லைநாதன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும், சிவமங்கையின் அன்புக்கணவரும், ஷாலினி (Quantity Surveyor, Australia), கஜனி (Accountant, Colombo), உமாதரன் (4th Year, Faculty of Engineering University of Moratuwa), சாரங்கி (2nd Year, Faculty of Medicine, University of Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், திலீப்காந் (Engineer, Australia) இன் அன்பு மாமாவும், குமாரதாஸ், காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் சிவகுமாரி ஆகியோரின் மைத்துனரும், ஷம்ஷாட், யோகேஸ்வரி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், காலஞ்சென்ற சிவராஜாவின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


140, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (52830) (12.3.6)

**தகவல்: சி.உமாதரன் (மகன்)**

**021 222 5984**

### சின்னத்தம்பி தம்பிராசா

(குருவீதி, காங்கேசன்துறை)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் பின்னர் இறுதிக் காலம் வரை கொழும்பு சொய்சாபுரத்தில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி தம்பிராசா 01.10.2014 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசம்மா (தவமணி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாவிட்டபுரம் தில்லையம்பலம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இரவீந்திரன், இறஞ்சினி, சாந்தினி, ரகுகுமார், உதயகுமார், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலிங்கம் (குண்டுமணி), இரவீந்திரன், பவானி, சுமதி, அனுஷியா,கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நவரட்ணம், மார்க்கண்டு, இராஜரட்ணம் (ராசு), மனோகரராசா (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சொர்ணம்மா, கமலாதேவி, புஸ்பராணி, நேசமலர், இராஜதுரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னத்தம்பி, இராமலிங்கம், ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சின்னாச்சி, சிவக்கொழுந்து ஆகியோரின் பெறாமகனும், கஜனி-ரொஷான் தம்பதியர், கிருபன், கஜன், அகிலாஷ், அபிலாஷ் ஜொசுவா சஹானா,ஜரோஸ், திசானா, சஞ்ஜேய், சஜனி, விருதன் (காலஞ்சென்ற), ரம்ஜா, சாதனா, சஹானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் 02.10.2014 வியாழக்கிழமை முழுநாளும் அவரது இல்லத்தில் (C.10 GH சொய்சாபுர) அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (04.10.2014) சனிக்கிழமையும் காலை 9.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து மதியம் 12 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் உள்ள இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.:
077 910 8613 / 011 262 2433

தகவல்: (மகன்மார்) இரவீந்திரன், ரகுகுமார், உதயகுமார், சுரேஸ்குமார், (மருமகன்மார்) இராசலிங்கம் (குண்டுமணி),இரவீந்திரன் (ரவி)

(சி/16696)(5.6.3)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சிவராசா
அவர்களின் அன்பு மகன்

# நிசாந்

அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு,
அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

லிங்கன் வெல்டிங் வேக்ஸ்
உரிமையாளரும், பணியாளர்களும்.

145/1, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். (52832)(4.3.6)

# கதை சொல்லப் போறோம்



பசங்க திரைப் படத்துக்குப் பின்னர் குழந்தைகளை மையமாகக் கொண்ட சினிமாக்கள் அவ்வப்போது வெளி வந்து கொண்டிருக்கின்றன. கோலிசோடா அதில் மிகப் பெரிய வெற்றி பெற்றது. அண்மையில் புதியதோர் உலகம் செய்வோம் என்ற படம் வெளிவந்தது. தற்போது கதை சொல்லப் போறோம் என்ற படம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

எஸ்.கல்யாண் என்பவர் தயாரித்து இயக்குகிறார். ஷாபானா, ரவீணா, அருண் அரவிந்த், அரவிந்த், ராகுல், சாமு, அர்ஜுன் என்ற குழந்தை நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். அவர்களுடன் ஆடுகளம் நரேன். காளி வெங்கட், பசங்க சிவகுமார் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

படத்தை பற்றி இயக்குநர் எஸ்.கல்யாண் கூறியதாவது:- முதல் படமாக குழந்தைகள் படத்தை இயக்குவது ஆபத்தானது என்பார்கள். நான் துணிச்சலுடன் இயக்குகிறேன். காரணம் இதற்கு முன்பு 6 குழந்தைகள் பற்றிய குறும்படம் இயக்கிய அனுபவம் இருக்கிறது.

குழந்தைகள் பற்றி நிறையப் படங்கள் வந்தாலும் அவர்களுக்குள் இருக்கும் உணர்வுகள் பற்றி வரவில்லை. இது குழந்தைகளின் உணர்வுகள் பற்றிய கதை. ஒரு அநாதை இல்லக் குழந்தைகளுக்கும், அருகில் வசிக்கும் பணக்கார குழந்தைகளுக்கும் இடையே உள்ள நட்பு, பாசம் பற்றி பேசும் படம். அத்தோடு குழந்தைகள் கடத்தல் பற்றிய ஒரு அதிர்ச்சித் தகவலையும் படத்தில் பதிவு செய்கிறோம் - என்கின்றார்.

## ஜிலாக்ஸா வாசியுங்க

கல்லூரியில் நான்கு நண்பர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். தாவரவியல் மாணவர்கள். ஒரே ஒரு பரீட்சையைத் தவிர, மற்ற எல்லாப் பரீட்சையும் எழுதிவிட்டார்கள். எஞ்சியிருந்த ஒரு பரீட்சைக்கு ஒரு வாரம் இருந்தது. மேலும், அது சுலபமான பரீட்சை என்பதால், இடைப்பட்ட காலத்தில் பக்கத்தில் இருந்த ஒரு மலைக்கு சுற்றுலா சென்றார்கள். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்று சந்தோசமாக இருந்தார்கள். அவர்கள் அங்கிருந்து புறப்பட வேண்டிய தருணம் வந்தது. அப்போது ஒரு நண்பன், "இங்கே காலநிலை அருமையாக இருக்கிறது. இன்றிரவும் இங்கே தங்கிவிட்டு, நாளை காலை ஆறு மணிக்கு காரில் புறப்பட்டால், பரீட்சை நேரத்துக்கு கல்லூரிக்கு போய்விடலாம்" என்றான்.

அதுவும் சரிதான் என்று நண்பர்கள் அன்று முழுவதும் அங்கேயே கோலாகலமாக கழித்துவிட்டு, இரவு தாமதமாக தூங்கினார்கள். காலையில் தாமதமாக கண் விழித்தார்கள். "சரி, பேராசிரியரிடம் ஏதாவது பொய் சொல்லி, மாற்றுப் பரீட்சைக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்" என்ற நம்பிக்கையோடு அங்கிருந்து வெளிக்கிட்டார்கள்.

பேராசிரியர் முன்பு நல்ல பிள்ளைகளைப் போல் நின்றவர்கள், நாங்கள் அரிதான சில தாவரங்களைச் சேகரிப்பதற்காக ஒரு மலைப்பகுதிக்கு சென்றிருந்தோம். அங்கிருந்து நேராக பரீட்சை எழுத கல்லூரிக்கு வந்துவிடலாம் என்ற திட்டத்தில், காலை காரில் வெளிக்கிட்டோம். வழியில் கார் சில்லு காத்துப் போய்விட்டது. அதனால் பரீட்சை எழுத முடியவில்லை. நீங்கள் தான் எப்படியாவது, எங்களுக்கு மாற்றுப் பரீட்சை வைக்க வேண்டும் என்று பொய்யை மெய்போல் உருகிச் சொன்னார்கள்.

பேராசிரியரும் ஒப்புக் கொண்டார். அந்த நான்கு மாணவர்களையும் நான்கு வெவ்வேறு அறைகளில் அமர வைத்து பரீட்சை எழுதச் சொன்னார். மாணவர்களுக்கு சந்தோசம். உற்சாகத்துடன் பரீட்சை எழுத உட்காந்தார்கள். முதல் கேள்வி மிகவும் சுலபமாக இருந்தது. மாணவர்கள் அதற்கு விடை எழுதி விட்டு அந்த கேள்விக்கான மதிப்பெண் என்ன என்று பார்த்தார்கள். ஐந்து. சரி என்று அடுத்த பக்கத்தை திருப்பினார்கள். 95 மதிப்பெண்கள் என்ற குறிப்புடன் காணப்பட்ட அந்தக் கேள்வி, அவர்களின் முகத்தை அறைந்தது. அந்தக் கேள்வி– "உங்கள் காரில் எந்த டயர் காற்றுப் போனது?"



காற்றுப் போனது என்று பொய் சொன்னார்களே தவிர.. இப்படி ஒரு கேள்வி வரும், அதற்கு இந்த சில்லுத்தான் காற்றுப் போனது என்று நாலு பேரும் ஒன்று போல் பதிலளிக்க வேண்டும் என்று பேசி வைத்துக் கொள்ளவில்லையே! பொய் என்பது ஒரு தீக்குச்சியைப் போல. அது அந்த கணத்துக்கு மட்டுமே பலன் கொடுக்கும். உண்மை என்பது சூரியனைப் போல. அது வாழ்நாள் முழுதும் மட்டுமல்ல. வாழ்ந்து முடிந்த பிறகும் கூட பலன் கொடுக்கும்.

## தத்துவம்

கடினமான வேலைகளுக்கு சோம்பேறிகளைத் தேர்ந்தெடுங்கள், ஏனென்றால் அவர்களுக்கு தான் அந்த வேலையை எப்படிக் குறுக்கு வழியில் விரைந்து செய்ய முடியும் என்று தெரிந்திருக்கும்.

- பில்கேட்ஸ் -

## உயிர் தப்பிய அதிசய சிறுவன்

பிரிட்டனில் அரிய வகை நோயினால் அவதிப்பட்ட 5 வயது சிறுவன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளான். பிரிட்டனின் விண்டன் நகரைச் சேர்ந்த எலிஸ் என்ற சிறுவனுக்கு வலிப்பு வந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளான்.

இந்த நிலையில் இவனுக்கு வலிப்புக்காக கொடுக்கப்பட்ட மருந்துகள் நாளடைவில் பக்க விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. இதனால் அவனது முகம், கழுத்துப் பகுதிகளில் தோலுரிந்து வீக்கம் ஏற்பட்டதை பார்த்து பதறிய அவனது தாயார் மீண்டும் அவனை மருத்துவமனையில் அனுமதித்துள்ளார். அப்போது சிறுவனுக்கு இரத்தம் கட்டியாகும் அரிய வகை நோய் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து மூன்று வாரங்களாக தீவிர சிகிச்சை பெற்ற எலிஸ், தற்போது பழைய நிலைமைக்கு திரும்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து இவரின் தாயார் கூறுகையில், எனது மகனைக் கட்டிப்பிடிக்க கூட முடியாமல் நான் அவதிப்பட்டேன். தற்போது அவனது உடல்நலம் தேறியது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. மேலும் எலிஸ் சாப்பிட்டு வந்த வலிப்பு மருந்தால் பெரும் சர்ச்சையே எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## உலகின் மூத்த கோமாளி சாவு

உலகிலேயே பழமையான கோமாளி வேடம் போடும் நபரான கிரீக்கி தனது 98 வயதில் உயிரிழந்துள்ளார். அமெரிக்காவில் உள்ள மோண்டானா மாநிலத்தில் வசித்து வந்தவர் கிரீக்மோர்.

இவர் 1916 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி பிறந்தவர். கிரீக்கி தனது 10 ஆவது வயது முதல் கோமாளி வேஷம் அணிந்து குழந்தைகள் உட்பட அனைவரையும் சந்தோஷப்படுத்தி வந்தார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு உலகிலேயே மிக அதிக வயதுடைய கோமாளி கலைஞன் என்ற கின்னஸ் சாதனை படைத்தார். அவரது மனைவி அதே ஆண்டில் மரணம் அடைந்தார். அதன்பின் கோமாளி வேஷம் அணிவதைத் தவிர்த்தார். இந்த நிலையில், இதய நோயால் அவதிப்பட்டு வந்த அவர், பில்லிங்சில் உள்ள தனது வீட்டில் சனிக்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

பொய் சொல்லக்கூடாது என குழந்தையிடம் சொல்லி வளர்க்கும் பெற்றோர்...

தொலைபேசி அழைப்புக்கு பதில் சொல்லச் சொல்கிறார்கள் "வீட்டில் யாரும் இல்லை என..."



## இரட்டை பல்
## அடுக்கு வரிசை



வாய் விட்டு சிரித்தால் 32 பற்களும் தெரிகிறது என்பார்கள். ஆனால் ஒரு சிறுவனுக்கு கூடுதலாக தெரிகிறது. இவரின் பற்கள் இரண்டு வரிசையாகக் காட்சியளிக்கின்றன.

இங்கிலாந்தில் சாக் பிரவுன் என்ற எட்டு வயதுச் சிறுவனுக்கு இது போன்ற கூடுதலான பற்களால் சாப்பிடுவதற்கோ அல்லது வேறு எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் பல் துலக்குவதற்கு மட்டும் கூடுதல் நேரம் செலவாகின்றது.

திமிங்கலத்தை போன்று இரண்டு அடுக்குகளாக பற்கள் உள்ளதால் சிறுவனது நண்பர்கள் அவனை, ஜாஸ் என்று புனை பெயரில் அழைக்கிறார்கள். தற்காலிக பற்கள் முழுமையாக விழுந்து முளைப்பதற்கு காத்திருக்கிறோம். பின்னர் இரண்டு மூன்று வருடங்களில் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டு பற்களை சீரமைக்க உள்ளோம் என்கிறார், சிறுவனது தாயார்.

# வவுனியாவில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

## இடர் முகாமைத்துவப் பிரிவு வழங்குகிறது

வவுனியா, ஒக் .4

வவுனியா மாவட்டத்தில் கடும் மழை, மினி சூறாவளி, மழை வெள்ளம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினால் உதவு தொகை வழங்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகள் காலத்தில் கடும் மழை, மினி சூறாவளி, மழை வெள்ளம் ஆகியவற் றால் பாதிக்கப்பட்ட வவுனியா நகர மக்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 45ஆயிரத்து 122 ரூபாவும், 2013 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 73 ஆயிரத்து 250 ரூபாவும், 2014 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 18 ஆயிரத்து 655 ரூபாவும், வவுனியா தெற்கு பிரதேச மக்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 5ஆயிரத்து 127 ரூபாவும், 2013 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 8ஆயிரத்து 750 ரூபாவும் 2014 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 556 ரூபாவும், வெண்கலச் செட்டிக்குள பிரதேசத்துக்கு 2012 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 32ஆயிரத்து 816 ரூபாவும்,

2013 ஆம் ஆண் டுக்கான கொடுப்பனவாக 31 ஆயிரத்து 450 ரூபாவும், 2014 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 3ஆயிரத்து 475 ரூபாவும், வவுனியா வடக்கு பிரதேசத்துக்கு 2012 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 19ஆயிரத்து 484 ரூபாவும், 2013 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவாக 10 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாகவும், 2012 ஆண்டுக்கு 102 மில்லியன் ரூபாவும், 2013 ஆண்டுக்கு 123.95 மில்லியன் ரூபாவும், 2014 ஆம் ஆண்டுக்கு 22.686 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (த-402)



பேரணியில் சிறுவர்கள்

## போரினால் பாதிக்கப்பட்ட 459 பேருக்கு உதவிகள்

கிளிநொச்சி, ஒக் 4

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் புனர்வாழ்வு அதிகார சபையால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட 459 பேருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 12 ஆம் திகதி கிளிநொச்சிக்கு பயணம் செய்யும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உதவித் தொகைகளைப் பயனாளிகளிடம் கையளிக்கவுள்ளார்.

போரினால் கடுமையாகப் பாதிப்புக்குட்பட்டவர்களுக்கான தலா 1 இலட்சம் ரூபா நிதியுதவியைக் கண்டாவளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 141 பேரும் கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 125 பேரும் பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 52 பேரும் மற்றும் பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 16 பேரும் பெறவுள் ளனர்.

அதேவேளை, அரச உத்தியோகத்தர்களுக்கான நட்ட ஈட்டு கொடுப்பனவான தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொகையை கண்டாவளை பிரதேச செயலகத்தை சேர்ந்த 12 பேர், கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 47 பேர் பூநகரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 11 பேர் மற்றும் பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 11 பேர் பெறவுள்ளனர்.

சாதாரண பொது மக்களுக்கான இழப்பீட்டு தொகையை கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 3 பேரும், கரைச்சிப் பிரதேச செயலக 37 பேரும், பளை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 4 பேரும் பெறவுள்ளனர்.

மேலும், போரால் பாதிப்புற்ற ஆலயங்களுக்கான இழப்பீட்டுத் தொகையான தலா 1 இலட்சம் ரூபாவைக் கண்டாவளையைச் சேர்ந்த 2 ஆலயங்களும், பூநகரி, பளை, ஆகிய இடங்களிலுள்ள தலா 1 ஆலயங்களும் பெறவுள் ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன. (த)



உலக சிறுவர் தினம் வவுனியா மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது சிறுவர்கள் தமது பாதுகாப்பையும் உரிமையையும் வலியுறுத்தி எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் கவனவீர்ப்பு நடைபயண ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தனர். (த)

## பாதுகாப்பான சூழல் வேண்டும் கிளிநொச்சியில் சிறுவர் பேரணி

கிளிநொச்சி, ஒக் 4

பிரமந்தனாறு முன்பள்ளி சிறார்கள் தங்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தித் தருமாறு கோரி போராட்ட ஊர்வலம் ஒன்றை தமது முன்பள்ளி அமைந்துள்ள சூழலில் கடந்த புதன்கிழமை நடத்தினார்கள்.

முன்பள்ளி சிறுவர்களின் பெற்றோர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் சிறுவர் பல கோரிக் கைகளை முன்வைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

முன்பள்ளி அமைந்துள்ள வளாகத்தில் காணப்படும் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 2013 ஆம் ஆண்டு முன்பள்ளி மாணவியொருவர் உயிரிழந்திருந்தார்.

இதனால் தங்களுக்குப் பாதுகாப்பான விதத்தில் கிணற்றை அமைத்து தரவேண்டும். முன்பள்ளியைச் சூழ பாதுகாப்பான வேலிகள் அமைத்து தரவேண்டும் மற்றும் வீதியில் தாங்கள் சென்று வருவதற்கு எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லையெனவும் அவற்றை அமைத்துத் தருமாறும் கோரி முன்பள்ளி சிறார்கள் போராட்டத்தை மேற்கொண்டனர். (கு)

## கற்சிலைமடுவில் ஏர்பூட்டு விழா

ஒட்டுசுட்டான் , ஒக்.4

காடுகளை அழித்து களனிகளாக்க வேண்டுமென்ற நோக்கில் கற்சிலைமடுவில் ஏர்பூட்டு விழா கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸின் ஏற்பாட்டிலும் 64 ஆவது படைப் பிரிவு பிரிகேடியர் ரி.பி லியனகே, 641ஆவது படைப்பிரிவு வனிசுந்தர மற்றும் சுமன் கெட்டியாராச்சி ஆகியோரின் ஆதரவுடனும் இந்த விழா நடைபெற்றது.



கற்சிலைமடு பெருங் கருவேப்ப முறிப்புக்குளத் துக்கு அண்மையாக உள்ள சுமார் 7 ஏக்கர் காணி இராணுவத்தினரால் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு அதனை உழவு இயந்திரங்கள் மூலம் உழுது பண்படுத்தி நெல் விதைக்கப்பட்டது.

அத்துடன் மழை வேண்டி அங்குள்ள விநாயகர் ஆலயத்தில் விசேட பொங்கல் நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசபிரதிச் செயலாளர் எஸ்.குருபரன் பிர தம அதிதியாகக் கலந்து கொண்டார். (த-500)

## வவுனியா நகர சபையினால் பல அபிவிருத்தித் திட்டங்கள்

வவுனியா, ஒக் .4

வவுனியா நகர சபையினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் இவ்வாண்டின் இறுதிக்குள் பூர்த்தியாகுமென வவுனியா நகர சபைச் செயலாளர் க.சத்தியசீலன் தெரிவித்தார்.

வவுனியா நகர சபையால் நெல்சிப் புறநெகும திட்டத்தின் கீழ் சின்னப்புதுக் குளத்தில் சந்தைக் கட்டடத் தொகுதி, உணவு அருந்தும் வசதியுடன் கூடிய மாநாட்டு மண்டபம் அமைத்தல், வவுனியா நகர சபைக்கு அருகில் இடர் முகாமைத்துவப் பிரிவின் அனுசரணையுடனும் வவுனியா நகர சபையின் முயற்சியுடனும் வவுனியா குளத்தை ஆழமாக்குதல், வவுனியா பூந்தோட்டம், பெரியார் குளம் பகுதியிலிருந்து வரும் வெள்ள நீர் வவுனியா குளத்தை அடைவதற்கான வெள்ள வாய்க்கால்களைப் புனரமைத்தல் ஆகிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இறுதிக் கட்டத்தை அடையவுள்ளன.

சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படுவதன் மூலம் சின்னப்புதுக்குளம் மக்கள் தமக்குத் தேவையான நுகர்வுப்பொருள்களை கால தாமதம் இன்றியும் பயணச்செலவுகளை குறைந்த அளவில் பயன்படுத்தியும் கொள்வனவு செய்ய முடியும்.

உணவு அருந்தும் வசதியுடன் கூடிய மாநாட்டு மண்டபம் மூலம் பல்வேறு பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளலாம். குளம் ஆழமாக்குவதன் மூலம் நூற்றுக்கணக்கான விவசாயிகள், மீனவர்கள், அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பலரும் பயன்பெறுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-402)

## வவுனியாவில் கட்டம் கட்டமாக உருளைக்கிழங்கு

வவுனியா, ஒக் .4

வவுனியா மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1000 குடும்பங்களுக்கு கட்டம் கட்டமாக உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.

வவுனியா நகர பகுதியில் உள்ள ஆயிரத்து 824 குடும்பங்களுக்கு 3ஆயிரத்து 489 கிலோகிராம் உருளைக் கிழங்கும், வவுனியா வடக்கு பிரதேச மக்களான 2 ஆயிரத்து 750 குடும்பங்களுக்கு 3 ஆயிரத்து 436 கிலோ கிராம் உருளைக்கிழங்கும், வவுனியா தெற்கு பிரதேச மக்களான 2ஆயிரத்து 726 குடும்பங்களுக்கு 3ஆயிரத்து 532 கிலோகிராம் உருளைக் கிழங்கும், வெண்கலச்செட்டிக்குள பிரதேச மக்களான 2 ஆயிரத்து 700 குடும்பங்களுக்கு 3ஆயிரத்து 501 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் முதற் கட்டமாக வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தில் வவுனியா நகர மக்களுக்கு 3 ஆயிரத்து 645 கிலோ கிராம் உருளைக்கிழங்கும், வவுனியா வடக்கு பிரதேச மக்களுக்கு 3ஆயிரத்து 241கிலோ கிராம் உருளைக்கிழங்கும், வவுனியா தெற்கு மக்களுக்கு 3ஆயிரத்து 728 கிலோ கிராம் உருளைக்கிழங்கும், வெண்கலச் செட்டிகள மக்களுக்கு 3 ஆயிரத்து 600 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் வழங்கப்பட்டுள்ளதோடு, மூன்றாம் கட்டத்தில் வவு னியா பிரதேச மக்களுக்கு ஆயிரத்து 986 கிலோ கிராம் உருளைக்



கிழங்கும், வவு னியா வடக்கு பிரதேச மக்களுக்கு 4 ஆயிரத்து 680 கிலோ கிராம் உருளைக் கிழங்கும், வவுனியா தெற்கு பிரதேச மக்களுக்கு 4ஆயிரத்து 625 கிலோ கிராம் உருளைக்கிழங்கும், வெங்கலச் செட்டிக்குள மக்களுக்கு 4 ஆயிரத்து 625 கிலோ கிராம் உருளைக்கிழங்கும் வழங்கப் படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-402)

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் விசேட கைப்பணிப் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.4
பனை அபிவிருத்திச் சபையால் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கொற்றாவத்தை மற்றும் சமரபாகு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கான விசேட கைப்பணிப் பயிற்சிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ். குடாநாட்டில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமரபாகு, கொற்றாவத்தைக் கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம் மாதிரிக் கிராமமாகப் பனை அபிவிருத்தி சபையால் ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு விசேட கைப்பணிப் பயிற்சி நெறி ஒன்றைச் சபை நடத்தவுள்ளது.

சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைப்பார்.

சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன உற்பத்தியும் சந்தைப் படுததலும் என்ற தலைப்பில் உரையாற்றுவார். சபையின் நிதி முகாமையாளர் பி.தேவராஜா உற்பத்தி கிரயம் என்ற தலைப்பிலும், சபையின் சிறு சுவடுகள் அமைப்பின் தலைவி திருமதி பவானி தங்கத்துரை புதிய வடிவமைப்பு தொழில் நுட்பம் என்ற பொருளிலும் உரையாற்றுவார்கள்.

தொடர்ந்து மூன்று மாத காலத்துக்கு இந்தப் பயிற்சி நெறிகள் நடைபெறும். பயிற்சி முடிவில் பயனாளிகளுக்கு கைப்பணி உபகரணங்கள் வழங்கப்படும். (த-17)

# முதியோர் பராமரிப்பை வலியுறுத்தி ஊர்வலம்

## கைதடியில் 7 ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக்.4
சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பெற்றோரைப் பிள்ளைகளேபராமரிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி கைதடி அரச முதியோர் இல்லத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கைதடிச் சந்தியில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக அரச முதியோர் இல்லத்தை வந்தடையும்.

பெற்றோரைப் பிள்ளைகளே பராமரிக்கவேண்டும் என்ற தொனிப்பொருளில் இந்தவிழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்படுவதோடு, இந்த ஊர்வலத்தில் இல்லப் பணியாளர்கள், முதியோர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று இல்லத்தின் அத்தியட்சகர் என்.கிருபாகரன் தெரிவித்தார்.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டின்போது வாகனங்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல் ஸ்ரிக்கர்களும் அன்றைய தினம் ஒட்டப்படும். முதியோர் வாரத்தின் இறுதி நிகழ்வான அன்றைய தினம் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் முக்கிய நிகழ்வாக நடத்தப்படவுள்ளது.

இறுதி நாள் நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

முதலமைச்சர் இந்த விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை வாகனங்களுக்கு ஒட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம், மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

முதியோர் கௌரவிப்பு, நடனம், முதன்மை, சிறப்பு விருந்தினர்கள் உரை மற்றும் நிகழ்வுகள் இடம்பெறும். (த-17)

## வாள் வெட்டுடன் தொடர்புடைய 8 பேர் கைதாகி விசாரணையில்

யாழ்ப்பாணம், ஒக். 4
கைதடியில் இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் 8 பேர் கைது செய் யப்பட்டு விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர்என்றுசாவகச்சேரிப்பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

சுன்னாகம் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கடந்த செவ் வாய்க்கிழமை இரவு 9 மணி யளவில் அவர்கள் கைது செய் யப்பட்டனர்.

சுன்னாகம் மதுபானக் கடை ஒன்றை அண்மித்து 3 மோட்டார் சைக்கிள்களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஏனையவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் சாவகச்சேரி பொலிஸார் தமது பஸ்ஸில் ஏற்றிச் சென்றனர்.

அவர்கள் தற்போது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் சுன்னாகம் மற்றும் உடுவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். சுமார் 20 இற்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

அவர்களில் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட ஆவா குறூப்பைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களுக்குப் பணம் வழங்கப்பட்டே இந்தத் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் பற்றிய விடயங்களைத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இது வரை பொலிஸாருக்குத் தெரிவிக்கவில்லை.

பணம் கொடுத்து வாள் வெட்டு நடத்தும் கும்பல்களில் ஆவா குறூப், நவம் குறூப் உள்ளிட்டவை இயங்கி வருவதாகவும், ஆனால் அவ்வாறு பணம் கொடுத்து உத்தரவிடுபவர்களைக் கைதானோர் இது வரை காட்டிக்கொடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸாரிடம் கேட்டபோது, அவை தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்று பொலிஸார் கூறுகின்றனர். (த-4)



பருத்தித்துறையில் மகாத்மா காந்தி சிலை நேற்று வியாழக்கிழமை மாலை திறந்துவைக்கப்பட்டது. சுமார் 30 வருடங்களின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் சிலை நிறுவப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா. ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதரகத்தின் பிரதி துணைத் தூதுவர் தட்சணாமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிலையை திரைநீக்கம் செய்து வைத்தார். இந்திய சிற்பாசாரி ஒருவரால் நிர்மாணிக்கப்பட்ட இந்தச் சிலை காந்தியின் பிறந்த தினமான நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (த)

# பெண்களுக்கான பாதுகாப்பு நிலையத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஒக் 4
மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 10 மில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்படவுள்ள பெண்களுக்கான பாதுகாப்பு நிலையத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த புதன்கிழமை அச்சுவேலியில் இடம்பெற்றது.



அச்சுவேலி அரச சான்று பெற்ற சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை வளாகத்தில் இடம் பெற்ற இந்த அடிக்கல் நடும் விழாவில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடிக்கல்லை நட்டார்.

இந்த நிலையம் தொடர்பில் யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருச்சிற்றம்பலம் விஸ்வரூபன் தெரிவிக்கையில்,

துஷ்பிரயோகச் சம்பவங்களால் பாதிக்கப்படும் சிறுமிகள் மற்றும் சிறு வயது தாக்கத்துக்கு உள்ளாகும் பெண்களைப் பராமரிக்கும் பொருட்டே இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டடப்பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும். அதேவேளை, எதிர்வரும் டிசெம்பர் மாதம் அளவில் இதனுடைய கட்டடப்பணிகள் முடிவடைந்து இந்த நிலையம் திறந்து வைக்கப்படும் என்று கூறினார். (த)

## கால்நடைகளின் பயன்பாட்டுக்கு கிளாலியில் இரு நீர்த்தொட்டிகள்

வலி.தென்மேற்கு, ஒக்.4
கிளாலிப் பகுதியில் வரலாற்றில் முதல் தடவையாக கால்நடைகளின் பயன்பாட்டுக்கென 50ஆயிரம் ரூபா செலவில் இரு நீர்த்தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள இரு தொட்டிகளுக்குமான வேலைகள் நேற்று வெள்ளிக்கிழமை விஜயதசமி தினத்தன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கிளாலிப் பகுதியிலுள்ள (ஐந்து பட்டிகள் உட்பட) பல நூற்றுக் கணக்கான கால்நடைகள் மேய்ச்சல் தரையை நாடிச் செல்வது வழக்கம். குளங்களில் நீர் வற்றிய கோடைக் காலப் பகுதியில் குடிதண்ணீரைத் தேடி அலைந்து திரியும் கால்நடைகள் சில சமயங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட சூனியப் பிரதேசங்களுக்குச் சென்று வெடிகளில் அகப்பட்டுஇறந்தும்விடுகின்றன.

கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினை குறித்தும் அவலம் குறித்தும் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்த இந்தப் பகுதி மக்கள் நீர்த் தொட்டிகளை அமைத்துத் தருமாறு கோரியிருந்தனர். இதை அடுத்து இடர் முகாமைத்துவ அமைச்சு இரு நீர்த்தொட்டிகள் அமைப்பதற்கு 50ஆயிரம் ரூபாவைப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதனை அடுத்து இரு தொட்டிகளும் கிளாலியிலுள்ள தாமரைக் குளத்துக்குப் பக்கத்தில் அமைக்கப்படவுள்ளன. கமக்காரக்குழுவினால் அமைக்கப்படவுள்ள இரு தொட்டிகளுக்கான வேலைகள் நேற்றுச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. (த-115)

## அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு போராட்டம்

சிறைகளில் பல ஆண்டுகளாக விசாரணை கள் இன்றி வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி முற்போக்குத் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்தின் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஆரம்பமானது.

குறிப்பிட்ட உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு அது ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் தலைமையில் வந்த பொலிஸ் குழுவினர் கட்சியின் பொதுச் செயலாளருடன் கலந்துரையாடியதுடன் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சில நிமிடங்களில் அந்த இடத்தில் இருந்து திரும்பிச் சென்றனர். (த-86)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021 5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சர்ச்சைகள் அல்ல இப்போது அவசியம்

அகிம்சையா ஆயுதமா சிறந்தது என்கிற சர்ச்சை ஒன்று தமிழ் அரசியல் கதையாடல்களில் மீண்டும் கிளர்ந்துள்ளது. தமிழ், சிங்கள அரசுகளை ஒன்றிணைத்து இலங்கை என்கிற ஒற்றையாட்சியை ஏற்படுத்திய பிரித்தானியர்கள் இங்கிருந்து வெளியேறியதிலிருந்து தமிழர்கள் தாங்கள் இழந்துபோன இறைமையையும் சுதந்திரத்தையும் மீட்பதற்காகப் போராடிக்கொண்டே இருக்கிறார்கள்.

60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்தப் போராட்டத்தில் அரைவாசிக் காலம், அகிம்சை ரீதியிலும் மற்றொரு அரைவாசிக் காலம் ஆயுத ரீதியிலும் கடந்துபோனமை வரலாறு. இந்த இரு போராட்டங்களின் மூலமும் தமிழர்கள் பெற்றதும் இழந்ததும் ஏராளம். இந்த இரு போராட்டங்களும் தமிழர்களுக்கு சில வெற்றிகளையும், பல தோல்விகளையும் கொடுத்திருக்கின்றன என்பதும் வரலாறு. இதில் எதுவும் மேன்மையானது என்கிற முடிவுகளை - வெற்றிகளை வரலாறு விட்டுச் செல்லவில்லை.

அப்படி இருக்கையில் இங்கு அகிம்சையா ஆயுதமா பெரியது என்கிற சர்ச்சை விவாதம் காலப் பொருத்தமற்றது. இனிவரும் காலத்தில் தமிழர்கள் தமது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெறுவதற்கான போராட்ட வழி என்ன என்பதுதான் விவாதிக்கப்படவேண்டியதே தவிர, நடந்து முடிந்துபோனமை பற்றியல்ல.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்த இரு கருத்துக்கள் இந்தப் புதிய சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றன. அவற்றில் ஒன்று வவுனியாவில் தனியார் நிறுவனம் ஒன்றைத் திறந்து வைத்த பின்னர் அவர் தெரிவித்த கருத்து. எமது கனவுகளுக்காக எமது மக்களையும் பிறஇன மக்களையும் பலிகொடுக்க நாம் பின்னிற்கவில்லை என்பதே அந்தக் கருத்து. அதைத் தொடர்ந்து சில தினங்களுக்கு முன்னர் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு இடையிலான கலந்துரையாடலில், கூட்டமைப்பில் உள்ள ஆயுதக்குழுக்கள் சார்ந்து தான் இயங்க முடியாது என்ற ரீதியில் முதலமைச்சர் கூறிய கருத்து மற்றையது.

இவையிரண்டுமே இப்போது அகிம்சை - ஆயுத சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றன. ஈழப் போராட்டக் களத்தில் இந்த இரு வழிகளுமே கையாளப்பட்டிருக்கின்றன. இரண்டுமே நினைத்த இலக்குகளை எட்ட முடியாமல் ஒன்று மற்றொன்றிடம் போராட்டத்தை மாறி மாறி கையளித்திருக்கின்றன. அதாவது தந்தை செல்வா வழியிலான அறப்போராட்டம் எந்த அடைவையும் எட்டாததன் விளைவாகத்தான் அகிம்சைத் தலைவர்கள் ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்தார்கள்; அனுசரித்தார்கள். இப்போது ஆயுதப் போராட்டம் மீண்டும் அகிம்சையிடம் தனது பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஓய்ந்திருக்கின்றது. இன்றிருக்கும் நிலையில் இன்றைய அகிம்சை, மற்றொரு ஆயுதப் போராட்டத்திற்கு வழிவிட்டு ஒதுங்கிவிடும் களநிலை ஒன்று இனி வரவே வராது என்று அடித்துக் கூறிவிடுவதற்கும் இல்லை.

எனவே அகிம்சைவாதிகள்தான் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்துக்குள் தள்ளிவிட்டார்கள்; பின்னர் எப்படி ஆயுதப் போராட்டக்காரர்களைக் குற்றஞ்சொல்ல முடியும் என்றும் -

தனித் தமிழீழம் கேட்டோமே தவிர, எவரையும் ஆயுதம் தூக்கிப் போராடுங்கள், வன்முறையில் ஈடுபடுங்கள் என்று நாங்கள் கூறவில்லை என்றும் -

மாறி மாறிக் குற்றச்சாட்டுக்களைச் ஒரு தரப்பு மறு தரப்பு மீது சுமத்த முடியும். இத்தகைய பிரேத பரிசோதனைகளால் கிடைக்கப்போகும் நன்மை என்று எதுவும் இல்லை. இரண்டு வழிப் போராட்டங்களும் தோற்றுப்போனமைக்கான காரணங்களையும் வெற்றிக்கான வழிவகைகளையும் தேட வேண்டிய நேரத்தில், இருக்கின்ற ஒற்றுமையையும் குலைக்கும் வகையிலான கருத்துக்கள் பயனளிக்கப்போவதில்லை. அதேநேரத்தில் தாங்கள் எண்ணிய உன்னதக் கனவுக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களின் ஈகத்தைக் கொச்சைப்படுத்துவதும் அழகல்ல.

ஒரு தனிமனிதன் எந்தக் கருத்தையும் கொண்டிருப்பதற்கான சுதந்திரத்தையும், தான் விரும்பும் கொள்கை மேலானது என்று வாதிடுவதற்கான உரிமையையும் கொண்டிருக்கின்றான் என்பதை ஒருபோதும் மறுப்பதற்கில்லை. இருந்தாலும் இடம், பொருள் ஏவல் அறிந்து உரைப்பதுதானே கற்றோருக்கு அழகு!

# டெங்கு நோயை ஒழிக்க முடியாதிருப்பது ஏன்?

## திறைசேரி ஒதுக்கிய பணம் வீணானது



சிங்களமூலம்:-
அசுந்தா எதிரிசூரிய (லங்காதீப)
தமிழில் வீ.எஸ்.ரீ

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் தீவிரமற்ற முறையில் முன்னெடுக்கப்படுவதன் காரணமாகவே டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பினம் இப்போதும் நீங்களும் நாமும் வாழும் சூழலில் சுதந்திரமாகத் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அரச ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார், சிவில் அமைப்புக்கள், உள்ளூராட்சிச் சபைகள் போன்றவையும் ஏனைய குறிப்பிடப்படாத தரப்பினரும் தத்தமது நிறுவனங்களால் ஒழுங்கமைக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வந்தபோதிலும், வீட்டுக்கு வீடு சென்று பரிசோதனைகளை மேற்கொண்ட போதிலும், பொதுமக்களுக்கு டெங்குத் தாக்கம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த முயன்றபோதிலும், நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்த போதிலும், டெங்கை இந்த நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துக்கட்ட முடியவில்லை.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் டெங்கினால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாக துறைசார் அதிகாரிகள் பெருமையடித்துக் கொண்டனர். ஆனாலும் டெங்கைப் பரப்பும் நுளம்புகள் சுதந்திரமாகத் தமது அடுத்த இலக்கை நோக்கிச் செயற்படுகின்றன. டெங்கு மரணம் குறித்த புள்ளி விவரங்கள் யாவும் அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றும் வகையிலானதாகும்.

### டெங்கு ஒழிப்புத் திட்டங்கள்

டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவது இன்று சாதாரண நிகழ்ச்சியொன்றாக ஆகிவிட்டமைக்குக் காரணம் அத்தகைய முயற்சி இன்று பெறுமதியற்றதொன்றாக ஆகி விட்டுள்ளமையே ஆகும். சிறியதொரு எண்ணிக்கையானோரால் முன்னெடுக்கப்படும் இந்த டெங்கு ஒழிப்பு வார நடவடிக்கைகள் பொதுமக்களை சிரமத்துக்கு உள்ளாக்குவதாகவும், மிரட்டி அச்சுறுத்துவதாகவும் அமைந்து விடுகின்றன. இதன் காரணமாக, அந்தச் செயற்பாட்டாளர்களின் அதிகாரத்தனம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்கூட முறையிடும் அளவுக்கு பொதுமக்கள் தொல்லைகளை எதிர்நோக்க நேர்கிறது.

முன்னைய காலத்தில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விதத்தில் இன்று அத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதில்லை. சூழல் சுற்றாடலைச் சுத்தமாகப் பேணாமைக்காக பொதுமக்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதும், தண்டம் விதிப்பதும் பொதுமக்களுக்கு மேன்மேலும் சிரமத்தை ஏற்படுத்துமொன்றாக இந்த நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையை ஆக்கி வைத்துள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரப்படி, இந்த ஆண்டின் ஆரம்பம் முதல் செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை டெங்கு நுளம்புப் பெருக்கம் உள்ள இடங்களாக 71,325 இடங்கள் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 10,442 இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெங்கு ஒழிப்புத் தொடர்பான பரப்புரைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் அளவுக்கு அதற்கான நேரடிச் செயற்பாட்டுக்கு வழங்கப்படவில்லை என்பது பரவலாக முன்வைக்கப்ப படுமோர் குற்றச்சாட்டாகும்.

நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளில் டெங்கு நோய்க்கான விசேட சிகிச்சைப் பிரிவுகளை உருவாக்க திறைசேரியால் ஒதுக்கி வழங்கப்பட்ட மில்லியன் ரூபா கணக்கான நிதி தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்துக்கான பரப்புரைச் செயற்பாடுகளுக்கு செலவு செய்யப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கியூபா நாடு, பி.ரீ.ஐ.பக்ரீறியாக்களைப் பயன்படுத்தி டெங்கு நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தியமை போன்று இந்த நாட்டிலும் டெங்குநோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த பொறுப்பான அதிகாரத் தரப்புக்கள் எந்த அடிப்படையில் தீர்மானித்தன என்பது கேள்விக்கு உரியதொன்றே. பெரும் பரப்புரையின் மத்தியில் 2013 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபா செலவில் பீ.ரீ.ஐ.பக்ரீறியாக்களை 10ஆயிரம் லீற்றர் அளவில் இறக்குமதி செய்து ஆகாயத்திலிருந்து பல பகுதிகளுக்கு விசிறிய போதிலும் அதனால் எதிர்பார்த்த பயனைப் பெற இயலாது போயிற்று. அத்துடன் உரிய காலத்துள் அதனைப் பயன்படுத்தாது அதன் பாவனைக் காலம் முடியும் வரை அதனைக் களஞ்சியப்படுத்தி வைத்ததன் மூலம் அது பாவனைக்கு உதவாத நிலை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. கடைசியில் குறிப்பிட்ட பீ.ரீ.ஐ.பக்ரீறியாவை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதி மூலம் குறிப்பிட்ட அதிகாரத் தரப்பினர் பெருமளவு பணத்தை தரகுப் பணமாக பெற முடிந்தமையே இந்த நடவடிக்கை மூலம் கிட்டிய பலனாகும்.

அதேசமயம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கெனக் கூறிய புகையூட்டும் இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் மூலம் தரகுப் பணமாகப் பெருந்தொகைப் பணத்தை தேடிக் கொண்ட அதிகாரிகள் குறித்தும் தகவல்கள் வெளியானமை எமக்கு ஞாபகத்தில் உள்ளது. அதேசமயம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் அனுபவம் வாய்ந்த- புகையூட்டல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதும் இந்த நடவடிக்கையை வெற்றிகரமாக செயற்படுத்த இயலாது போனமைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் தொழில்நுட்பத்திறன் வாய்ந்த சிற்றூழியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து இந்த விடயத்தில் துரித செயற்பாடுகளை அக்கறையுடன் மேற்கொள்ளச் சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் தவறியமையும் டெங்கு நுளம்புகள் பல்கிப் பெருக ஒரு காரணமாக அமைந்தது.

உலகின் பல நாடுகள் டெங்கு பரவும் சூழலுள்ள இடங்களை அழித்தொழிப்பதற்குப் பதிலாக டெங்கு நுளம்புகளின் வாழ்க்கை வட்டத்தை ஆய்வு செய்து விஞ்ஞான ரீதியில் அவற்றின் பரவலையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வந்தன. ஆனால் இலங்கையில் இதற்கு முற்றிலும் எதிர்மாறான விதத்திலேயே இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. டெங்கு நுளம்புகள் எங்கெங்கு பல்கிப் பெருகும் நிலை காணப்படுகிறதோ அந்த இடங்களிலுள்ள பொருள்களை அழித்தொழிக்கும் விதத்திலான செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டன. டெங்கு பரவக்கூடிய சூழலில் காணப்படும் பொருள்களை அப்புறப்படுத்தும் அதேவேளை டெங்கு நுளம்பும் குடம்பிகளை அழித்தொழிக்க விஞ்ஞான் பூர்வ செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதொன்றாகும். ஆனால் எமது நாட்டில் அத்தகைய முறைப்படியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

**கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் டெங்கினால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளதாக துறைசார் அதிகாரிகள் பெருமையடித்துக் கொண்டனர். ஆனாலும் டெங்கைப் பரப்பும் நுளம்புகள் சுதந்திரமாகத் தமது அடுத்த இலக்கை நோக்கிச் செயற்படுகின்றன. டெங்கு மரணம் குறித்த புள்ளி விவரங்கள் யாவும் அப்பாவிப் பொதுமக்களை ஏமாற்றும் வகையிலானதாகும்.**



# ஜெயலலிதா சிறை வைக்கப்பட்டது ஏன்?

## சுப்பிரமணியன் சுவாமி பதில்

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் கதாநாயகன் சுப்பிரமணியன் சுவாமி. இவர்தான் முதலில் முறைப்பாடு செய்தவர். ஜெயலலிதாவுக்குத் தண்டனை அறிவிக்கப்பட்ட செப்ரெம்பர் 27 ஆம் திகதி சுவாமியும் பெங்களூரில்தான் இருந்தார்.

இந்தத் தண்டனை குறித்து சுப்பிரமணியன்சுவாமி தமிழக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேரகாணல்.

**தீர்ப்புத் தினத்தன்று எதற்காக பெங்களூருக்குப் போனீர்கள்?**

ஏதாவது அவசர சூழ்நிலை ஏற்பட்டு முறைப்பாட்டுக்காரர் என்ற முறையில் திடீரென்று என்னைச் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அழைத்தால்...? இதற்காகவே, பெங்களூர் ஐ.ஐ.எம் இல் 'இந்தியன் ஐடென்டி' என்ற தலைப்பில் பேச ஏற்பாடு செய்தேன்.

மதியம் ஒரு மணி அளவில் விமானநிலையத்தில் வந்து இறங்கி, காரில் போகும் போது, 'ஜெயலலிதா குற்றவாளி', என்று தகவல் சொன்னார்கள். அப்போதுதான் நீதிபதி மீதிருந்த மதிப்பு ஒரு படி உயர்ந்தது.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை நான் இத்தனை வருடங்களாகக் கண்காணித்து வந்தேன். ஏதேதோ காரணம் சொல்லி இழுத்தடித்தார்கள். நிறையப் பொய் சொல்லி நீதிமன்றத்தில் மாட்டிக் கொண்டார்கள். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். ஜெயலலிதா மாதிரியே ஊழல் செய்த குற்றத்துக்காக, சோனியாவும் ராகுலும் நிச்சயமாகச் சிறைக்குப் போவார்கள். நான் போக வைப்பேன்.

**தீர்ப்பு இப்படித்தான் வரும் என்று எதிர்பார்த்தீர்களா?**

ஒரு ரூபாய்தான் அரசாங்க சம்பளம் வாங்கினார் ஜெயலலிதா. ஆனால், 66 கோடி ரூபாய் அளவுக்குச் சொத்துச் சேர்த்தார். எங்கேயிருந்து பணம் வந்ததென்றால், நான்கு வருடங்களாக அவர்களுடைய ஹைதராபாத் திராட்சைத் தோட்டத்தில் கிடைத்த வருமானம் என்று சொன்னார்கள். ஒரு ஹெக்ரேயர் நிலத்தில் திராட்சை உற்பத்தி அவ்வளவு வருமா? அப்படி உலக அளவில் சாதனை செய்த விவசாயி பிரான்ஸில் இருக்கிறார். அவர் எவ்வளவு உற்பத்தி செய்தாரோ, அதைவிட 10 மடங்கு அதிகமாக ஜெயலலிதா கணக்குக் காட்டினார். அதுதான் பெரிய நகைச்சுவை. இதை நான் ஆரம்பத்திலேயே நீதிமன்றத்தில் சொன்னேன். அதன்பிறகுதான், நீதிமன்ற நடவடிக்கைகள் துரிதமாகின. இப்போது தீர்ப்பு வந்துவிட்டதே என்று நான் சும்மா இருக்கப்போவதில்லை. ஜெயலலிதா மீது வருமான வரித்துறை போட்ட வழக்கு உள்ளதே? அதைப் பொறுத்திருந்து பாருங்கள். அதிலும் தண்டனை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**இதெல்லாமே அரசியல் பழிவாங்கல் காரணமாகப் போடப்பட்ட வழக்கு என்கிறார்களே?**

முன்பெல்லாம் ஜெயலலிதாவுக்கு தேசபக்தி இருந்தது. விடுதலைப்புலிகள் விவகாரத்திலும் வைகோவை 'பொடா' வில் பிடித்து சிறையில் வைத்த போதும் அவரது நடவடிக்கைகள் நன்றாக இருந்தன. 1996இல் என்னுடைய பிறந்த நாளுக்கு எனது வீட்டுக்கே வந்தார். அப்போது நான் அவரிடம் ஐ.ஏ.எஸ். அலுவலர் சந்திர லேகா மீது அசிட் வீசிய விவகாரம் பற்றிப் பேசினேன். அவர் சொன்ன பதிலில் எனக்குத் திருப்தி இல்லை. அப்போது நான் அவரிடம், நான் போட்டிருக்கும் எந்த வழக்கையும் வாபஸ் பெற மாட்டேன். ஆனால் கருணாநிதியை வீழ்த்த உங்களுடன் அரசியல் ரீதியாக ஒத்துழைப்பேன் என்று சொன்னேன். அதற்கு அவரும் சம்மதித்தார். ஆனால் இப்போது ஜெயலலிதாவுக்குத் தண்டனை கிடைக்க, கடவுளின் சாபமும் ஒரு காரணம். இந்து மதத் தலைவர் ஜெயேந்திரரை சிறையில் வைத்தார். கைதிகளுடன் அவரை சேர்த்துவைத்த சம்பவத்தை நினைத்தால் நெஞ்சு பதறுகிறது. அவரை நான் வேலூர் சிறையில் போய் பார்த்தபோது சோகமாக இருந்தார். இனி ஜெயலலிதாவுக்கு அரசியல் அதிகாரமே இல்லை!

**மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் திடீரென ஜெயலலிதாவை வந்து பார்த்தாரே?**

தீர்ப்புக்கு முன்னர் பல்வேறு ஊகங்கள் கிளம்பின. நான் பிரதமர் மோடியிடம் நேரடியாகக் கேட்டேன்.



மோடி



சுப்பிரமணியன் சுவாமி

இந்த வழக்கில் ஜெய லலிதாவுக்கு ஏதாவது உதவி செய்யப்போகிறீர்களா? என்று. அவர், சட்டம் தன் கடமையைச் செய்யும் என்று சொல்லிவிட்டார்.

**தீர்ப்பு வெளியானதும் தமிழகத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்களை பி.ஜே.பி. எப்படிப் பார்க்கிறது?**

தமிழக நிலவரத்தை உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் தெரிவித்தேன். சட்டம் - ஒழுங்கு நிலவரம் பற்றி அறிக்கை கேட்டிருப்ப தாகச் சொன்னார். அதன்பிறகுதான், ஆளுநர் இங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தியிருக்கிறார். மக்களைப் பாதிக்கின்ற அளவுக்கு சட்டம்-ஒழுங்குநிலைமை தமிழகத்தில் தொடர்ந்து நீடித்தால், சட்ட சரத்து 356-யைப் பயன்படுத்த வேண்டிவரும் (மத்திய அரசின் ஆட்சி) என்று அஸ்திரம் வீசியபடி முடித்தார்.

(நன்றி: விகடன்)

# தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து காட்டிய சர்வோதய தொண்டர் திருநாவுக்கரசு

பேராசிரியர்
கா.குகபாலன்.

ஆன்மிகத் தலைவர்களான சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், யோகர் சுவாமிகள் போன்றோரின் கருத்துக்களை உள்வாங்கி அவர்கள் வழி சென்று பிறந்த மண்ணுக்காக வாழ்நாளை அர்ப்பணிப்புச் செய்தவர். எமது தாயகமாம் வடக்கு, கிழக்கில் கிராம இராஜ்யத்தை காண்பதற்குத் தனது வாழ்நாளைத் தியாகம் செய்து அதற்காகப் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தியவர். தமிழ் கூறும் நல்லுலகில் மக்கள் வறியவர்களாக வாழக்கூடாது என்பதற்காகப் பல்வேறு பொருளாதார சமூக, பண்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுத்து அவர் தம் வாழ்வுக்கு வழிகாட்டியவர். இவ்வுலகில் உதித்த எந்த ஜீவராசிகளும் இயற்கை மரணத்தைத் தவிர அகால மரணத்தைத் தழுவாது தவிர்ப்பதற்காக ஜீவ காருண்ய திட்டங்களை வகுத்து செயற்பட்டவர். குறிப்பாக உணவின்றி நீரின்றி இந்த உலகில் பரிதவிக்கும் கால்நடைகளுக்கு உணவு மற்றும் நீர் வழங்கி அவைகளின் ஆயுளைக் கெட்டியாக்கியவர். வடபுலத்தில் பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பங்களை இனங்கண்டு அவர்கள் வாழ்வு சிறக்க சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவர்களது வாழ்வு சிறக்கச் செயற்பட்டவர். அவர்தான் அமரர் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு.

நெடிதுயர்ந்த தோற்றம், நேரான பார்வை, துணிச்சலான சுபாவம், தளராத மன உறுதிமிக்கவர்தான் தொண்டர் திருநாவுக்கரசு. புங்குடுதீவுக் கிராமத்தில் 01.03.1939ஆம் ஆண்டு கந்தையா- பார்வதிப் பிள்ளை தம்பதியினரின் தவப் பேறாக வந்துதித்தவர். இவர் தனது பள்ளிக் கல்வியைப் பூர்த்தி செய்த நிலையில் தனது கிராமத்தில் பொருளாதார சமூக ரீதியில் கணிசமான மக்கள் நலிவுற்றவர்களாக இருப்பது கண்டு வேதனைப்பட்டு அவர்களின் வாழ்வின் மேம்பாட்டுக்குத் தன்னாலான உதவிகளை வழங்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு இளைஞர் கழகம், கிராம முன்னேற்றச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராம சபை போன்ற அமைப்புகள் ஊடாக செயற்பட்டு கணிசமான முன்னேற்றத்தைத் காண வழி சமைத்தவர்.

1950களின் நடுப் பகுதியில் இலங்கை அரசால் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியைப் பொறுத்துக் கொள்ள முடியாதநிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து சத்தியாக்கிரகப் போராட்டம் உட்பட பல்வேறு போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி இனவிடுதலைக்காகத் தனது பங்கைச் செலுத்திய தொண்டர் திருநாவுக்கரசு, காலப்போக்கில் அந்தக் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளராகக் கடமையாற்றி இளைஞர்களைக் கட்சிக்குள் உள்வாங்கிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார்.

வாழ்வுக்காகப் போராடி வரும் மக்களுக்கு அரசியலூடாக சேவையாற்றுவதில் உள்ள இடர்பாடுகளை தனது அனுபவத்தினூடாக அறிந்து அரசியல் பாதையிலிருந்து விலகி 1970 ஆம் ஆண்டு இலங்கை சர்வோதய அமைப்பில் இணைந்து

**தீவுப்பகுதியில் தொடர்ச்சியாக நிலவி வரும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு பல்வேறு வழிகளில் உழைத்தவர். குறிப்பாக நன்னீர் படுக்கையுள்ள சாட்டி யில் காணியை கொள்வனவு செய்து கிணற்றை வெட்டி நன்னீரை வழங்கி வருவதற்கு முன்னோடியாக விளங்கியவர்.**

மக்கள் சேவையே மகேசன் சேவை எனச் செயற்பட்டார். தனது மக்கள் பணியில் பல வெற்றிகளையும் கண்டவர். இருப்பினும் தன்னால் முன்னெடுக்கப்படும் வரும் நலத்திட்டங்களை அந்த அமைப்பின் ஊடாக நிறைவேற்றிக்கொள்வதிலிருந்த இடர்பாடுகளை அறிந்து கொண்ட தொண்டர், 1984ஆம் ஆண்டு வட இலங்கை சர்வோதயம் என்ற அமைப்பை ஆரம்பித்து துரிதமாக மக்கள் பணியை மேற்கொண்டார். இந்தக் கால கட்டத்தில் இலங்கை சர்வோதய அமைப்பு வட பகுதிக்கான நிதியுதவியை நிறுத்திக்கொள்ளவே 400 இற்கு மேற்பட்ட சர்வோதய சேவையாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதிருக்க சிறுகைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள், வீட்டுத் தோட்டம், நியாய விலைக் கடைகள், சிறப்புச் சந்தைத் திட்டம் போன்ற பலவற்றில் அவர்களை ஈடுபடுத்தி அவர்தம் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திய பெருமைக்குரியவராக விளங்கினார்.

வடஇலங்கை சர்வோதயத்தின் வளர்ச்சியானது மக்கள் நலன் சார்ந்ததாக இருந்துள்ளமையால் அதன் அங்கத்துவ பலம் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு சென்றது. வன்னி, யாழ்ப்பாணக் குடாநாடு, தீவகம் எனப் பல்வேறு பகுதிகளில் அன்னாரால் பல்வேறு நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதால் மக்களின் வாழ்வாதார நிலையில் முன்னேற்றம் காணப்பட்டிருந்ததை எம்மால் அறியக் கூடியதாகவிருந்தது. இவை தவிர புங்குடுதீவு உட்பட்ட தீவகத்தில் வீதி விஸ்தரிப்புத்திட்டம், கேரதீவு பசுமைத்திட்டம், மர நடுகைத் திட்டம் போன்ற பலவற்றை மக்கள் ஆதரவுடன் மேற்கொண்டு அவற்றில் வெற்றியும் கண்டார். இவை தவிர நல்லூர் உற்சவ காலத்தில் காலை 4 மணி முதல் நேர்த்திக் கடன் செலுத்த வரும் அடியார்களுக்குக் கோப்பிப் பானம் வழங்கியும் அதனைத் தொடர்ந்து தாகசாந்தி செய்ததையும் அடியார்கள் இன்று வரை நினைவு கூருகின்றனர். தீவுப்பகுதியில் தொடர்ச்சியாக நிலவி வரும் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பல்வேறு வழிகளில் உழைத்தவர். குறிப்பாக நன்னீர் படுகையுள்ள சாட்டியில் காணியைக் கொள்வனவு செய்து கிணற்றை வெட்டி நன்னீரைப் பெற்றுக்கொள்ள முன்னோடியாக விளங்கியவர். இவரது முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் புலம்பெயர் உறவுகள் தண்ணீர் பவுஸர்களை வழங்கி இந்த வேலைத் திட்டத்துக்குத் தற்போது உதவிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கோடை காலங்களில் நீரின்றி மடியும் கால்நடைகளுக்கு நீரையும், உணவையும் வழங்கி அவற்றை இறப்பிலிருந்து தடுப்பதற்கான செயற்றிட்டத்தை செயற்படுத்தியதனால் பலநூற்றுக்கணக்கான கால்நடைகளைக் காப்பாற்ற முடிந்தது. தற்போது கிராமம் முழுவதும் கால் நடைகளுக்காக நன்னீர் தொட்டிகளை அமைத்து வட இலங்கை சர்வோதயம் அவற்றைக் காப்பாற்றி வருகின்றது.


அமரர் தொண்டர் அவர்கள் தனது வாழ்வைத் தனக்காக அன்றி மக்களுக்கான சேவையில் 2001 ஆம் ஆண்டு வடபுலத்துக் கிராம மக்களின் பொருளாதார சமூக நலத்திட்டங்களைக் கொழும்பில் வட இலங்கை சர்வோதயத்தை நேசிக்கும் அன்பர்களுடன் இணைந்து தயாரித்துக் கொண்டிருந்தபோது மாரடைப்புக் காரணமாக இவ்வுலக வாழ்வை நீத்தார். அமரர் திருநாவுக்கரசு தான் இல்லாத காலத்தில் தான் செய்த பணியைத் தொடர்வதற்காக தனது தங்கைகளான செல்வி க.புஸ்பமணி, செல்வி பொ.ஜமுனாதேவி ஆகியோரைப் பயிற்றுவித்ததன் பயனாகத் தற்போது வட இலங்கை சர்வோதயம் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கு அமரர் தொண்டரின் தீர்க்க தரிசனமே காரணமாகும். வட இலங்கை சர்வோதயத்தின் தொடர்ச்சியான மக்கள் நலத்திட்டங்கள் அவற்றின் செயற்பாடுகள் மக்களைச் சென்றடைதல் என்பனவே அவர் வாழ்நாளில் ஆற்றிய பணிகளுக்கு முத்தாரமாக விளங்கும் எனலாம்.

# நவீன தொழில்நுட்பத்துடன் புதுமையான கையுறை

Dextra Robotics நிறுவனம் Dexmo எனப்படும் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட கையுறை ஒன்றை உருவாக்கி வருகின்றது. இது தொடர்பான தகவல்களை இந்த வாரம் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அக்கையுறையானது வழமையான கையுறைகளைப் போல் அல்லாது புற வன்கூடு போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக Virtual Reality எனப்படும் சூழலில் உள்ள பொருள்களை தொட்டு அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

மேலும் இச்சாதனத்தை STEM கட்டுப்பாடு எனப்படும் விசேட முறைமையுடன் இணைத்து பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 5 | 9 | | 1 | | | 6 |
| | | | | | | | | 4 |
| | 4 | 2 | | 5 | | 7 | 9 | 8 |
| | | 6 | 1 | | | | 2 | |
| | | | 8 | 2 | 4 | | | |
| | 2 | | | | 6 | 9 | | |
| 2 | 3 | 4 | | 6 | | 8 | 1 | |
| 9 | | | | | | | | |
| 6 | | | 2 | | 8 | 3 | 4 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 5 | 4 | 9 | 2 | 7 | 1 |
| 9 | 2 | 1 | 7 | 8 | 6 | 3 | 4 | 5 |
| 4 | 7 | 5 | 3 | 1 | 2 | 8 | 6 | 9 |
| 1 | 9 | 4 | 8 | 2 | 3 | 7 | 5 | 6 |
| 5 | 6 | 8 | 1 | 9 | 7 | 4 | 3 | 2 |
| 7 | 3 | 2 | 4 | 6 | 5 | 1 | 9 | 8 |
| 3 | 4 | 9 | 2 | 5 | 1 | 6 | 8 | 7 |
| 8 | 1 | 6 | 9 | 7 | 4 | 5 | 2 | 3 |
| 2 | 5 | 7 | 6 | 3 | 8 | 9 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....
### உண்மையான குரு



ஆன்மிக சக்தியின் களஞ்சியமாக அவ்வப்போது உலகில் பிறந்து குருசீட பரம்பரை மூலம் ஆன்மிக ஆற்றலைப் பாய்ச்சுபவரே உண்மைக் குரு. வேகமிக்க ஆறு தன் பழைய பாதையை விட்டு விலகிப் புதிய பாதை ஒன்றில் செல்வது போல இந்த ஆன்மிகச் சக்தியின் ஓட்டம் அவ்வப்போது திசை மாறுகிறது. மதங்களிலும் பழைய கொள்கைகள் காலப்போக்கில் உயிரிழந்து களையிழந்து மங்குவதும் புதுப்புதுக் கொள்கைகள் உயிர் பெற்று தோன்றுவதையும் காண்கிறோம். உயிர் ததும்பும் கொள்கையையே விவேகிகள் பின்பற்றுகிறார்கள். உயிரற்ற பழைய கொள்கைகள் மிருகக் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ள விலங்குகளின் எலும்புக்கூடு போன்றவையே. அவற்றுக்குரிய மதிப்பை நாம் அளிக்க வேண்டும். சுவையான மாம்பழத்தை விரும்புபவனின் விருப்பத்தை பட்டமரத்தினால் நிறைவேற்ற முடியாது. அதுபோல உயர்ந்த ஒன்றை அடையவேண்டும் என்னும் ஆன்மாவின் ஆவலை இந்த பழைய கொள்கைகளால் நிறைவேற்ற முடியாது.

என்னிடம் ஆன்மிக ஞானம் இருக்கிறது என்னும் ஆணவத்தை முதலில் அழிக்க வேண்டும். நம்மை முழுவதும் குருவிடம் ஒப்படைத்துவிட்டு அவர் காட்டும் வழியை பின்பற்ற வேண்டும். நம்மை நிறை நிலைக்கு அழைத்துச் செல்லும் வழி என்பது குருவுக்கு மட்டுமே தெரியும். இந்த விடயத்தில் நாம் முழுக் குருடர்களே நமக்கு ஒன்றுமே தெரியாது. இத்தகைய பணிவே நம் மனக் கதவைத் திறந்து ஆன்மிக உண்மைகளைக் காட்டும். நம்மிடம் ஆணவம் ஒருதுளி இருந்தாலும் நம்மால் உண்மையை அறிய முடியாது. இந்த ஆணவப்பேயை மனதிலிருந்து விரட்ட எல்லோரும் முயலவேண்டும். பரிபூரண சரணாகதியே ஆன்மிக ஒளி பெற ஒரே வழி.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: மனதில் உற்சாகம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமான பலன்தரும். எதிலும் தயக்கம் காட்டமாட்டீர்கள். கண்மூடித்தனமாக எதிலும் ஈடுபடாமல் சிந்தித்துச் செய்வது நல்லது.



**இடபம்**: தொழில் வியாபாரம் தொய்வு நீங்கி சூடு பிடிக்கும். நிதிப் பிரச்சினை நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதையும் குழப்பத்துடனேயே செய்ய நேரிடும். சக ஊழியர்களிடம் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது.



**மிதுனம்**: குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் நீங்கி நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகும். பயணங்களில் கவனம் தேவை. சகோதரர்களிடம் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எதிலும் தயக்கம் காட்டாமல் துணிச்சலாக காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.



**கடகம்**: காரியதாமதம் ஏற்படும். வீண்கவலை இருக்கும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் முன் நன்றாக ஆலோசனை நடத்தவும். மற்றவர்களால் மனக் கஷ்டம் ஏற்படும். அடுத்தவர்கள் கடமைக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது.



**சிங்கம்**: உத்தியோகத்தர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாகப் பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள்.



**கன்னி**: அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட தூர தகவல்கள் நல்லவையாக இருக்கும். அதிக கோபத்தால் வீண் பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிச் செல்வது நல்லது.



**துலாம்**:உங்களது மதிப்பும், கௌரவமும் உயரும். குடும்பத்தில் வீண் பிரச்சினையால் மனக்குழப்பம் ஏற்படலாம். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் தடைகள் ஏற்படலாம். எதையும் ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்துச் செய்வது நல்லது.



**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி சுமை உண்டாகும். சக ஊழியர்கள் மேலதிகாரிகளிடம் பேசும்போது கவனம் தேவை.



**தனுசு**: பேசாமல் சென்றால் கூட வீண் பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். பிள்ளைகளிடம் கவனமாக இருப்பது நன்மை தரும். பயணங்களில் எதிர்பாராத தடங்கல் உண்டாகலாம். சிந்தித்துச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன்தரும்.



**மகரம்**: தன்னம்பிக்கை அதிகரிக்கும். பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். ஆனாலும் எதிலும் எச்சரிக்கையாக பேசுவது நல்லது. வீண் செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும்.



**கும்பம்**: தேவையான பண உதவி கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல்சோர்வு உண்டாகலாம். சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.



**மீனம்**: முக்கிய நபரின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். திட்டமிட்ட காரியங்கள் நன்றாக நடந்து முடியும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி சிறப்பாக நடக்கும். மேலிடத்தின் பாராட்டைப் பெறுவீர்கள்.

### நாளை

**புரட்டாதி-19 ஞாயிற்றுக்கிழமை | 05.10.2014**

திதி: துவாதசி மு.இ.11.39வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.02.50 வரை
சுபநேரம்:09.02-10.32 வரை
இராகுகாலம்:04.32-06.02 வரை

# தேசியமட்ட தடகளப் போட்டி பதக்க மழையில் வட மாகாணம்



யாழ்ப்பாணம்,ஒக்.4
அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி சார்த்வீகா, மகாஜனக்கல்லூரி மாணவன் றிசோத் ஆகியோர் தங்கப் பதக்கத்தை சுவீகரிக்க, ஏனையவர்களும் வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றெடுக்க வட மாகணத்துக்கு பதக்க மழை பொழிந்து தள்ளியது.

நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தேசிய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலுன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி சார்த்வீகா 2.60 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென் றெடுத்தார். 21 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் றிசோத் 3.95 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

இதேவேளை- 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டுஎறிதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி தர்சிகா 30.01 மீற்றம் தூரம் எறிந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவி மேரி நிலக்சனா 2.35 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து மூன்றாமிடத்தைப் பெற்று. வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இதே வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி டிலானி 2.50 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை வென்றார். 21வயதுப்பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் ஜனாந்தன் 3.60, 3.95 மீற்றர் உயரங்களைக் கடந்து வர்ண விருதையும், 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் சுயூஷாந் 46.21 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ண விருதினையும் பெற்றுள்ளனர். 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் பளை மத்திய கல்லூரி மாணவி சுகிர்தா 1.52 மீற்றர் தூரத்தைப் பாய்ந்து வர்ண விருதைப் பெற்றார்.

(ரி- 23)

## அல்ஜின்னா கிரிக்கெட் சுற்றுப் போட்டி



நீராவிப்பிட்டி முள்ளியவளை அல்ஜின்னா விளையாட்டுக் கழகம் நடத்தும் 10-பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான மென் பந்தாட்டக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை மாமூலை டயமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் சுற்றுப் போட்டியில் முல்லைத்தீவில் பதிவு செய்யப்பட்ட 15 கழகங்கள் பங்குகொள்கின்றன. நாளை 5ஆம்.திகதி ஞாயிற்றுக்கிழமை கால், அரையிறுதியாட்டங்களும், 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறுதியாட்டமும் நடைபெறவுள்ளன. (ரி)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.4
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.4
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை இடம்பெறும் லீக் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

கரணவாய், ஒக். 04
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:
பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி-108)

## வெற்றிக் கிண்ணம் கையளிப்பு

வடமாகாண மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் சம்பியனாகிய யாழ்.மாவட்ட அணியின் வெற்றி கேடயம் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.
நடந்து முடிந்த வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலானவளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகியிருந்ததுடன், இரண்டாமிடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றுக்கொண்டது.
சம்பியன் கிண்ணத்தை பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்ட அணிக்கான வெற்றிக்கிண்ணம் மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.மோகனதாஸினால் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டது. (ரி)

## நவிண்டில் உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,ஒக்.4
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி அணிகளின் விவரங்கள் வருமாறு:
முதலாவது ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் கோல்களைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## வென்றது றேஞ்சர்ஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.4
உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

## சமரபாகுவை வீழ்த்தியது உடுப்பிட்டி நவஜீவன்ஸ்

கரணவாய், ஒக். 04
பரபரப்பான ஆட்டங்களில் வெற்றி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம்
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
அதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் மோதின. இடைவேளை வரை மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கோல் போடுவதற்கு இரு அணியினரும் படாதுபாடு பட்டனர். இருந்த போதும் 23ஆவது நிமிடத்தில் நியூட்டன் அணி வீரர் ஒருவர் தமது கோல் பகுதியில் வைத்து பந்தை கையால் தடுத்ததால் எதிர் அணியினருக்கு தண்டனை உதை வழங்கப்பட்டது. இதனை தக்க முறையில் பயன்படுத்தி நவஜீவன்ஸ் அணி வீரர் உசானந் தனது அணிக்கான முதலாவது கோலைப்பெற்றுக் கொடுத்தார்.
இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்பின் உச்சக் கட்டத்தை அடைந்தது. இரு அணி வீரர்களும் மிகுந்த நேர்த்தியுடன் ஆட்டத்தில் பங்குபற்றினர்.
இந்தச் சூழ்நிலையில் 50 ஆவது மற்றும் 52ஆவது நிமிடங்களில் பொபிநாத், சங்கர் ஆகியோரின் உதவியுடன் இரு கோல்களைப் பெற நவஜீவன்ஸ் அணியின் வெற்றி உறுதியானது. இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது.
இதேவேளை - கடந்த புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகமும், சவாற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதின.
மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம். அந்த அணி சார்பாக வைத்தி ஒரு கோலைப் போட்டார். (ரி-108)

# ஆசிய விளையாட்டில் தங்கம் இலங்கைக்கு

ஏற்கனவே மகளிர் கிரிக்கெட் அணியினர் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்த நிலையில் தங்கத்தைக் கைப்பற்றுடன் முனைப்புடன் இறுதியாட்டத்தில் விளையாடிய இலங்கை கிரிக்கெட் ஆண்கள் அணி இலங்கையின் தங்கக் கனவை 12 வருடங்களின் பின் நனவாக்கியது.

தென்கொரியாவின் இன்ச்சியான் நகரில் நடைபெற்றுவரும் 17ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில், நேற்று நடைபெற்ற ரி- 20 கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை அணி ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக தரங்க, சந்திமால் களமிறங்கினர். தரங்க ஒரு ஓட்டத்துடன் வெளியேற அணித்தலைவர் திரிமனே, சந்திமாலுடன் ஜோடி சேர்ந்தார். அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைசதம் கடந்த திரிமனே 37 பந்துகளில் 57 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சந்திமால் 33 ஓட்டங்களில் வெளியேறினார். 92 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள் என்ற திடமான நிலையில் இலங்கை அணி இருக்கும் போது, களமிறங்கிய வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 19.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்த இலங்கை அணி 133 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் ஆப்கானிஸ்தான் அணி சார்பாக மொகமட் நபி 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பின்னர் 134 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி ஆரம்பம் முதலே இலக்குகளைப் பறிகொடுத்தது. இதனால் 17.4 ஓவர்களில் 65 ஓட்டங்களுக்குள் சுருண்ட ஆப்கானிஸ்தான் அணி 68 ஓட்டங்களால் தோல்வியத் தழுவியது. அந்த அணியில் அதிகபட்சமாக நஜீப் 17 ஓட்டங்களைக் குவித்தார். இலங்கை தரப்பில், அதிகபட்சமாக ஜீவன் மெண்டிஸ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். இந்த வெற்றியினால் இலங்கைக்கு தங்கப்பதக்கம் பெறப்பட்டுள்ளது.

ஏற்கனவே மகளிர் கிரிக்கெடில் வெண்கலப் பதக்கம் வெல்லப்பட்டிருந்த நிலையில் இலங்கைக்கு இந்த வருடத்தில் கிடைக்கும் இரண்டாவது பதக்கம் இதுவாகும். இதன் மூலம், 17 ஆவது அசிய விளையாட்டுப் பதக்கப் பட்டியலில் இலங்கை 26ஆவது இடத்துக்கு முன்னேறியது. மேலும் ஆசிய விளையாட்டில் 12 வருடங்களின் பின்னர் இலங்கை பெற்றுக்கொள்ளும் முதலாவது தங்கப் பதக்கம் இதுவாகும். முன்னதாக, 2002 இல் ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க 100 மீற்றர் ஓட்டத்திலும், தமயந்தி தர்ஷா 400 மீற்றர் ஓட்டத்திலும் தங்கப் பதக்கங்களை வென்றிருந்தனர்.



(ரி)

# 16 ஆண்டுகளின் பின் இந்தியா சம்பியன்



ஆசிய விளையாட்டு ஹொக்கி போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி 16 ஆண்டுகளுக்குப் பின்னர் தங்கம் வென்று சம்பியனானது இந்திய அணி. தென்கொரியாவில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டு ஹொக்கி போட்டியில் தங்கப் பதக்கத்துக்கான இறுதி ஆட்டத்தில் இந்தியாவும், நடப்பு சம்பியன் பாகிஸ்தானும் பலப் பரீட்சையில் இறங்கின. இரு பரம எதிரிகள் மோதுவதால் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்தப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானை 4: 2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆசிய விளையாட்டில் 1958ஆம் ஆண்டு அறிமுகம் ஆன ஹொக்கியில் இந்திய அணி 1966 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில் தங்கம் வென்றுள்ளது. தற்போது 16 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தங்கம் வெல்வதற்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை இந்தியா பயன்படுத்திக் கொண்டது. 8 முறை சம்பியனான பாகிஸ்தான் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி நேரடியாக 2016ஆம் ஆண்டு நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (ரி)



# டோனி சரிப்பட்டுவரார்

டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு டோனி பொருத்தமற்றவர் என்றும் - அவரை விட விராட் கோஹ்லி சரியானவரரக இருப்பார் எனவும் முன்னாள் இந்திய அணித்தலைவர் அசாருதீன் கூறியுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் டோனி தலைமையிலான இந்திய அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து மோசமான முறையில் தொடரைப் பறிகொடுத்தது. ஏற்கனவே அந்நிய மண்ணில் டோனி தலைமையிலான அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்திருந்த நிலையில், இந்தத் தோல்வியையும் அடுத்து அணித்தலைவர் டோனிக்கு பலத்த எதிர்ப்பு வந்தது. அவர் டெஸ்ட் தொடருக்கு அணித்தலைவராக இருப்பது சரியல்ல என்ற பரவலான கருத்து வெளிவர ஆரம்பித்தது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் அசாருதீன் இதுபற்றி கூறுகையில்; சிறந்த முறையில் விளையாடினால் மட்டுமே நீண்ட காலத்துக்கு அணித்தலைவராக இருக்க முடியும். இல்லாவிட்டால் அணித்தலைவர் பதவியில் நீடிப்பது என்பது கடினமான விடயம். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியில் மாற்றம் தேவை. நான் தெரிவாளராக இருந்தால் கண்டிப்பாக டோனிக்கு பதிலாக விராட் கோஹ்லியை டெஸ்ட் போட்டிகளின் அணித்தலைவராக நியமிப்பேன். இந்திய கிரிக்கெட் சபை இதில் தலையிட்டு அணித்தலைவர் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்க வேண்டும். யாரும் சிறந்த அணித் தலைவராக அணிக்கு வந்து விடவில்லை. மற்றவர்களுக்கு வாய்ப்பளித்தால் தான் சிறந்த ஒரு அணித் தலைவரை அடையாளம் காண முடியும் என்று கூறியுள்ளார்.

குறித்த சுற்றுப்பயணத்தின் ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டத்தை டோனி தலைமையிலான இந்திய அணி வென்றதையடுத்து அதிக ஒருநாள் ஆட்டங்களில் வென்ற இந்திய அணித் தலைவர் என்ற பெருமையை அசாருதீனிடம் இருந்து டோனி தட்டிப் பறித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ரி)

# கிண்ணத்தை வெல்லப்போவது சென்னையா கொல்கத்தாவா



சம்பியன் லீக் ரி- 20 தொடரின் இறுதியாட்டத்தில் ஐ.பி.எல். அணிகளான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் இன்று இரவு 7 மணிக்கு பெங்களூர் சின்னச்சுவாமி மைதானத்தில் பலப் பரீட்சை நடத்தவுள்ளன.

இந்த வருடத்துக்கான சம்பியன் லீக் ரி- 20 ஆட்டங்கள் கடந்த மாதம் 13ஆம் திகதி தகுதிச் சுற்றுடன் ஆரம்பமானது. 17ஆம் திகதி தொடக்கம் நடைபெற்ற முதன்மைச் சுற்றுக்கள் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தன. முதன்மைச் சுற்றின் முடிவில் புள்ளிபட்டியல்களில், 'ஏ' பிரிவில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலிடத்தையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இரண்டாவது இடத்தையும், 'பி' பிரிவில் கிங்ஸ் லெவன் பன்சாப் அணி முதலிடத்தையும், கோபேர்ட் கரிக்கேன்ஸ் அணி இரண்டாமிடத்தையும் பிடித்தன. இந்நிலையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் கொல் கத்தா மற்றும் சென்னை அணிகள் வெற்றி பெற்று இன்று நடைபெறவுள்ள இறுதியாட்டத்துக்கு முன்னேறின.



தொடரில் விளையாடிய அனைத்து ஆட்டங்களிலுமே வென்றிருப்பதுடன், தொடர்ந்து 14 ஆட்டங்கள் தொடர் வெற்றிகளைப் பெற்றிருப்பதும் கொல்கத்தா அணியின் மிகப்பெரிய பலமாகும். தவிர, ஐ.பி.எல். நடப்புச் சம்பியன் என்ற வகையில் அந்த அணிக்கு மனரீதியிலும் நெருக்கடிகள் மிகக் குறைவே. ஆனால், அந்த அணியின் மிக முக்கிய பந்து வீச்சாளரான சுனில் நரைன் இறுதி யாட்டத்தில் பந்துவீச தடை விதிக்கப் பட்டிருக்கின்றமை அந்த அணிக்கு மிகப் பெரிய பின்னடைவே. சென்னை அணியைப் பொறுத்தவரை இறுதி நேரத்தில் அரையிறுதிக்கு தகுதி பெற்ற அணியாகவே விளங்குகிறது. ஆனாலும் அரை யிறுதியில் தொடரில் வலுவான அணியாக விளங்கிய பஞ்சாப்புடன் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருப்பது அந்த அணிக்கு உற்சாகம் தரும். ஏற்கனவே இந்த இரு அணிகளும் 2012ஆம் ஆண்டு ஐ.பி.எல் இறுதிப் போட்டியில் மோதியதுடன், அதில் கொல்கத்தா 5 இலக்குகளால் சம்பியனாகியது. கொல்கத்தா அணி சம்பியன் லீக் இறுதியாட்டத்துக்கு முதன்முறையாக தகுதி பெற்றிருப்பதுடன், சென்னை அணி 2010ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)



## மரண அறிவித்தல்

### தேவதாசன் உமாதாசன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாசன் உமாதாசன் 29.09.2014 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான தேவதாசன்-சிவானுகூலம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கனகம்மா தம்பதியரின் மருமகனும், மகாலட்சுமியின் (மதி) அன்புக் கணவரும், ஸரிகா, சபிதாசன், ரஸிகா ஆகி யோரின் தந்தையும், சிவதாசன், மதிதா சன், ஸ்ரீதரதாசன், லம்போதரன் ஆகியோரின் சகோதரரும், சந்திரபவாணி, எசுத்தர், ரோகினி, சிவசுந்தரலிங்கம், சந்திரவதனா, கமலாதேவி, காலஞ் சென்ற விஜயலட்சுமி மற்றும் யோகலிங்கம் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(52854)(10) தகவல் : குடும்பத்தினர்.

## மணிவிழா நாயகியை இதயம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



### செல்வி. யோகேஸ்வரி செல்லமுத்து

B.A (Hons), Dip.in.Edu

(பகுதித்தலைவர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)

யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் பகுதித் தலைவருமான செல்வி. யோகேஸ்வரி செல்லமுத்து அவர்கள் இன்று (04.10.2014) சனிக்கிழமை தனது மணி விழாவைக் கொண்டாடும் வேளையில், வாழ்வில் நலமுட னும் சிறப்புடனும் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

(C/16752)(10)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் தயாரஞ்சன்



காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும், 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தயாரஞ்சன் (தொழிநுட்ப உத்தியோகத்தர்-வானிலை அவதானிப்பு நிலையம்) நேற்று (03.10.2014) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம்-செல்வமணி தம்பதியரின் பாசமிகு மகனும், வத்சலாவின் அன்புக் கணவரும், திவியந்தனின் அன்புத் தந்தையும், தயாபரன், தயாரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கொழும்பு பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 06.10.2014 திங்கட்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்ப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே: 0777 880305/071 844 7565

(52868)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயத்தின் மாணவியான

Congratulations

### செல்வி கேதீஸ்வரக்குருக்கள் அக்ஷயா

அவர்கள் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்கு பாராட்டுகின்றோம். அவர் மேன்மேலும் உயர்சித்தி பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.



Best Wishes

வாழ்த்துவோர்:

[illegible]

# பயிற்சி ஆட்டத்தில் இந்தியா வெற்றி

பந்து வீச்சில் மிஸ்ரா அசத்த, உன்முக் சந்த் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மும்பையில் நடைபெற்ற பயிற்சி ஒருநாள் ஆட்டத்தில் இந்தியா 'ஏ' அணி மேற்கிந்திய தீவுகள் அணியை 9 இலக்குகளால் வீழ்த்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பொலார்ட் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணிக்கும், மனோஜ்திவாரிதலைமையிலான இந்திய 'ஏ' அணிக்கும் இடையிலான பயிற்சி ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 38.1 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மர்லான் சாமுவேல்ஸ் மாத்திரம் சிறப்பாக ஆடி இவர் 59 பந்துகளில் 9 நான்குகளுடன் 56 ஓட்டங்களை எடுத்தார். இவரும் 21 ஓட்டங்களைப் பெற்ற ஜேசன் ஹோல்டரும் இணைந்து 6ஆவது இலக்குக்காக 47 ஓட்டங்களைச் சேர்த்தனர். அமித் மிஸ்ரா அபாரமாக 10 ஓவர்களை வீசி 26 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்ற, கரன் சர்மா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இலக்கைத் துரத்திய இந்திய 'ஏ' அணிக்கு முரளி விஜய், உன்முக்த் சந்த் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினார். விஜய் பொறுமையாக ஆடி 26 ஓட்டங்களை எடுத்து கிமார் ரோச்சின் ஆட்டமிழந்தார். ஆனால் மறுமுனையில் உன்முக் சந் சிறப்பாக ஆடினார். 81 பந்துகளில் 11 நான்குகள் 2 ஆறுகளுடன் 79 ஓட்டங்களை உன்முக்த் சந்த் எடுக்க, கருண் நாயர் 3 நான்கு மற்றும் ஆறுடன் 36 பந்துகளில் 28 ஓட் டங்களை எடுத்து இருவரும் இறுதிவரை ஆட்ட மிழக்காமல் அணியை 9 இலக்குகளால் வெற்றி பெறச் செய்தனர். (ரி)

## தொடர்ச்சிகள்

### மொழிபெயர்ப்புகளில்

அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

"ஆங்கில மொழி பேசும் விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள், வடக்கு தமிழ் மக்களிடம் நடத்தி வரும் விசாரணைகளுக்கு மொழி பெரியளவில் தடையாக அமைந்துள்ளது. மொழி பெயர்ப்பு பிரச்சினைகள், விசாரணைகளை பலவீனப் படுத்தக் கூடிய ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. சாட்சியாளர்கள் வழங்கும் சாட்சிகள் சரியான முறையில் மொழி பெயர்ப்பு செய்யப்படாமை விசாரணைகளின் நோக்கத்தை மோசமாக பாதிக்கும்" என்றும் அந்த நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

"எந்த இடங்களில் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டன என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்று அதிகாரிகளால் ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்வி "முகாம்கள் எங்கிருக்கின்றன என்பதனை உங்களால் சொல்ல முடியுமா?" என்று மொழிபெயர்ப்பு செய்யப் பட்டது. அண்மையில் நடைபெற்ற அமர்வுகளின் போது இந்தப் பிரச்சினைகளை அவதானித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. முறையான விசாரணைகள் நடத்தப்படாவிட்டால் அது குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லி ணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய யதார்த்தமான முயற்சிகளை மோசமாக பாதிக்கும்" என்றும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (ந-5)

### பாப்பரசர்

இந்தச் சந்திப்பின்போது குறிப்பாக இலங்கையின் அண்மைக்கால சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசரின் இலங்கைப் பயணம் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டதுடன் அவரது பயணமானது ஒற்றுமையின் அடையாளமாகவும் நீதி சமாதானம் நல்லிணக்கம் நாட்டின் பொது நன்மைகளை வேண்டிநிற்கின்றவர்களுக்கான ஊக்கமளிப்பின் தருணமாகவும் வரவேற்கப்படும் என்றும் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற)

### காந்திக்கு

மைச்சர் க.வி.விக்னேஸ் வரன்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் பரப்புரையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை மாவீரன் என்று புகழ்ந்திருந்தார் வடக்கு முதலமைச்சர். ஆயினும் அவர் அண்மைக்காலமாக வெளியிட்டுவரும் கருத்துக்கள் சர்ச்சையைக் கிளப்பியுள்ளன. அது தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்ட வகையில் பதில் வழங்கினார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலிலும் அவர் தெரிவித்த கருத்து சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த முதலமைச்சர், "ஆயுதங்கள் தாங்கிய கட்சிகளுடன் சேர்ந்திருக்க முடியாது" என்று குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு ஏனைய மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளும் ஆட்சேபனை தெரிவித்தனர். இந்தக் கருத்தானது உங்கள் மீது வைத்திருக்கின்ற மதிப்பை மலினப் படுத்துவதாக இருக்கின்றது என்று அவர்கள் குறிப்பிட்டதுடன், நீங்கள் இப்படியான ஓர் அபிப்பிராயத்தை வைத்திருக்கின்றவராக இருந்திருந்தால் நிச்சயமாக தேர்தலுக்கு முன்பே எங்களுக்கு கூறியிருக்க வேண்டும்.

தேர்தல் காலத்தில் பிரபாகரன், மாவீரன் போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்து வாக்கு வேட்டையில் ஈடுபட்டிருக்கக் கூடாது. இப்படியான செயல்களைச் செய்துவிட்டு இன்று நீங்கள் இப்படிக் கூறுவது, ஒரு யோக்கியமான அரசியலாகத் தெரியவில்லை என்று சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் 'உதயன்' நிருபர் கேட்டபோது,


பிரபாகரன் குறித்த விடயத்துக்கு எனது பதில் இதுதான். மகாத்மா காந்தி, சுபாஸ் சந்திரபோஸ் மீது பெரு மதிப்பு வைத்திருந்தார். ஆனால் காந்தியின் கொள்கையும் - பார்வையும் வேறுபட்டவை" என்று அவர் தெரிவித்தார்.

(ந-5)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஆறுமுகம் வேலும்மயிலும்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)



மண்ணில் மலர்வாய்
09.03.1943
விண்ணில் உதிர்வாய்
26.09.2012

திதி: 04.10.2014

ஈராண்டாகியதோ இன்று
ஈரவிழியின்னும் காயவில்லை
வேராக இருந்தெமை வளர்த்தவரே
ஊர் நிகழ்வுகளில் இன்றும்
உருமாறா உங்கள் நினைவுகள்
இன்றும் நீர் எம்மோடு இருந்திருந்தால்
என்னும் நினைவுகளே எம்மை வழிநடத்த
உம்மை என்றும் நினைத்தபடி
உம் ஆத்மசாந்திக்காய் என்றும் பிரார்த்தித்தபடி

குடும்பத்தினர்.
திருநாவலூர், புலோலிமேற்கு, பருத்தித்துறை

## மரண அறிவித்தல்

### கந்தர் முத்துலிங்கம்

மாதகல் வடக்கு மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் முத்துலிங்கம் நேற்று (03.10.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் சுந்தரம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் செல்வராணியின் அன்புக் கணவரும், மதிவதனி (கனடா), கௌரிவதனா (கிளிநொச்சி), கடம்பஞானி, நவநீதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியசீலன் (கனடா), ஞானச்சந்திரன் (கிளிநொச்சி), கமலராஜ் ஆகியோரின் மாமனாரும், கஜீவன், குகப்பிரியன், கவிசாளினி, பவிசா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, நாகரத்தினம் மற்றும் தங்கராசா, இந்திரன், இந்திராணி, சண்முகநாதன் (பிரான்ஸ்), பேபிசரோஜா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்லையா பகீரதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர் களான அப்புத்துரை, S.V. கந்தசாமி, கந்தசாமி மற்றும் புவனேஸ்வரி, சற்குண லீலா (பிரான்ஸ்), மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.10.2014) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்கு மாதகல் போதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதகல் வடக்கு, மாதகல். (சி/18755) (10) தகவல்: குடும்பத்தினர்.

சிறுவர்களிற்கான
கேம்பிரிட்ஜ் ஆங்கிலம்
0779866409
அலிசன் DIGILITE ADVANCE LEARNING PARTNER
கொக்குவில் & இணுவில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமைபுரியும் கயிலாயபிள்ளை சதானந்தன் அவர்களின்

அன்புத் தந்தையார்

**சதாசிவம் கயிலாயபிள்ளை**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

(52872) (10)

# காத்தான்குடி நகரசபைக் கட்டடத்தில் முதல் இஸ்லாமிய நூதனசாலை

காத்தான்குடி, ஒக். 4
முஸ்லிம்களின் பாரம்பரியம் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையில் அமைக்கப்படும் முஸ்லிம்களின் முதலாவது இஸ்லாமிய நூதனசாலை மட்டக்களப்பு கல்முனை- காத்தான்குடி பிரதான வீதியில் பழைய காத்தான்குடி நகரசபை கட்டடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியில் அமைக்கப்படும் இந்த இஸ்லாமிய நூதன சாலையில் நிர்மாணப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

முழு இலங்கையையும் மையமாகக் கொண்டு காத்தான்குடி பிரதான வீதியில் அமைக்கப்பட்டு வரும் இந்த நூதனசாலையில் இஸ்லாமியர்களின் பண்டைய வாழ்க்கை முறைகள், கலாசார நடைமுறைகள், அவர்களால் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய உபகரணங்கள் மற்றும் இஸ்லாமியர்களின் உருவாக்கங்கள் பற்றிய விடயங்களை எதிர்கால சந்ததியினர் இலகுவாக அறிந்து கொள்வ தற்கு இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நூதன சாலையை நிறுவுவதற்கு கலாசார மரபுரிமைகள் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் வழங்கியுள்ள நிதியில் பல கோடி ரூபாய் பெறுமதியான இஸ்லாமிய பாரம்பரிய உபகரணங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கொள்வனவு செய்யப்பட்டு வருவதுடன் புதிய நான்கு மாடி அழகிய கட்டடத் தொகுதியும் தற்போது துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (ஓ-10)

## வீடுகளை இழந்தவர்களுக்கு கொட்டிலுக்கான பொருள்கள்

இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களினால் வீடுகளை இழந்தவர்களை மீள்குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு முறக்கொட் டாஞ்சேனையில் நடைபெற்றது.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மாவட்ட அரச அதிபர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ், மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் எம்.எம்.நஜுமுதீன், மீள்குடியேற்ற பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன்.ரவீந்திரன் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் முறக்கொட்டாஞ்சேனை மற்றும் புணானை மேற்கு கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 119 குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள், சிமெந்துப் பைகள் போன்றன வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களினால் 508 குடும்பங்கள் தமது வீடுகளை இழந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஓ-10)





### பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி
**கங்கேஸ்வரன் டர்ஜிகா**
கிளிநொச்சி
மகா வித்தியாலயத்தில்
2014 தரம் ஐந்து புலமைப்பரிசில்
பரீட்சையில் தோற்றி
179 புள்ளிகள் பெற்று பாடசாலை
மட்டத்தில் 2ஆவது இடத்தையும்
மாவட்ட மட்டத்தில் 8ஆவது
இடத்தினையும் பெற்றுக்
கொண்டதைப் பாராட்டி இவர்
மேலும் பரீட்சைகளில் உயர் சித்தி
பெற எமது இதயபூர்வமான நல்
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு,

மேலும் இவருக்கு கல்வி கற்பித்து ஊக்கமளித்த மகாவித்தியாலய அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 120, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

(47892)(10-63)


## சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் சரஸ்வதி பூஜைக்குத் தடை

### மறுக்கிறார் பிரதேச செயலர் மன்சூர்

சம்மாந்துறை, ஒக். 4
சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நவராத்திரி விழாவின் இறுதிநாளான நேற்று சரஸ்வதி பூஜை நடத்துவதற்கு பிரதேச செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டதாக சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

சரஸ்வதி பூஜை நடத்துவதற்காக இந்து சமயத்தைச்சேர்ந்த ஒவ்வொரு உத்தியோத்தர்களிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு விழா நடத்துவதற்காக மண்டபத்தை பிரதேச செயலாளரிடம் கேட்டிருந்தோம். அதற்கு அவர் அனுமதி மறுத்ததுடன் இங்கு இவ்வாறான பூஜைகள் செய்யமுடியாது எனவும் தெரிவித்தார். இந்த பிரதேச செயலகத்தில் முஸ்லிம் இனத்துக்கு உரித்தான அனைத்து நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. அதனை இந்துக்களாகிய நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் நாற்பதுக்கும் அதிகமான இந்துக்கள் பணிபுரிந்தும் சரஸ்வதி பூஜை நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்னொருவருடைய மத சுதந்திரத்தை பறித்து அவர்களுடைய கலை, கலாசாரத்தில் மாற்றத்தை கொண்டுவர முனைவதன் மூலம் மற்ற மதங்களை அவமதிக்கின்றார் பிரதேச செயலாளர்' எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் மன்சூரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்துக்களின் விழாவுக்காக நான் மண்டபம் கொடுக்கவில்லை என அவர்கள் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. அவர்கள் பூஜை நடத்துவதற்கு ஒன்றுகூடல் மண்டபத்தை கேட்டனர். ஆனால் குறித்த தினத்தில் ஒன்று கூடல் மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெற இருந்ததால் நான் கலாசார மண்டபத்தில் பூஜையை நடத்தும் படி கூறினேன். அதை ஏற்க மறுத்தவர்கள் பிரதேச செயலர் சரஸ்வதி பூஜை நடத்த தடை விதித்ததாக கூறிவருகின்றனர்' எனத் தெரிவித்தார். (ஓ-10-31)


### மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.08.2013** வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் **14.10.2014** தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/16749)(5-6-3)



### மரண அறிவித்தல்



திருமதி செல்வராணி
**துரையையா** (இளைப்பாறிய ஆசிரியை)

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி துரையையா 02.10.2014 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற S.R.துரையையா அவர்களின் அன்பு மனைவியும், அருள் (ஜேர்மனி), ஜெயந்தி, தமயந்தி (ஆசிரியை, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராஜசிங்கம், காலஞ்சென்ற தங்கராணி மற்றும் புஷ்பராணி, அரியரத்தினம், [illegible] ஜெயராணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், ஷெரின் (ஜேர்மனி), தயாளநேசன் (BOC, திருகோணமலை), குலரஞ்சன் (தென்னிந்தியத் திருச்சபை, வட்டுக்கோட்டை) ஆகியோரின் மாமியும், தபித்தா, ரைற்றஸ் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு சுண்டுக்குளியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பரி.யோவான ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **பிள்ளைகள்**
**021 222 7118,**
**077 664 2589**

12, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(52884)
(12-3-6)



### நல்லூர் பிரதேச சபை
### வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற் றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 07.10.2014 தொடக்கம் 16.10.2014 பி.ப 4.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 17.10.2014 மு.ப10.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.10.2014 பி.ப 2.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04 கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05 இக்ராட்(ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06 கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07 கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கருவப்புலம் வீதி கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08 மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ .இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | காரைக்கால் திண்மக்கழிவு முகாமைத்துவ அலகின் எல்லைச்சுவர் அமைத்தல் - கோண்டாவில். | 9620.00 | 1000.00 | M09/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

ப.வசந்தகுமார்,
தவிசாளர்.

## அறை வாடகைக்கு

மாணவர்களுக்கு அறைகள் வாடகைக்கு விடப்படும். (ஸ்ரான்லிறோட்)
(52860)
தொடர்பு : 0772752513

## விற்பனைக்கு உண்டு

MD90E-2409725
HONDA
தொடர்பு : 077 7291927

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=.
(ATTACHED BATHROOM)
Hotal Villa City 422, Galle Road, Wellawatte.
(சீ16901) (12.3.6).
TP: 072 255 2222

2 மணித்தியாலத்தில்
## கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.


## புனித செபமாலை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், ஒக். 4
பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னையின் திருநாளை முன்னிட்டு நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்குதிருச் சொரூப மாலையுடன் நற்கருணைப் பெருவிழா நடைபெறும்.

நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி பங்குத் தந்தை வணபிதா இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் நடைபெறவுள்ளது.

(ந-ரி)

## புனித செபமாலை மாதா திருநாள்

பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னையின் திருவிழா திருப்பலியானது 26.09.2014 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.அன்னையின் திருவிழாவை முன்னிட்டு இன்று(04.10.2014) சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணை பெருவிழா இடம்பெறும். நாளை (02.10.2014) ஞாயிற்றுக்கிழமை அன்னையின் திருநாள் திருப்பலியானது காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி பங்குத்தந்தை வணபிதா இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலி இடம்பெறும். திருநாள் திருப்பலியில் அனைவரும் கலந்து கொண்டு அன்னையின் அருளாசி பெற்றுச் செல்ல பங்குத்தந்தையும் பங்கு மக்களும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் பொன்னம்பலம் சிவதாஸ்

(சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகர், யாழ்ப்பாண மாவட்டம்)

தாய் போலே அன்பு கொண்டே அரவணைத்தாய்!
ஓய்வின்றி செயலாற்றி ஓய்வு பெற்றாய்...
செய்வதற்கு எதுவுமின்றித் தவிக்கின்றோம்..!
வையகத்தில் வாழ்வாங்கு வாழுமுயிர்
கொய்யவரும் கூற்றுவனை யார் தடுப்பார்?
மெய்யில்லா வாழ்க்கையிது நிலையில்லை
பொய்கலந்த கனவு என்று புரியவைத்தாய்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்

மாவட்ட நில அளவை அலுவலகம்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(52863)

## மரண அறிவித்தல்

### கமலாம்பிகை பாலசுந்தரம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பாலசுந்தரம் அவர்கள் 01.10.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான Dr. கந்தையா -முத்தாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுந்தரம் கந்தையா (பாபு SRD) வின் அன்பு மனைவியும், செந்தில்மணி (லண்டன்), சிந்தாதேவி (திருநெல்வேலி), அமலகுமார் (லண்டன்), பாலகுமார் (அவுஸ்திரேலியா), ஆனந்தகுமார் (லண்டன்), தேவ குமார் (அவுஸ்திரேலியா), கிருஷ்ணகுமார் (குட்டி-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அழகரத்தினம், காலஞ்சென்ற யோகரத்தினம் மற்றும் இளந்தேவி (சந்திரா), நளாயினி, தமயந்தி, காஞ்சனா,கபிலா (லதா) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவ சோதி, கனகாம்பிகை, சிவராஜா மற்றும் சரஸ் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், இராமநாதன், இராசநாயகம் மற்றும் பரமேஸ்வரி, யோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கீதா- சந்திரமௌலி, பிரயந்தன், சாய்சேயோன், பதிடரன்-நந்தகி, லஜீந்தினி-ரூபஜெகன், சஜீதரா, அமிர்தா-பிரபுஜீ, கவிதரன், கமீலா, ஆஞ்சனா, சாலினி, நிலேஷ், நிலோ ஷனி, மதுரா, நிஷாங்கன் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், சங்கீதா, ஹரி ஷாந் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.10.2014 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியை லண்டன் Lambeth Crematorium இல் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

750, பலாலி வீதி, திருநெல்வேலி.

தகவல்:
சிந்தாதேவி யோகரத்தினம் (மகள்)

(56287) (10)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அமரர்
### திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு



எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு அவர்களின் மறைவுத்துயரில் இன்று வரை பங்குகொண்டு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (04.10.2014) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சக்திக்கு அப்பால் மேற்படி நிகழ்வுக்கு அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களும் தயவுசெய்து கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

113, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

(52859) (10)

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணர்-சண்முகராசா



(கட்டட ஒப்பந்தகாரர்)

மயிலணி வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர்- சண்முகராசா நேற்று (03.10.2014) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர்-சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ரயில்வே உத்தியோகத்தர்)-தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும், விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபாகரன், காலஞ்சென்ற கிரிதரன் (அம்பிகை படமாடம்) மற்றும் நயிதன், அனிதா(அலுவலர், ஊழியர் நம்பிக்கை நிதியம்), டயானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதர் (பரிசாரகர், ஆயுள்வேத வைத்தியசாலை -தெல்லிப்பழை), குணசீலன் (ஐங்கரன் வீடியோ சென்ரர்) ஆகியோரின் மாமனும், திவ்வியரூபினி, வக்சாயினி, டனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, ராசகிளி மற்றும் சிவராசா, ரஞ்சினிதேவி ஆகியோரின் சகோதரனும், நாகேஸ்வரி, லிங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லதில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

தகவல்: குடும்பத்தினர்.

வரியப்புலம், சுன்னாகம்.

(52864) (10)

## மரண அறிவித்தல்



### சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம்

பலாலி கிழக்கு பலாலியைப் பிறப்பிடமாகவும் இராசவீதி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் ( முன்னாள் கண்டி ஸ்ரோர்ஸ் நடத்துநரும், சிவசக்தி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் , பலாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினரும் ) கடந்த (02.10.2014) வியாழக்கிழமை மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-சின்னபிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிஜயா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராமேஸ்வரி யின் பாசமிகு கணவரும் இராஜகிருஸ்ணன் (ராசா), இராஜமோகன், இராஜசோபனா, இராஜமனோகரன் இராஜமயூரன், இராஜஜீவா, இராஜபவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாகரன், பகீரதன், குகலினியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சின்னத்துரை, நல்லம்மா, இராசதுரை ஆகியோரின் சகோதரனும் செல்வநாயகத்தின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசவீதி,
அச்சுவேலி

T.P- 0771708661
0044 7502335790
021 3212252

தகவல்:
குடும்பத்தினர்

(52869)

## மரண அறிவித்தல்



### செல்வி அருள்தாசன் சசிவதனா

(யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி பழைய மாணவி,

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருள்தாசன் சசிவதனா நேற்று 03.10.2014) வெள்ளிக் கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் அருள்தாசன் (சுவிஸ்) நந்தினி (மட்டுவில்) ஆகியோரின் பாசமிகு மூத்த மகளும், அருள்தாசன் கோபிகாவின் (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) அன்புச் சகோதரியும், இராசதுரை, பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், குகதாசன், பத்மராணி, ஸ்ரீசாந்தகுமார் (சுவிஸ்), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், விஜந்தினி, அசோகன், குமுதினி, ரவிச்சந்திரன் (சுவிஸ்), ஸ்ரீரஞ்சினி (சுவிஸ்), நவிந்திரன் (ஜெர்மனி), கௌரி (ஜெர்மனி) ஆகியோரின் மருமகளும், சசிறேகா, தீபா, பகீரதன், விதுசன், வித்யா, பரணிகா, ஜெனகன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சுகைதா, சுஜிந்தன், சுபாஸ், சுபோதினி, கௌதமன், சுஜீபன், லாவணியா (ஜெர்மனி), சாகித்தியா, இலக்கியா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2014) ஞாயிறு காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(52866) (10)

தகவல்: குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### சுகாதார

ஏற்படும் துர்நாற்றத்தினாலும் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுவதுடன் கிணற்று நீரும் மாசடைகிறது. இதனால் இந்தப் பகுதி மக்கள் தொற்று நோய்களுக்குள்ளாகின்றார்கள்.

மக்களுக்கும் வயல் நிலயங்களுக்கும் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் குறித்து வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குத் தொடர்ந்து மக்களால் புகார் செய்யப்பட்டு வந்ததைத்தொடர்ந்து திண்மக் கழிவுகளை அந்தப் பகுதியில் கொட்டுவதற்கு பிரதேச சபை மறுத்து வருகிறது.

இந்த நீண்ட நாள் பிரச்சினைக்கு நிலையான தீர்வினைக் காண முன்வந்துள்ள வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு கடந்த வாரம் யாழ்.மாநகர சபை ஆணையாளர், செயலாளர், நல்லூர் பிரதேச சபை, வலி. தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடியது.

உள்ளூராட்சி அமைச்சு கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கூட்ட தீர்மானங்கள்

1.வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்கு கீழ்வரும் பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டன.

அ) ஒரு ஏக்கர் பிரதேசத்தை இனங்காணல்.

ஆ) அவ்விடத்தில் பதாகைகளை நாட்டி இடத்தை உரிமப்படுத்தலும், அடையாளப்படுத்தலும்.

இ)அவ்விடத்துக்கு தினமும் இரவு பகல் பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமித்தல்.

ஈ) மேற்பார்வை உத்தியோகத்தரை நியமித்தல்.

உ) கட்டண அறவீடு தொடர்பான உத்தியோகத்தரை நியமித்து கட்டணம் அறவிட நடவடிக்கை எடுத்தல்.

2.மாநகர சபைக்கு பின்வரும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டன.

அ) தெரிவுசெய்யப்பட்ட இடத்துக்கு வலைக்கம்பியிலான வேலி அமைத்துக்கொடுத்தல்.

ஏ.அவ்விடத்தில் பாதுகாப்புக் கூடம் ஒன்று அமைத்து அதற்கான சூரிய மின்குமிழ் பொருத்திக் கொடுத்தல்.

3.நல்லூர் பிரதேச சபைக்கு பின்வரும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டன.

அ.ஒதுக்கப்பட்ட இடத்தில் நிழல் தரும் தாவரங்களை நாட்டல்.

4.மாநகரசபை, நல்லூர் பிரதேச சபை என்பன தங்களினால் கொட்டப்படும் ஒரு வாகனத்துக்கு 100 ரூபா வீதம் மாதாந்தம் கணக்கிட்டு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

5.வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் இவைகள் தவிர வெளிப் பொதுமக்களினால் கொட்டப்படும் கழிவுகளுக்கும் மேற்படி கொடுப்பனவினை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

6.நல்லூர் பிரதேச சபைத் தலைவரினால் செம்மணியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கை கைவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

7. மேற்படி நடைமுறை நடைமுறைப்படுத்தும் போது அறவிடப்படும் தொகை தேவைக்கேற்றவாறு மீளாய்வு செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி முடிவுகள் யாவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கூட்டம் இனிதே நிறைவேறியது.

(த-115)

### பொது

வழங்கவேண்டும். இதற்கான விசேட ஏற்பாடுகளைத் திணைக்களங்கள் மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜாவின் சிறப்புரையைத் தொடர்ந்து செயலமர்வு இடம் பெற்றது.

செயலமர்வில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி சிவன்சுதன் வயது முதிர்தலின் சுகாதார நோக்கு என்னும்தலைப்பிலும் இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் சட்டத்தரணி கஸ்புல்லா நசீர் முதியோர் தொடர்பான சட்டங்கள் என்னும் தலைப்பிலும் உரையாற்றினர்.

(த-14-86)

### அடித்துத்

முன்தினம் மாலை மீனவர்கள் மண்டபத்தைச் சென்றடைந்தனர்.

கரை திரும்பிய மீனவர்கள் மீன் வளத்துறை அதிகாரிகள் சென்று கலந்துரையாடியபோது தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்படையினர் எம்மைக் கைது செய்யும் போது அடித்துத் துன்புறுத்தியதுடன் விளக்கமறியலின் போது அநுராதபுரம் சிறையில் தடுத்து வைத்திருந்தனர். இதன் போது தங்குமிட வசதிகளோ போதிய நீர் வசதிகளோ எமக்குப் பெற்றுக்கொடுக்க வில்லை. உண்பதற்குக் கூட பழைய உணவுகளையே எமக்குக் கொடுத்தனர்.

அத்துடன் படகுகளையும் சேதமாக்கிப் பறிமுதல் செய்துள்ளதால் எம்மால் இனித் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது-என்றனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 39 மீனவர்களும் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டு இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(த-14)

### இரண்டு

ளிடம் இந்த விடயத்தை தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்குப் பதிலாக போட்டியிடத் தயார் எனத் தெரிவிருந்த சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவின் உறுப்பினர் மாகாண சபையொன்றின் அமைச்சரொருவரே என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-22)

### வடமராட்சியில்

இந்த நிலையில் எதிர்பாராது மின்சாரம் தடைப்பட்டதால் செயற்பாடுகளுக்கான ஒளி, ஒலி அமைப்புக்கும் மின்சாரம் கிடைக்காமல் போய்விட்டது.

இதனால் மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்த ஆசிரியர்களுக்கு மனக் கஷ்டங்களும் ஏற்பட்டது.

இதேவேளை, வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது. கடந்த ஞாயிறு பகல் முழுவதும் திருத்த வேலைகளுக்காக மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

வடமராட்சியில் மின்தடை செய்யப்படும்போது பாவனையாளர்களுக்கு அந்த அறிவித்தல்களும் உரிய நேரத்தில் வழங்கப்படுதில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

(த-173)

### உணர்வுபூர்வ

பட்ட இணையப் பாதுகாப்பு தொடர்பான இணைய ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை மிகக் கிட்டிய நிகழ்வாகும்.

அதில் இலங்கையின் இணைய ஊடகங்களின் ஊடகவியலாளர்களென சுமார் 20 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்கவிருந்தனர். ஆனால் நீர் கொழும்பு பொலிசாரும், பொலிஸ் தலைமையினரும் அந்த நிகழ்வு நடைபெறவிருந்த இடத்தில் கொடுத்த நெருக்கடிகள் காரணமாக நிகழ்வு கைவிடப்பட்டது.

2015 இல் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிராக வரவிருக்கும் குரல்களுக்கும் அரசியல் எதிர்ப்புக்கும் எதிரான ஒரு பெரிய திட்டமாகவே கபே இதனைக் கருதுகின்றது. தகவல்களின் தனித்துவத்தைப் பேணிக் கொள்ளவும் அவ்வாறு செயற்படுகின்றது.

ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் உணர்ச்சி பூர்வமான விடயங்களில் பொது மக்களின் கருத்துக்களைப் பெருமளவு பதியச் செய்துள்ளன. அண்மையில் நடந்த ஒரு பெண்ணின் மீதான பொலிஸாரின் கொடுமையான தாக்குதல் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு முந்திய காலத்தில் கபே அமைப்பின் புகைப்படங்களை இணைய ஊடகங்கள் அடிப்படையாகக் கொண்டிருந்தன. செய்தி இணையத் தளங்கள் சமூக வலைத்தளங்களுக்குச் செய்திகளை வழங்கிக்கொண்டிருந்தன. அதனால் தடைசெய்யப்பட்ட இணைய ஊடகங்களின் செய்திகளுக்கும் அவை போய்ச் சேர்ந்தன - பரப்பட்டன. இவை அனைத்தும் ஜனாதிபதி தேர்தலுக்கு முந்தைய வன்முறைகளாகவே பதியப்படுகிறன.

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாதவிடத்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெறாது என கபே அமைப்பு நம்புகிறது. ஊடகவியலாளர்கள் தங்களது திறமைகளை வளர்த்துகொள்வதற்கும் அவர்கள் கைவினையில் சிறந்து விளங்குவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரங்களை உறுதி செய்யுமாறு கபே அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது-என்றுள்ளது. (த-4-ரி)

### நல்லூரில்

திருட்டு இடம்பெற்றுள்ளது. காலையிலேயே அது தொடர்பில் வீட்டுக்காரருக்குத் தெரியவந்துள்ளது.

மடிக் கணினி, 5 மோதிரங்கள், 2 சோடி காப்பு, கைத் தொலைபேசி மற்றும் 6 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(த-4)

### ஆணைக்குழு

வப் புலனாய்வாளர்களின் அதிகரித்த பிரசன்னம் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவலை வெளியிட்டுள்ளது.

சாட்சிகளை மிரட்டுவதற்கான தந்திரோபாயமாகவும், கடந்த கால வன்முறை குறித்து கருத்துத் தெரிவித்தால் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை அதிகரிப்பதற்காகவுமே இந்த நடவடிக்கைகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன என்று கருத வேண்டியுள்ளது என்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு கிளிநொச்சியில், முழங்காவில் மற்றும் பூநகரி பிரதேசங்களில் கடந்தவாரம் இடம்பெற்றது. இந்த அமர்வில் கண்காணிப்பாளர்களாகப் பங்கெடுத்திருந்த, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமர்வு தொடர்பில் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது.

"அண்மையில், முடிவடைந்த காணாமற் போனோர் குறித்த முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயற்பாடுகள் குறித்து நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். குறிப்பிட்ட ஆணைக்குழுவால் அதன் ஆணை விஸ்தரிக்கப்பட்டதற்கு ஏற்ப (போர்க் குற்ற விசாரணை) விசாரணைகளை முன்னெடுக்கும் திறன் உள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிப்பவர்களைப் பாதுகாக்க, நம்பகத்தன்மை மிக்க சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான பாதுகாப்பு பொறிமுறையை நாம் கோரியிருந்தோம். ஆனால் பூநகரியில் நடந்த அமர்வின்போது இராணுவ புலனாய்வாளர்கள் என்று கூறிக்கொண்டவர்கள் அமர்வில் பிரசன்னமாகியிருந்ததுடன் சாட்சியமளித்தவர்களை ஒளிப்படம் எடுத்தனர்.

இது தவிர இராணுவத்தினர் பலரை அமர்வு நடந்த இடத்துக்கு வெளியே காணமுடிந்தது. சாட்சியமளிக்க வருபவர்களை மிரட்டுவதற்கே இந்த தந்திரோபாயம் பின்பற்றப்பட்டது என்று நாங்கள் கருதுகிறோம். இது கடந்த கால வன்முறைகள் குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவித்தால் பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தை மேலும் அதிகரிக்கும். இது ஆணைக் குழு முன்னிலையில் வழங்கப்பட்ட சாட்சியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்"- என்று அந்த நிலையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ற-5)

### பூநகரி

பெற்ற குறித்த ஆணைக்குழு அமர்வில், இராணுவத்தினர் தலையீடு செய்தனர் என்ற ஊடகச் செய்திகள் மற்றும் ஊடக அறிக்கைகள் குறித்து ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆயினும் ஆணைக்குழு அவற்றை முற்று முழுதாக மறுக்கின்றது. "இராணுவத்தினரோ அல்லது வேறு எந்த பாதுகாப்பு தரப்பினரோ ஆணைக் குழுவின் விசாரணைகளில் தலையீடு மேற்கொண்டனர் என்பதை முற்று முழுதாக மறுக்கின்றோம். இது தொடர்பில் எந்த முறைப்பாடும் எங்களுக்கு கிடைக்கவில்லை.

எங்களது அவதானிப்பின்படி, இராணுவத்தினர் பொதுமக்களை இந்த விசாரணைகளில் கலந்து கொள்ளுமாறு ஊக்கப்படுத்தினார்கள். அதன் காரணமாக பெருமளவிலான பொது மக்கள் காணாமற் போன தமது உறவினர்கள் குறித்து ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

சில ஊடகவியலாளர்களின் ஒளிப்படங்களில், பூநகரி பிரதேச செயலகச் சுற்றாடலில் இராணுவத்தினர் நிற்கின்றார்கள். வழக்கமாகவே அவர்கள் சைக்கிளில் ரோந்து செல்பவர்கள். குறிப்பிட்ட தினத்தில், ரோந்து சென்ற ஒரு சில இராணுவத்தினர், பெருந்தொகையான மக்கள் நிற்பதைக் கண்டு செயலகத்துக்கு எதிரில் நின்றனர். இருந்த போதும், எந்த நேரத்திலும், எந்தவொரு சந்தர்பத்திலும் செயலகத்தினுள் உள் வரவும் இல்லை, சாட்சிகளுடன் பேசவும் இல்லை.

ஆணைக்குழுவின் மொழி பெயர்பாளர்களின் குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எமது அமர்வில், நாடாளுமன்ற மூத்த மொழிபெயர்ப்பாளர் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அமர்வுகளை முன்னெடுத்த மொழிபெயர்ப்பாளர், சட்ட உதவி ஆணைக்குழுவின் மூத்த மொழி பெயர்ப்பாளர் ஆகியோரையே பயன்படுத்தினோம்.

மொழி பெயர்பின் போது ஆணைக்குழு அமர்வில் தவறுகள் இருந்தாலும், சாட்சிகள் ஆணையாளர்களின் விசாரணைக்குப் பதிலளித்த பின்னர் ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர்களைச் சந்திக்கின்றார்கள். இதன் போது மொழி பெயர்பின் போதான குறைபாடுகள் சரி செய்யப்படுகின்றன" என்று ஆணைக்குழுவின் ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-5)

### கூட்டமைப்பி

தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், 'முதலமைச்சர் வேட்பாளராக நான் நிற்க வேண்டுமென்றால் கூட்டமைப்பில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் என்னை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே நிற்பேன்' என்று குறிப்பிட்டிருந்த விடயத்தை அவருக்கு ஞாபகப்படுத்தியதுடன், 'நீங்கள் கூட்டமைப்பினுடைய ஒரு பிரதிநிதியாகத்தான் கடந்த தேர்தலில் பங்குபற்றியிருந்தீர்கள், ஆகவே நீங்கள் கூட்டமைப்புக்குத்தான் உரியவர், எனவே தனியொரு கட்சியைச் சார்ந்தவராக பிரதிபலிக்கக்காமல் பொது நிலைப்பாட்டைத்தான் நீங்கள் எடுக்க வேண்டும்'- என்று முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கேட்டுக் கொண்டார்.

அதற்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், "நான் இதைக் கூறுவதையிட்டு நீங்கள் ஆத்திரப்படக் கூடாது. நான் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்ற ஆயுதமேந்திய வன்முறைக் கட்சிகளுடன் சேர்ந்திருக்க முடியாது. ஆகவேதான் நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருக்கின்றேன்" - என்று பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கேட்ட போது, "நான் அவ்வாறு தெரிவித்தேன். ஆனால் அதில் முக்கியமானதொரு வரையறை உள்ளது. எனது கொள்கை நிலைப்பாட்டின் அடிப்படையில், அரசியலில் வன்முறைப் போக்கைக் கொண்ட எந்தவொரு அமைப்புடனும் என்னால் பங்கேற்று செயற்பட முடியாது. நான் நட்புமுறை அடிப்படையில்தான் அவர்களுக்கு அவ்வாறு கூறினேன். நான் ஒவ்வொருவரையும் மதிப்புடனும், புரிந்துணர்வுடனும், சமமானவர்களாகவே கணிக்கின்றேன். நான் எந்த வகையிலான வேறுபாட்டையோ, வெறுப்பையோ அவர்கள் மீது காட்டவில்லை. வன்முறைப் போக்கைக் கொண்ட கட்சிகளைப் பின்பற்றுபவராக நான் இருக்க வேண்டும் என்று நீங்கள் நிச்சயம் எதிர்பார்க்க கூடாது"- என்று தெரிவித்தார்.

(ற-5)

### இலங்கை

ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"கொள்கை மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. மேற்குறித்த செய்தி தொடர்பில் நானும் அறிந்துகொண்டேன். இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கையில் மாற்றமெதுவும் இல்லை. இந்த நோக்கத்தை தெரியப்படுத்தும் நோக்குடனேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. நிச்சயமாக இலங்கை தொடர்பான கொள்கையில் தளர்ச்சியேற்படவுமில்லை.

இலங்கையுடனான எமது உறவு முழுமையாக வளர்ச்சி காணவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இலங்கை தனது பல தரப்பட்ட இன, மத குழுக்களுக்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்தாலே சாத்தியமாகும். இதன் காரணமாகவே இலங்கை தொடர்ந்தும் போரில் ஈடுபட்டிராத நாடு என்பதை காண்பிக்கும் விதத்திலான அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கெரி வலியுறுத்தினார்"- என்று ஜென் சகி மேலும் தெரிவித்தார்.

(ற-5)

### ஆசிரியர்,

டும். அவ்வாறு வெளியிட்டால் மாத்திரமே பதவியுயர்வுகள் வழங்க முடியும். ஆனால் சுற்றறிக்கை எதனையும் வெளியிடாது அவர் அவ்வாறு கூறுவதனை நம்பவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாது.

பல ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு பல வருடங்களாக பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை. அதனை வழங்குமாறு ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி வருகிறது. அது உட்பட பல கோரிக்கைகளை சங்கம் முன்வைத்துள்ளபோதும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை"- என்று தெரிவித்தார். (ற-4)

# தமிழரின் பூர்வீக பகுதிகளில் நெற்செய்கை ஆரம்பம்



மூதூர், ஒக்.4
தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான கங்குவேலி, முதலைமடு, ஒட்டு, படுகாடு ஆகிய இடங்களில் இந்த முறை பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வு கங்குவேலி அகஸ்திய ஸ்தாபனத்தில் பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பொதுச்செயலாளர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் உட்பட பிரதேசசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (வ-40)



நவராத்திரி விழாவை முன்னிட்டு இந்து ஆலயங்களில் மானம்பூத் திருவிழா மிகவும் பக்திபூர்வமாக நேற்று நடைபெற்றது. இதன் ஒரு அங்கமாக ஆலயங்களில் வாழைவெட்டு இடம்பெறுவது வழமையாகும். வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்கையம்மன் ஆலயத்தில் நேற்றுக் காலை வாழைவெட்டு இடம்பெற்று துர்க்கையம்மன் அழகிய சிம்ம வாகனத்தில் வெளி வீதியுலா வருகின்றார். (வ-86)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

## "தொழிற்சந்தை"

எதிர்வரும் 07.10.2014 ஆம் திகதி
மு.ப.11.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை
யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்.
அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பங்கேற்புடன் நடைபெறும்.
இத்தொழிற்சந்தையில் கலந்து கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பொன்றினை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை உரித்தாக்கிக் கொள்ளுங்கள்

தொழிற்சந்தை பார்வையிடலுக்கு
அனுமதி இலவசம்



ஏற்பாடு



இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

அத்துடன், அன்றைய தினம் மாலை 4.00 மணியிலிருந்து
யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெறும்
தென்னிந்திய பாடகர்
கலாநிதி. ட. உன்னிகிருஷ்ணன் அவர்கள்
கலந்து சிறப்பிக்கும்

## "ஹம்சத்வனி"

இன்னிசை நிகழ்ச்சியில் கலந்து இன்புறுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

"ஹம்சத்வனி" இன்னிசை நிகழ்ச்சியினை பார்வையிடுவதற்கான நுழைவுச்சீட்டினை (TICKET) கல்லூரி நுழைவாயிலில் பெற்றுக் கொள்ளலாம்

ஏற்பாடு
கலை மற்றும் கலாசார அமைச்சு,
(கலாசார அலுவல்கள் திணைக்களம்)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
மற்றும்
ஜேக்ஸ் அசோஷியேட்ஸ் தனியார் நிறுவனம்
(C/16698)

# மருத்துவமனையின் கட்டடம் நேற்று திறப்பு



மட்டக்களப்பு, ஒக்.4
மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மருத்துவமனைக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
ஜப்பான் நாட்டு அரசின் நிதியுதவியில் 'ஜெய்க்கா' என்ற திட்டத்தினூடாக 25 மில்லியன் ரூபா செலவில் 3 மாடிகளைக் கொண்டு இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையின் வைத்திய அதியட்சகர் கு.சுகுணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மண்முனை, தென் எருவில் பற்று பிரதேச செயலர் எம்.கோபாலரெத்தினம், மருத்துவமனை நலன்புரி சங்க செயலாளர் கே.பேரின்பநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டு புதிய மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.
இந்நிகழ்வில் கட்டடப் பொறியியலாளர் கே.சிவலிங்கம், களுவாஞ்சிக்குடி கிராம அலுவலர் அ.கந்தவேள், மருத்துவர்களான, ஆர்.பிறேமளா, ஆர்.அலிமா, கே.தினுக்கா, ரந்திக்க, சிப்புந்தி, டசூண், தாதிய உத்தியோகத்தர் கே.சிவசிதம்பரம், நிர்வாக உத்தியோகத்தர் கே.ஜப்பார் மற்றும், மருத்துவமனையில் நலன்புரி சங்கத்தினர் கிராம பெரியோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
புதிதாக திறந்து வைக்கப்பட்ட கட்டடத்தில் மருத்துவமனையில் நடைபெறும் அனைத்து கிளினிக் சேவைகளும் இடம்பெறவுள்ளதாக களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனை வைத்திய அத்தியட்சகர் கு.சுகுணன் கூறினார்.(வ)

# ஆள் மாறாட்டம் செய்த நபருக்கு பிணை அனுமதி

தென்மராட்சி, ஒக.4
நீதிமன்றை ஏமாற்றும் நடவடிக்கையாக ஆள் மாறாட்டம் செய்த நபரொருவரை பிணையில் விடுவிக்க சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அனுமதி வழங்கப்பட்டது.
குறித்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றில் ஆள் மாறாட்டம் செய்த குறிப்பிட்ட நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அந்த நபரை எச்சரிக்கை செய்த நீதிவான் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதித்தார்.
இதேவேளை- தனக்கு நோய் இருப்பதாகக் கூறி பல திணைக்கள அலுவலகங்களில் நிதி சேகரித்த மூதாட்டி நேற்று எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.
திணைக்கள அலுவலகங்களில் நிதி சேகரித்த மூதாட்டி சாவகச்சேரி நீதிமன்றில் நிதி சேகரித்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் விளக்க மறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# பூநகரி குளத்தை உருவாக்க முயற்சிப்பேன்

## கிளிநொச்சியில் கூறினார் அமைச்சர் தினேஷ்

கிளிநொச்சி, ஒக். 4
பூநகரி குளத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவேன் என நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கிளிநொச்சியில் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் மாவட்டத்தின் நீர்வழங்கல் வேலைத் திட்டங்கள் தொடர்பான ஆராயும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூடுதலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் கதைப்பார்கள். ஆனால் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமென்ற அக்கறை அவர்களிடம் இல்லாமல் இருக்கும் என்று ஜனாதிபதி கூட கூறுவார் தர்க்கம் செய்யுங்கள். ஆனால் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறை காட்டுங்கள் என்று கூறுவார். மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதுதான் எங்களுடைய தலையாய கடமையாகவிருக்கவேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நீர் நிலைவரங்களைப்பார் வையிட்டுள்ளோம். வரும் டிசெம்பர் மாதத்துக்குள் பல இடங்களில் தூய்மையான நீரை மக்கள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் செய்வோம். குறைபாடுகள் காணப்பட்டால் கூடுதலான நிதிகளை உருவாக்கி நீர்வழங்கல் வேலைகளை முன்னெடுப்போம்.

இந்நிகழ்வில் இரணைமடு நீர்வழங்கல் திட்டம் தொடர்பாக கூறியாகவேண்டும். இலங்கையிலேயே பெரிய நீர்வழங்கல் திட்டமாக இரணைமடு நீர்த் திட்டமுள்ளது. கடந்த முறை நான் கிளிநொச்சிக்கு வருகை தந்தபோதும் மேற்படி திட்டம் தொடர்பாகக் கதைத்திருக்கின்றேன். இதற்காக 21ஆயிரம் மில்லியன் ரூபா கடனாக நாங்கள் பெற்றிருக்கின்றோம். கிளிநொச்சி மாவட்டம் முழுவதிலும் தூய்மையான நீரை வழங்குவதற்கான திட்டத்தை வைத்துள்ளோம். இரணைமடுத் திட்டத்தைக் கிளிநொச்சி மாவட்டத்தின் நீர் வழங்கல் திட்டத்துடன் இணைத்து மேற்கொள்வதுதான் எங்களுடைய கடமையாகவுள்ளது.

அந்தத் திட்டத்தை ஆரம்பித்து மக்கள் நன்மையடையக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்துவோம்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரியில் உள்ள நீர் வளங்களில் உவர்நீர் கலக்காமல் இருப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது, சுத்தமான குடிதண்ணீரை மக்களுக்கு வழங்குவது தொடர்பாகவும் காலையில் பூநகரிக்குச் சென்று பார்வையிட்டோம். இதன் ஒரு கட்டமாக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்ட வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பூநகரி நிலைவரம் தொடர்பாக அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பித்து நிதி ஆதாரங்களைப் பெற்று எதிர்காலத்தில் பூநகரியில் குளமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவோம்- என்றார்.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்த அமைச்சர் கிளிநொச்சி அரச அதிபரைச் சந்தித்ததுடன் பூநகரிக்குப் பகுதிக்குச் சென்று மண்டைக்கல்லாறு ஏ-32 சாலையை கடக்கும் இடத்தைப் பார்வையிட்டதுடன் பின்பு பூநகரிக்குளம் அமையவுள்ள கொக்குடையான் மாழாப்பூப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டார். கிளிநொச்சிக்கு திரும்பும் வழியில் பூநகரி-பரந்தன் வீதியில் குடமுருட்டி ஆறு கடக்கும் இடத்தையும் பார்வை யிட்டதுடன் பரந்தன் சந்தியி லுள்ள நீர்த்தாங்கி, கிளிநொச்சி நகரத்தில் இரத்தினபுரம் வீதி யில் அமைக்கப்பட்டு வரும் நீர்த்தாங்கி என்பவற்றை யும் பார்வையிட்டார்.

பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரிகள், மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் எனபலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் நீர் தொடர்பாக மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் பரிசில்களை அமைச்சர் வழங்கினார். (த-18)

## மாமனிதர் குமார் நினைவுப் பேருரை இன்று மாலை

யாழ்ப்பாணம், ஒக். 4
மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் குழுவின் ஏற்பாட்டில், மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 76ஆவது பிறந்த தின ஞாபகார்த்த நினைவுப் பேருரை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரையாழ்ப்பாணம், திருமலைக் கலாமன்ற கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஞாபகார்த்த நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி க.ச.இரத்தினவேல், "ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணையும், தமிழ் மக்களின் எதிர்காலமும்" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

இதில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (த-ரி)

# கொழும்பில் எலிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவும் அபாயம்

கொழும்பு, ஒக். 4
கொழும்பு நகரம் முழுவதும் எலிக்காய்ச்சல் தீவரமாகப் பரவும் அபாயநிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை எலிகளை மலடாக்கும் அல்லது அழித்து விடும் எந்தவிதமான மருந்தும் மாநகர சபையின் சுகாதாரப் பிரிவிடம் இல்லை என மாநகர சபை உறுப்பினர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாகக் கொழும்பில் வாழும் 5 லட்சம் பேரின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்த நிலைப்பாடானது எலிக் காய்ச்சல் உயிர்கொல்லி நோய்க்குப் பிரபல காரணியொன்றாகி விடக்கூடும் என்பதால் மாநகர சபையின் இதற்குப் பொறுப்பான பிரிவுகள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கொழும்பு நகர மக்கள் கோரியுள்ளனர்.

இது குறித்து கொழும்பின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனியிடம் கேட்டபோது;

ஆறு வருடங்களுக்கு மேல் எலி கொல்லி மருந்துகள் இல்லாததால் ஒழிப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டி நேர்ந்தது. மாநகர ஆணையாளரின் பணிப்புரையின் பேரில் அவசரத் தேவையொன்றாகக் கருதி 25 லட்சம் ரூபா செலவில் 1,850 கிலோ கிராம் எலிக்கொல்லி மருந்துகளைத் தருவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன -என்றார். (த-22)

## விஜயகாந்த் கைதாகி விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 4
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சுதர்சிங் விஜயகாந்த் உட்பட உண்ணாவிரதமிருந்தவர்களில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நல்லூர் ஆலயத்துக்கு பின் வீதியிலுள்ள மடத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முதல், விஜயகாந்த் தலைமையிலான குழுவினர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உண்ணாவிரதப் போராட்டம் இரவு பகலாக மூன்று நாள்கள் முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்ட மேடைக்கு, அருகிலிருந்த வீட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றனர் என்ற குற்றச்சாட்டிலேயே இந்த மூவரையும் தாம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-4-17)

## நாகதம்பிரான் வருடாந்த திருவிழா விசேட கிரியைகளுடன் ஆரம்பம்

வடமராட்சி, ஒக். 4
சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக நாகதம்பிரான் சுவாமிகோயில் வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட கிரியைகளுடன் ஆரம்பமானது.

இந்தக் கோயிலின் சிறப்புத்திருவிழாவான கப்பல்திருவிழா எதிர்வரும்9ஆம் திகதி வியாழக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது.

போர்த்துக்கேயர் நாகர் கோவிலுக்கு வருகை தந்து இந்தக் கிராம மக்களைக் கூலிகளாகத் திருவனந்தபுரத்துக்கு அழைத்துச் செல்லக் கப்பலில் ஏற்றிய போது அதனை தடுத்து நிறுத்திய நாகதம்பிரானின் சக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்ததே கப்பல் திருவிழாவாகும்.

இந்தத் திருவிழாவுக்குக் குடாநாட்டில் மாத்திரமன்றி வெளியிடங்களில் இருந்தும் வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி பருத்தித்துறையில் இருந்து விசேட போக்குவரத்து வசதிகளும் மற்றும் குடிதண்ணீர் பாதுகாப்பு ஒழுங்களும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் திருவிழாவைத் தொடர்ந்து 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 11ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் நடைபெற்று 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமுத்திர தீர்த்தத் திருவிழாவுடன் வருடாந்த திருவிழாவும் நிறைவுபெறும். (த-173)

# நீர்கொழும்பு களப்பில் இரு சடலங்கள் மீட்பு

பமுனுகம - சேதவத்த பள்ளிக்கு அருகில் நீர்கொழும்பு களப்பு பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் பொலிஸாருக்கு கிடைத்தத் தகவலை அடுத்து ஒரு சடலம் மீட்கப்பட்டது. எலகந்த - ப்ரீதிபுர வீதியில் வசிக்கும் 41வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 2 மணியளவில் குறித்த களப்பு பகுதியில் இருந்து மற்றுமொரு சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தெஹிவளை - மல்வத்த வீதியில் வசிக்கும் 36 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாவத்த பிரதேசத்தில் உள்ள போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் மத்திய நிலையத்தில் இருந்து காணாமற்போன இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மரண விசாரணைக்கென சடலங்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படமாகிறது ஜெயாவின் வாழ்க்கை



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கைது செய்யப் பட்டு சிறையிலடைக் கப்பட்ட சம்பவம் தமிழ் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிலையில், ஜெயலலிதாவின் வாழ்க்கை கதை ஐந்து மொழிகளில் படமாக உருவாகி வருகி றது எனத் தெரிவிக்கப்படுகிறது. இப்படத்துக்கு 'அம்மா' என்று தலைப்பு வைத்துள்ளனர். பைசல் சைஃப் இயக்கும் இப்படத்தில் ஜெயலலிதா கதப்பாத்திரத்தில் ராகினி திவேதி நடிக்கிறார். கன்னடம், மலையாளப்படங்களில் நடித்தவர் ராகினி திவேதி. 'தமிழில் 'நிமிர்ந்து நில்' படத்தில் நடித்திருக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு 80 வீதம் முடிவடைந்தநிலையில் இன்னும் 15 நாள்தான் படப்பிடிப்பு உள்ளதாம். இதைத்தொடர்ந்து ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை சென்றதால், இதையும் படத்தின் இறுதிக்காட்சியில் சேர்க்க இருக்கிறார்களாம்.

Comfort comes in many flavours
சர்வதேச விமானப்பயணப் பற்றுச்சீட்டுக்கள்,
சுற்றுலா ஒழுங்கமைப்புக்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
Colombo 0114651199 | Jaffna 0214920920 | Vavuniya 0244930830

இந்தியா

| | | | |
|---|---|---|---|
| சென்னை | - 22000/= | மதுரை | - 20300/= |
| திருச்சி | - 22400/= | கொச்சின் | - 21700/= |
| One way | | Return | |
| கட்டார் | - 27200/= | சிங்கப்பூர் | - 30800/= |
| லண்டன் | - 45400/= | மலேசியா | - 32000/= |
| பிரான்ஸ் | - 45500/= | ஜேர்மனி | - 72300/= |
| டுபாய் | - 27000/= | மாலைதீவு | - 32000/= |
| கனடா | - 105700/= | சுவிஸ் | - 98000/= |
| அவுஸ்ரேலியா | - 58500/= | இத்தாலி | - 91000/= |

Nation Popular Travels & Tours
Home Delivery: 27, Lower St Andrews Place, Colombo-15. Tel: 0114375357

உதயன்
0215671111

லக்ஸ்மி ஸ்ரீட் சேவிஸ்
உலக நாடுகளுக் கான துரித பொதிகள் சேவைகள் குறைந்த கட்டணத்தில்
யாழ்ப்பாணம், ⇌ கொழும்பு, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான பொதிகள் சேவைகள்.
(உங்கள் வீடுகளில் வந்து பார்சல்கள் பெற்றுக் கொள்ளப்படும்)
118, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
☎ 076 625 5093 (சி/16733) (7.6.3)

காணி விற்பனைக்கு
மருதனார்மடம் கே.கே.எஸ் வீதியில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக 2ஆவது காணி 6½ பரப்பு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு : 0775504438

DCM
A/L 2015
சனி, ஞாயிறு 8.00 - 9.00
சனி, ஞாயிறு 9.00 - 10.00
Paper Class
சனி, ஞாயிறு 2.00 - 3.00
ஆரம்பம் – 05.10.2014

கணக்கீடு
AP.பகீரதன்
A/L 2015
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்
DCM

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.